# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2018 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத்தீர்வைகள் சட்டம்*

---

*(2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2018, மாச்சு மாதம் 23 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 116.00** **தபாற் செலவு : ரூபா 45.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *2018 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத்தீர்வைகள் சட்டம்*

[*2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.–ஓ. 68/2016*

### *இலங்கைக்குள் இறக்குமதிசெய்யப்படும் உற்பத்திப்பொருட்கள் தொடர்பாக மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைகளையும் மற்றும் எதிரீட்டுத் தீர்வைகளையும் நுண்ணாய்வு செய்வதற்கும் விதிப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்குமானதொரு சட்டம்*

*1947 ஆம் ஆண்டின் சுங்கத்தீர்வைகளும் வியாபாரமும் மீதான பொது உடன்படிக்கைக்கு (சுவிபொஉ 1947) இலங்கையானது, மூல ஒப்பந்தம் செய்கின்ற திறத்தவர்களுள் ஒன்றாக இருந்த தாதலாலும்:* *முன்னுரை.*

*அத்துடன், 1947 ஆம் ஆண்டின் சுவிபொ உடன்படிக்கையின் உரையை அடிப்படையாகக் கொண்டதும், 1994 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதத்தில் கையொப்பமிடப்பட்டதுமான 1994 ஆம் ஆண்டின் சுங்கத் தீர்வைகளும் வியாபாரமும் பற்றிய பொது உடன்படிக்கை (சுவிபொஉ 1994) மற்றவற்றுக்கிடையில், 1994 ஆம் ஆண்டின் சுங்கத்தீர்வைகளும் வியாபாரமும் பற்றிய பொது உடன் படிக்கையின் VI ஆம் உறுப்புரையையும், மானியங்களும் எதிரீட்டு வழிமுறைகளும் பற்றிய உடன்படிக்கையையும் அமுலாக்குவதன்மீதான உடன்படிக்கையை உள்ளடக்குகின்றதாதலாலும்:*

*அத்துடன், இலங்கை தடைசெய்யப்பட்ட மற்றும் செயற்படத்தகு மானியங்கள் மற்றும் மிகைப்பொருள் திணிப்பிலிருந்து உள்நாட்டுக் கைத்தொழிலைப் பாதுகாக்க உட்கருதியிருப்பதாதலாலும்:*

*அத்துடன், மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட இரு உடன்படிக்கைகளையும் இலங்கையில் அமுலாக்குவதற்காகச் சட்டவாக்க ஏற்பாடுகளைச் செய்வது உசிதமாகவுள்ளதாதலாலும்:*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

2-PL 010512-977 (2017/11)

சுருக்கப் பெயரும், நடைமுறைக்கு வரும் தேதியும.

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத்தீர்வைகள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

## பாகம் I

### மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைகள்

பொதுவான கோட்பாடு.

**2.** (அ) நுண்ணாய்வுசெய்யப்படும் உற்பத்திப்பொருள் மிகைப்பொருள் திணிப்பாகவுள்ளதெனவும்;

(ஆ) இலங்கைக் கைத்தொழிலுக்கு ஊறு விளைவிக்கப் படுகின்றதெனவும்; அத்துடன்

(இ) மிகைப்பொருள் திணிப்புக்கும் விளைவிக்கப்பட்ட ஊறுக்குமிடையே காரணம்சார் தொடர்பொன்று உள்ளதெனவும்,

இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆரம்பித்து வைக்கப்பட்டு நடாத்தப்பட்ட நுண்ணாய்வொன்றைப் பின்பற்றி பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்குமிடத்து, இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் உற்பத்திப்பொருட்களின்மீது மிகைப் பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைகள் விதிக்கப்படலாம்.

விளைவுகளின் மதிப்பீடு.

**3.** ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளிலிருந்து அதேபோன்ற உற்பத்திப் பொருட்களின் இறக்குமதிகளானவை, ஒரே நேரத்திலான மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வை நுண்ணாய்வின் விடய மாகவுள்ளவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, ஊறுள்ளதா வென்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக–

(அ) இச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பங்கள் கோப்பிடப்படுகின்றவிடத்தும்;

(ஆ) இச்சட்டத்தின் 20 ஆம் பிரிவில் குறித்துரைக்கப் பட்டவாறு ஒவ்வொரு நாட்டிலுமிருந்து இறக்குமதி செய்யப்படும் நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப் பொருள் தொடர்பாக நிலைநாட்டப்படும் மிகைப் பொருள் திணிப்பின் தொகை, ஆகக்குறைந்த அளவைப் பார்க்கிலும் அதிகமாகவுள்ளதென்றும், ஒவ்வொரு நாட்டிலுமிருந்து இறக்குமதி செய்யப்படும் நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களின் அளவு மிகக் குறைவானதாக இருக்க வில்லையென்றும் பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்குமிடத்தும்; அத்துடன்

(இ) நுண்ணாய்வுசெய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் இறக்குமதிகளினது விளைவுகளின் ஒன்றுதிரண்ட மதிப்பீடு, இறக்குமதிசெய்யப்பட்ட உற்பத்திப்பொருட்க ளுக்கிடையேயான போட்டாபோட்டி நிபந்தனைகளினதும் இறக்குமதிசெய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களுக்கும் அதேபோன்ற உள்நாட்டு உற்பத்திப் பொருளுக்கும் இடையேயான போட்டாபோட்டி நிபந்தனைகளினதும் நோக்கில் தோதானதாகவுள்ளதெனப் பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்குமிடத்தும்,

மட்டுமே இலங்கைக் கைத்தொழிலின்மீது அத்தகைய மிகை பொருளாகத் திணிக்கப்பட்ட இறக்குமதிகளின் விளைவுகளை ஒன்றுதிரண்டமுறையில் மதிப்பீடுசெய்யலாம்.

### வழமையான பெறுமதியை தாபித்தல்

*வழமையான பெறுமதியைத் தீர்மானிப்ப தற்கான அடிப்படை.*

**4.** (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கத்துக்காக, பணிப் பாளர் தலைமையதிபதி, ஏற்றுமதிசெய்யும் நாட்டின் உள்நாட்டுச் சந்தையில் பாவனைக்காக ஒதுக்கிவைக்கப்படும்போது, அதே போன்ற உற்பத்திப்பொருளுக்காகச் சாதாரண வியாபார நெறியில் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படற்பாலதான ஒப்பீட்டு விலையின் அடிப்படையில், நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப் பொருளொன்றின் வழமையான பெறுமதியைத் தீர்மானிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பணிப்பாளர் தலைமையதிபதி—

(அ) உற்பத்திப் பொருட்களானவை, ஏற்றுமதிசெய்யும் நாட்டினூடாக வெறுமனே கப்பலிலிருந்து கப்பலுக்கு மாற்றப்படுமிடத்து;

(ஆ) உற்பத்திப் பொருட்களானவை, ஏற்றுமதிசெய்யும் நாட்டில் உற்பத்திசெய்யப்படாதவிடத்து; அல்லது

(இ) ஏற்றுமதிசெய்யும் நாட்டில் அவற்றுக்காக ஒப்பீட்டு விலையெதுவும் இல்லாதவிடத்து,

உற்பத்தி நாட்டின் உள்நாட்டுச் சந்தையில் பாவனைக்காக ஒதுக்கிவைக்கப்படும்போது அதேபோன்ற உற்பத்திப்பொருளுக்காகச் சாதாரண வியாபார நெறியில் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படற்பாலதான ஒப்பீட்டு விலையின் அடிப்படையின்மீது வழமையான பெறுமதியைத் தீர்மானிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ், வழமையான பெறுமதியானது உற்பத்தி நாட்டின் அடிப்படையின்மீது தீர்மானிக்கப்படுமிடத்து, “ஏற்றுமதி செய்யும் நாடு” என்பதற்கு 5, 6, 7 மற்றும் 9 ஆகிய பிரிவுகளிலான குறிப்பீடு, உற்பத்திநாட்டுக்கான குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

*வழமையான பெறுமதியானது மூன்றாம் நாடொன்றுக்கான ஏற்றுமதி விலையை அடிப்படையாகக் கொண்டிருத்தல்.*

**5.** (1) நான்காம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏற்றுமதி செய்யும் நாட்டின் உள்நாட்டுச் சந்தையில் அதேபோன்ற உற்பத்திப் பொருளின் சாதாரண வியாபார நெறியில் விற்பனைகள் எவையும் இல்லாதவிடத்து, அல்லது குறிப்பிட்ட சந்தை நிலைமை காரணமாக, அல்லது ஏற்றுமதி செய்யும் நாட்டின் உள்நாட்டுச் சந்தையில் விற்பனைகள் குறைந்த தொகையில் இருப்பதன் காரணமாக, அத்தகைய விற்பனைகள் தகுந்த ஒப்பீட்டை அனுமதிக்காதவிடத்து, நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் வழமையான பெறுமதி —

(அ) தோதான ஏதேனும் மூன்றாவது நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படும் அதேபோன்ற உற்பத்திப் பொருளுக்காகச் சாதாரண வியாபார நெறியில் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படற்பாலதான ஒப்பீட்டு விலையாகவிருத்தல் வேண்டும்; ஆயின், அத்தகைய விலை பிரதிநிதித் துவப்படுத்தும் விலையாக இருத்தல் வேண்டும்; அல்லது

(ஆ) ஏற்றுமதிசெய்யும் நாட்டில் நிருவாக, விற்பனை செய்தல் மற்றும் பொதுச் செலவுகள் உட்பட அத்தகைய உற்பத்திப் பொருளின் உற்பத்திச்செலவாகவும் இலாபங்களுக்கான நியாயமானவொரு தொகையாகவும் இருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, ஏற்றுமதி செய்யும் நாட்டின் அல்லது தோதான மூன்றாவது நாட்டின் உள்நாட்டுச் சந்தையில் பாவனைக்காக ஒதுக்கிவைக்கப்பட்ட அதேபோன்ற உற்பத்திப்பொருளின் விற்பனைகள், அத்தகைய விற்பனைகள், குறைவானவொரு விகிதத்திலான உள்நாட்டு விற்பனைகள் தகுந்தவொரு ஒப்பிடுதலுக்கு ஏற்பாடுசெய்வதற்குப் போதிய முதன்மைநிலை வாய்ந்தவையாகவுள்ளனவெனச் சான்றானது காட்டுமிடத்து, அத்தகைய குறைவான விகிதம் ஏற்றுக்கொள்ளப் படற்பாலதாதல் வேண்டுமென்றால் அன்றி, இலங்கைக்கு நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் விற்பனைகளின் ஐந்து சதவீதத்தை அல்லது அதற்கதிகமானதை அமைக்கின்றன வாகவிருப்பின், அத்தகைய விற்பனைகள் வழமையான பெறுமதி யைத் தீர்மானிப்பதற்காகப் போதிய அளவினவாகவுள்ளனவென வழமையாகக் கருதப்படுதல் வேண்டும்.

**6.** (1) ஏற்றுமதிசெய்யும் நாட்டின் உள்நாட்டுச் சந்தையில் அதேபோன்ற உற்பத்திப்பொருளின் விற்பனைகள் அல்லது உற்பத்திச் செலவின் கூறொன்றுக்குக் குறைவான விலைகளில் (நிர்ணயிக்கப்பட்டதும் வேறுபடற்பாலதும்) மூன்றாவது நாடொன் றுக்கான விற்பனைகள், விலைகாரணமாகச் சாதாரண வியாபார நெறியில் இல்லாததாகக் கருதப்படலாம் என்பதுடன், அத்தகைய விற்பனைகள் –

*வியாபாரத்தின் சாதாரண நெறியில் இல்லாத விற்பனைகள்.*

(அ) பெருமளவுகளின் நீடித்த காலப்பகுதியொன்றினுள் (இது பொதுவாக பன்னிரெண்டு மாதங்களாகவும் ஆறு மாதங்களுக்குக் குறையாமலும் உள்ளது); அத்துடன்

(ஆ) நியாயமானவொரு காலப்பகுதியினுள் எல்லாச் செலவு களையும் அறவிடுவதற்கு ஏற்பாடு செய்யாத விலைகளில்,

செய்யப்படுகின்றனவெனப் பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்குமிடத்து மட்டுமே வழமையான பெறுமதியைத் தீர்மானிப் பதில் புறக்கணிக்கவும்படலாம் –

(2) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் நோக்கத்துக்காக, ஆகுசெலவுக்குக் குறைவான விற்பனைகள் –

(அ) கவனத்திற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களின் நிறையளித்த சராசரி விற்பனை விலை, நிறையளித்த சராசரி ஆகுசெலவுக்குக் குறைவாகவுள்ளதென; அல்லது

(ஆ) ஆகுசெலவுக்குக் குறைவான விற்பனைகளின் தொகை, கவனத்திற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களில் விற்பனைசெய்யப்பட்ட தொகையின் இருபது சதவீதத்தை அல்லது அதற்கதிகமானதைக் குறிக்கின்றதென,

நிர்ணயிக்கப்படுமிடத்து, பெருமளவுகளில் செய்யப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) விற்பனை செய்யப்படும் நேரத்தில் கூறொன்றுக்கான செலவுக்குக் குறைவான விலைகள், நுண்ணாய்வு அல்லது மீளாய்வுக் காலப்பகுதிக்குக் கூறொன்றுக்கான நிறையளித்த சராசரிச் செலவுக்கு மேலாகவுள்ளவிடத்து, பணிப்பாளர் தலைமை யதிபதி, நியாயமானவொரு காலப்பகுதியினுள் ஆகுசெலவுகள் அறவிடுவதற்கு ஏற்பாடுசெய்கின்றனவாக அத்தகைய விலைகளைக் கருதுதல் வேண்டும்.

5 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் நோக்கத்துக்காக ஆகுசெலவைக் கணக்கிடுதல்.

**7.** (1) இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, ஆகுசெலவுகளானவை, நுண்ணாய்வின் கீழுள்ள ஏற்றுமதியாளரினால் அல்லது உற்பத்தியாளரினால் பேணப்படும் பதிவேடுகளின் அடிப்படையில் பொதுவாகக் கணக்கிடப்படுதல் வேண்டும்; ஆயின் அத்தகைய பதிவேடுகள் -

(அ) ஏற்றுமதிசெய்யும் நாட்டின் பொதுவாக ஏற்றுக்கொள்ளப் பட்ட கணக்கீட்டு நெறிகளுக்கிணங்கப் பேணப்படு கின்றன; அத்துடன்

(ஆ) அதேபோன்ற உற்பத்திப்பொருளின் உற்பத்தியுடனும் விற்பனையுடனும் இணைந்துள்ள ஆகுசெலவுகளை நியாயமாக பிரதிபலிக்கின்றன.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, குறிப்பாக, தோதான கடன்தீர் நிதிமூலமாகக் கடன்குறைத்தல் மற்றும் மதிப்பிறக்கக் காலப் பகுதிகளும், மூலதனச் செலவினங்களும் ஏனைய அபிவிருத்தி ஆகுசெலவுகளுக்குமான விடுதொகைகளும் என்பவற்றை நிர்ண யித்தல் தொடர்பில் குறிப்பாக, ஏற்றுமதியாளரினால் அல்லது உற்பத்தியாளரினால் வரலாற்று முறையில் பயன்படுத்தப்பட்டுள்ள குறித்தொதுக்கல்களின் நுண்ணாய்வின்போது ஏற்றுமதியாளரி னால் அல்லது உற்பத்தியாளரினால் கிடைக்கக்கூடியதாக்கப்பட்ட ஏதேனும் சான்று உட்பட, ஆகுசெலவுகளின் முறையான குறித் தொதுக்கல் பற்றிக் கிடைக்கக்கூடிய எல்லாச் சான்றையும் கவனத் திற்கொள்ளுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழான ஆகுசெலவுக் குறித்தொதுக்கல்களில் ஏலவே பிரதிபலிக்கப்பட்டிருந்தாலொழிய, எதிர்கால அல்லது நடப்பு உற்பத்திக்கு நன்மைபயக்கின்ற அம்மீண்டுவராத ஆகுசெலவு இனங்களுக்காக அல்லது நுண்ணாய்வுக் காலப்பகுதியின்போதான ஆகுசெலவுகள் எச்சூழ்நிலைகளில் தொடக்கத் தொழிற்பாடு களினால் பாதிக்கப்படுகின்றனவோ அச்சூழ்நிலைகளுக்காக, ஆகுசெலவுகள் தோதானமுறையில் சீர்படுத்தப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) தொடக்கத் தொழிற்பாடுகளுக்காகச் செய்யப்படும் சீர்படுத்தலானது, தொடக்கக் காலப்பகுதியின் முடிவிலான ஆகுசெலவுகளை அல்லது அக்காலப்பகுதி நுண்ணாய்வுக் காலப் பகுதிக்கப்பால் நீடித்தால், நுண்ணாய்வின்போது பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியாயமான முறையில் கணக்குக்கு எடுக்கப்படக்கூடியனவான மிக அண்மையிலான ஆகுசெலவு களைப் பிரதிபலித்தல் வேண்டும்.

உற்பத்திச் செலவைத் தீர்மானித்தல்.

**8.** (1) இச்சட்டத்தின் 5 ஆம், 6 ஆம் பிரிவுகளின் நோக்கத்துக்காக, அதேபோன்ற உற்பத்திப்பொருளின் உற்பத்திச்செலவு —

(அ) ஏற்றுமதிசெய்யும் நாட்டில் நுண்ணாய்வுசெய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் உற்பத்தியில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ பொருட்களினதும் புனைவினதும் அல்லது செய்முறைப்படுத்தலினதும் ஆகுசெலவினதும்; அத்துடன்

(ஆ) (நிதிசார் ஆகுசெலவுகளும் இலாபங்களும் உட்பட) நிருவாக, விற்பனைசெய்தல் மற்றும் பொதுச் செலவு களினதும்.

மொத்தப்பணத்தொகையாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தொகைகளைத் தீர்மானித்தலானது, நுண்ணாய்வின்கீழுள்ள அல்லது மீளாய்வின் கீழுள்ள உற்பத்தியாளரினால் அல்லது ஏற்றுமதியாளரினால், ஏற்றுமதிசெய்யும் நாட்டில் அதேபோன்ற உற்பத்திப்பொருளின் சாதாரண வியாபார நெறியில் உற்பத்தியும் விற்பனைகளும் பற்றிய உள்ளபடியான தரவின் அடிப்படையின் மீதாதல் வேண்டும். அத்தகைய தொகைகளை இவ்வடிப்படையின்மீது தீர்மானிக்க முடியாதவிடத்து, தொகைகளானவை பின்வரும் அடிப்படையின் மீது தீர்மானிக்கப்படலாம் :-

(அ) உற்பத்திப்பொருட்களின் அதேபொது வகுதியினவாக, உற்பத்தி நாட்டிலுள்ள உள்நாட்டுச் சந்தையில் உற்பத்தி யும் விற்பனையும் தொடர்பில், நுண்ணாய்வின் கீழுள்ள

*அல்லது மீளாய்வின் கீழுள்ள ஏற்றுமதியாளரினால் அல்லது உற்பத்தியாளரினால் உறப்படும் அத்துடன் தேறிப் பெறப்படும் உள்ளபடியான தொகைகள்;*

*(ஆ) உற்பத்தி நாட்டின் உள்நாட்டுச் சந்தையில் அதேபோன்ற உற்பத்திப்பொருட்களின் உற்பத்தியும் விற்பனைகளும் தொடர்பில், நுண்ணாய்வுக்கு அமைய, ஏனைய ஏற்றுமதியாளர்களினால் அல்லது உற்பத்தியாளர்களினால் உறப்படும் அத்துடன் தேறிப் பெறப்படும் உள்ளபடியான தொகைகளின் நிறையளித்த சராசரி; அல்லது*

*(இ) வேறேதேனும் நியாயமான முறை; ஆயின், அவ்வாறு நிலைநாட்டப்பட்ட இலாபத்துக்கான தொகை, உற்பத்தி நாட்டிலுள்ள உள்நாட்டுச் சந்தையில் அதே பொதுவான பகுதியினவான உற்பத்திப்பொருட்களின் விற்பனைகளின் மீது ஏனைய ஏற்றுமதியாளர்களினால் அல்லது உற்பத்தியாளர்களினால் வழமையாகத் தேறிப் பெறப்படும் இலாபத்தை விஞ்சுதலாகாது.*

*(3) நுண்ணாய்வுசெய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் கணித்தமைக்கப்பட்ட பெறுமதியைக் கணிப்பிடுவதில், நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் தொடர்புபட்ட திறத்தவர்களிடையேயான அல்லது ஒருவரோடொருவர் நட்டஈட்டு ரீதியிலான ஒழுங்கேற்பாடுகளைக் கொண்டிருப்பவராகத் தோன்றுகின்ற திறத்தவர்களிடையேயானவொரு கொடுக்கல்வாங்கலிலிருந்து எழுகின்ற ஏதேனும் ஆகுசெலவை, அந்த ஆகுசெலவு, தொடர்புபட்டிராத திறத்தவர்களிடையேயான அல்லது ஒருவரோடொருவர் நட்டஈட்டு ரீதியிலான ஒழுங்கேற்பாடுகளைக் கொண்டிராத திறத்தவர்களிடையேயான ஆகுசெலவுகளுக்கு ஒப்பிடப்படற்பாலதாக இருந்தாலொழிய, பணிப்பாளர் தலைமையதிபதி புறக்கணிக்கலாம்.*

*(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் கொடுக்கல்வாங்கலொன்று புறக்கணிக்கப்பட்டு, கவனத்திற்கொள்ளப்படுவதற்காக வேறு கொடுக்கல்வாங்கல்கள் எதுவும் இல்லாதிருப்பின், (1) ஆம் உட்பிரிவின்கீழ் கவனத்திற்கொள்ளப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட தொகைகளைத் தீர்மானித்தலானது, கொடுக்கல்வாங்க*

லானது தொடர்புபட்டிராத திறத்தவர்களிடையே அல்லது நட்ட ஈட்டுரீதியிலான ஒழுங்கேற்பாடுகள் இல்லாதுள்ள திறத்தவர் களிடையே செய்யப்பட்டிருப்பின் தொகைகள் என்னவாகவிருந் திருக்கும் என்பது பற்றிக் கிடைக்கக்கூடியனவாகவுள்ள நிகழ்வு களின் அடிப்படையின்மீதாதல் வேண்டும்.

ஏற்றுமதி விலை.

**9**. (1) நுண்ணாய்வுசெய்யப்பட்ட உற்பத்திப்பொருளொன்றின் ஏற்றுமதி விலையானது, ஏற்றுமதிசெய்கின்ற நாட்டிலிருந்து இலங்கைக்கு ஏற்றுமதிக்காக விற்பனைசெய்யப்படும்போது, நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப் பொருளுக்காக உண்மையாகச் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படற்பாலதான விலையாதல் வேண்டும்.

(2) ஏற்றுமதி விலையெதுவும் இல்லாதவிடத்து அல்லது ஏற்றுமதி யாளருக்கும் இறக்குமதியாளருக்கும் அல்லது மூன்றாம் திறத்தவ ரொருவருக்கும் இடையேயான இணைப்பொன்று காரணமாக அல்லது நட்டஈட்டுரீதியிலான ஒழுங்கேற்பாடொன்று காரணமாக ஏற்றுமதி விலை நம்பகமற்றதெனப் பணிப்பாளர் தலைமையதி பதிக்குத் தோன்றுமிடத்து, ஏற்றுமதி விலையானது —

(அ) இறக்குமதிசெய்யப்பட்ட உற்பத்திப்பொருட்கள் சுயேச்சை யான வாங்குநரொருவருக்கு முதன் முதலாக எவ்விலைக்கு மீளவிற்பனை செய்யப்படுகின்றனவோ அவ்விலையின் அடிப்படையின்மீது; அல்லது

(ஆ) உற்பத்திப்பொருட்களானவை சுயேச்சையான வாங்கு நரொருவருக்கு மீளவிற்பனைசெய்யப்படாவிடின் அல்லது இறக்குமதிசெய்யப்பட்டவாறான நிலைமையில் மீள்விற்பனை செய்யப்படாவிடின், பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நியாயமான அடிப்படையின்மீது,

கணித்தமைக்கப்படலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்டமுறையில் ஏற்றுமதி விலையானது கணித்தமைக்கப்படின், நுண்ணாய்வு

செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் இறக்குமதிக்கும் மீள் விற்பனைக்கும் இடையே உறப்படும் செலவுக்காகக் விடுதொகை யளிக்கப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ், பணிப்பாளர் தலைமையதிபதி, உற்பத்தி நாட்டின் அடிப்படை யின்மீது வழமையான பெறுமதியைத் தீர்மானிக்குமிடத்து, ஏற்றுமதி விலையானது, உற்பத்தி நாட்டில் ஏற்றுமதிக்காக விற்பனை செய்யப்படும்போது நுண்ணாய்வுசெய்யப்பட்ட உற்பத்திப்பொரு ளுக்காக உண்மையில் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படற்பால தான விலையாக இருத்தல் வேண்டும்.

வழமையான பெறுமதியையும் ஏற்றுமதி விலையையும் ஒப்பிடுதல்.

**10**. (1) ஏதேனும் நுண்ணாய்வுசெய்யப்பட்ட உற்பத்திப்பொரு ளின் ஏற்றுமதி விலைக்கும் வழமையான பெறுமதிக்கும் இடையே பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியாயமான ஒப்பீடொன்று செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒப்பீடு, வியாபாரத்தின் அதேமட்டத்தில் பொதுவாக முன்னிருந்த விலையின் மட்டத்தில், அத்துடன் சாத்தியமாகக் கூடியவரை, அதே நேரத்தில் செய்யப்பட்ட விற்பனைகள் தொடர்பில் செய்யப்படுதலும் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் வழமையான பெறுமதியையும் ஏற்றுமதி விலையையும் ஒப்பிடுகையில், பின்வருவனவற்றுக்கு ஒவ்வொரு விடயத்திலும் அதன் குற்றநற்றுக்களின்மீது உரிய விடுதொகை யளிக்கப்படுதல் வேண்டும் :-

(அ) விலை ஒப்பீட்டுத்தன்மையைப் பாதிக்கின்ற வித்தி யாசங்கள்;

(ஆ) விற்பனை நியதிநிபந்தனைகள், வரிவிதித்தல், வியாபார மட்டங்கள், அளவுகள், இயற்பொருள்சார் பண்புகள் என்பவற்றிலான வித்தியாசங்கள்; அத்துடன்

(இ) விலை ஒப்பீட்டுத்தன்மையைப் பாதிக்கின்றதாக அக்கறை கொண்டுள்ள திறத்தவர்களினால் எடுத்துக் காட்டப்பட்ட வேறு எவையேனும் வித்தியாசங்கள்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, (2) ஆம் உட்பிரிவின்கீழ் செயலாற்றும்போது, செய்யப்படும் சீர்ப்படுத்துதல்களில் இரட்டிப் பெதுவும் நடைபெறாதிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(4) ஏற்றுமதி விலையானது, இச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் கணித்தமைக் கப்படும் விடயங்களில், இறக்குமதிக்கும் மீள்விற்பனைக்கும் இடையே உறப்பட்ட தீர்வைகளும் வரிகளும் உட்பட ஆகுசெலவுகளுக்கான விடுதொகையளிப்புகளும், இலாபம் திரளுதலுக்கான நியாயமானவொரு தொகையும் அளிக்கப்படலாம் என்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதி, விலை ஒப்பீட்டுத் தன்மை பாதிக்கப்பட்டுள்ளவிடத்து, அப்பந்தியின்கீழ் கணித்த மைக்கப்பட்ட ஏற்றுமதி விலையின் வியாபார மட்டத்துக்குச் சம மான வியாபார மட்டமொன்றில் வழமையான பெறுமதியை நிர்ணயித்தலும் வேண்டும், அல்லது இப்பிரிவின்கீழ் அதிகார மளிக்கப்பட்டவாறு உரிய விடு தொகையளிப்புகளைச் செய்தலும் வேண்டும்.

(5) நியாயமானவோர் ஒப்பீடுசெய்யப்படுவதனை உறுதிப்படுத்து வதற்கு, பணிப்பாளர் தலைமையதிபதி சம்பந்தப்பட்டுள்ள திறத்தவர்களுக்கு அவர்களிடமிருந்து தேவைப்படுத்தப்படும் தகவலைச் சுட்டிக்காட்டுதல் வேண்டுமென்பதுடன், சம்பந்தப்பட்ட திறத்தவர்களின்மீது ஏதேனும் நியாயமற்ற எண்பிப்பதற்கான பொறுப்பைச் சுமத்துதலுமாகாது.

ஒப்பீட்டு முறைகள்.

**11.** (1) பத்தாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, மிகைப்பொருள் திணிப்பு விளிம்பு உள்ளமையானது, நிறையளித்த சராசரி வழமையான பெறுமதியை, ஒப்பிடப்படற்பாலனவான எல்லா ஏற்றுமதிக் கொடுக்கல்வாங்கல்களினதும் விலைகளின் நிறை யளித்த சராசரியுடன் ஒப்பிடுவதன் அடிப்படையின்மீது அல்லது கொடுக்கல்வாங்கலுக்குக் கொடுக்கல்வாங்கல் என்ற அடிப்படை யின்மீது வழமையான பெறுமதியையும் ஏற்றுமதி விலைகளையும் ஒப்பிடுவதன்மூலம் பொதுவாக நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிறையளித்த சராசரி என்ற அடிப்படையின்மீது நிர்ண யிக்கப்படும் வழமையான பெறுமதியொன்று, பணிப்பாளர் தலைமையதிபதி, வெவ்வேறு கொள்வனவுகாரர்களுக்கு,

பிராந்தியங்களுக்கு அல்லது காலகட்டங்களுக்கு இடையே குறிப்பிடத் தக்கவகையில் வேறுபடும் ஏற்றுமதி விலைகளின் வடிவமைப்பைக் காண்பாராயின், தனிப்பட்ட ஏற்றுமதிக் கொடுக்கல்வாங்கல்களின் விலைகளுக்கு ஒப்பிடப்படலாம். நிறையளிக்க சராசரிக்கு நிறையளித்த சராசரி அல்லது கொடுக்கல்வாங்கலுக்குக் கொடுக்கல் வாங்கல் என்ற ஒப்பிடுகையைப் பயன்படுத்துவதன்மூலம், அத்தகைய வேறுபாடு தோதான முறையில் ஏன் கணக்குக்கு எடுக்கப்பட முடியா தென்பதை அத்தகைய விடயங்களில் விளக்குவது பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

நாணய மாற்றுகை.

**12**. (1) பத்தாம், 11 ஆம் பிரிவுகளின்கீழ் வழமையான பெறுமதியையும்ஏற்றுமதி விலையையும்ஒப்பிடுதலானது நாணயங்களின் மாற்றுகையைத் தேவைப்படுத்துமிடத்து, அம்மாற்றுகையானது, (3) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளுக்கமைய, விற்பனைத் தேதியன்றுள்ள செலாவணி வீதத்தைப் பயன்படுத்துவதன் மூலம் செய்யப்படுதல் வேண்டும்.

(2) விற்பனைத் தேதியானது, பொதுவாக ஒப்பந்தத்தேதியாக, கொள்வனவுக் கட்டளைத் தேதியாக, கட்டளை உறுதிப்படுத்துகைத் தேதியாக அல்லது அனுப்புபொருட்பட்டியல் தேதியாக, இவற்றுள் எது ஏற்றுமதி செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் விற்பனையினது முக்கியமான நியதிகளை நிர்ணயிக்கின்றதோ, அதுவாக இருத்தல் வேண்டும்.

(3) ஓராம் அல்லது (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஓர் ஏற்றுமதி விற்பனை தொடர்பாக முன்னோக்கிய செலாவணி வீதமொன்று பயன்படுத்தப்படும்போது, பணிப்பாளர் தலைமையதிபதி, தொடர்புபட்ட எல்லாக் கொடுக்கல்வாங்கல்களுக் காகவும் முன்னோக்கிய விற்பனையிலான செலாவணி வீதத்தைப் பயன்படுத்துதல் வேண்டும்.

(4) (அ) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட மதிப்பீடு நாணயங்களின் மாற்றுகையைத் தேவைப்படுத்து மிடத்தும்; அத்துடன்

(ஆ) அந்த நாணயங்களுக்கு இடையேயான செலாவணி வீதம், குறுகியகால ஏற்றஇறக்கங்களுக்குட்பட்டுள்ள விடத்தும்,

பணிப்பாளர் தலைமையதிபதி, அந்த ஒப்பீட்டின் நோக்கங்களுக் காக, அந்த ஏற்ற இறக்கங்களைப் புறக்கணித்தல் வேண்டும்.

(5) (அ) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒப்பீடு, நாணயங்களின் மாற்றுகையைத் தேவைப்படுத்து மிடத்தும்; அத்துடன்

(ஆ) அந்த நாணயங்களுக்கிடையேயான செலாவணி வீதம், நுண்ணாய்வுக் காலப்பகுதியின்போது நிலைபேறான அசைவொன்றுக்குட்பட்டுள்ள தெனப் பணிப்பாளர் தலைமையதிபதி திருப்திப் படுமிடத்தும்.

பணிப்பாளர் தலைமையதிபதி, நிலைபேறான அசைவைப் பிரதிபலிக்கும்வகையில், ஏற்றுமதியாளர்கள் தமது ஏற்றுமதி விலைகளைச் சீர்படுத்துவதற்கு அவர்களுக்கு அறுபது நாட்களுக்குக் குறையாத கால அவகாசத்தை அனுமதித்தல் வேண்டும்.

தனிப்பட்ட மிகைப் பொருள் திணிப்பு விளிம்புகள்.

**13.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி, விதியென்ற வகையில், நுண்ணாய்வுசெய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் ஒவ்வோர் அறியப்பட்ட ஏற்றுமதியாளருக்காகவும் உற்பத்தியாளருக்காகவும் தனிப்பட்ட மிகைப்பொருள் திணிப்பு விளிம்பொன்றைத் தீர் மானித்தல் வேண்டும்.

(2) ஒவ்வோர் அறியப்பட்ட ஏற்றுமதியாளருக்காகவும் அல்லது உற்பத்தியாளருக்காகவும், தனிப்பட்ட மிகைப்பொருள் திணிப்பு விளிம்பொன்றைத் தீர்மானிப்பதனைச் செயல்முறைக்குகந்த தற்றதாக்கும் வகையில் ஏற்றுமதியாளர்களினதும், உற்பத்தியாளர் களினதும், இறக்குமதியாளர்களினதும் எண்ணிக்கை அல்லது நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் வகைகள் அவ்வளவு பெரிதாகவுள்ளவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, ஒன்றில் தெரிவுசெய்யப்படும் நேரத்தில் பணிப்பாளர் தலைமை

யதிபதிக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள தகவலின் அடிப்படையின்மீது புள்ளிவிபரரீதியில் செல்லுபடியாகவுள்ள மாதிரிகளைப் பயன்படுத்துவதன்மூலம், அக்கறைகொண்டுள்ள திறத்தவர்களின் அல்லது நுண்ணாய்வுசெய்யப்பட்ட உற்பத்திப்பொருட்களின் நியாயமானவோர் எண்ணிக்கைக்கு அல்லது நியாயமானமுறையில் நுண்ணாய்வுசெய்யப்படக்கூடிய சம்பந்தப்பட்ட நாட்டிலிருந்தான ஏற்றுமதிகளினது தொகையின் மிகப்பெரிய நூற்றுவீதத்துக்குப் பரிசோதனையை வரையறுக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களின், உற்பத்தியாளர்களின், இறக்குமதியாளர்களின் அல்லது உற்பத்திப் பொருட்களினது வகைகளின் ஏதேனும் தெரிவானது, சம்பந்தப்பட்ட ஏற்றுமதியாளர்களின், உற்பத்தியாளர்களின் அல்லது இறக்குமதியாளர்களின் கலந்தாலோசனையுடனும் அவர்களின் சம்மதத்துடனும் தெரிவு செய்யப்படுவது விரும்பத்தக்கதாதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, இப்பிரிவின்கீழான பரிசோதனையை வரையறுத்துள்ளவிடத்து, நுண்ணாய்வின்போது அவசியமான தகவல் கவனத்துட்கொள்ளப்படுவதற்காக உரிய நேரத்தில் அத்தகவலைத் தன்னிச்சையாகச் சமர்ப்பிக்கின்ற எவரேனும் ஏற்றுமதியாளருக்கான அல்லது உற்பத்தியாளருக்கான தனிப்பட்ட மிகைப்பொருள் திணிப்பு விளிம்பொன்றை அவர் எவ்வாறாயினும் தீர்மானித்தல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், தனிப்பட்ட பரிசோதனைகள் பணிப்பாளர் தலைமையதிபதியின்மீது தகாதமுறையில் சுமையிடுவனவாகவும் நுண்ணாய்வை உரியநேரத்தில் பூர்த்திசெய்வதனைத் தடுக்கின்றனவாகவும் இருக்கும் வகையில் ஏற்றுமதியாளர்களின் அல்லது உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை அவ்வளவு பெரியதாகவுள்ளவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி தன்னிச்சையாக செயலூக்கங்களின் அடிப்படையின்மீது தனிப்பட்ட மிகைப்பொருள் திணிப்பு விளிம்பொன்றைத் தீர்மானிப்பதற்கு மறுக்கலாமென்பதுடன், பரிசோதனையை மாதிரியிலுள்ள ஏற்றுமதியாளர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் வரையறுக்கலாம்.

**நுண்ணாய்வை ஆரம்பித்து வைத்தல்**

எழுத்திலான விண்ணப்பம் ஒன்று தேவைப்படுதல்.

**14.** (1) பத்தொன்பதாம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் எழுத்திலான விண்ணப்ப மொன்று இலங்கைக் கைத்தொழில் ஒன்றினால் அல்லது அதன் சார்பில், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணத் துடன் சேர்த்துச் செய்யப்படுவதன்மேல், இச்சட்டத்தின் இப் பாகத்தின்கீழான நுண்ணாய்வொன்று ஆரம்பித்துவைக்கப்படுதல் வேண்டும்.

(2) விண்ணப்பங்களானவை, பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினவான பிரதிகளில் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக ஒன்றில், விண்ணப்ப மொன்றுக்கான ஆதரவை அல்லது எதிர்ப்பை வெளிப்படுத்தி, எந்த இலங்கை உற்பத்தியாளர்களின் கூட்டுச்செய்பொருள் ஆக்க அளவு இலங்கைக் கைத்தொழிலின் அப்பாகத்தினால் உற்பத்திசெய் யப்பட்ட அதேபோன்ற உள்நாட்டு உற்பத்திப்பொருளின் மொத்த உற்பத்தியின் ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்டதாக அமைகின்றதோ அந்த இலங்கை உற்பத்தியாளர்களினால் அத்தகைய விண்ணப்பம் ஆதாரப்படுத்தப்படின், அத்தகைய விண்ணப்பம், "இலங்கைக் கைத்தொழிலினால்" அல்லது அதன் சார்பில் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், விண்ணப்பத்துக்குத் தமது ஆதரவை வெளிப்படுத்தும் அந்த உற்பத்தியாளர்கள் இலங்கைக் கைத்தொழிலினால் உற்பத்தி செய்யப்பட்ட அதேபோன்ற உள்நாட்டு உற்பத்திப்பொருளின் மொத்த உற்பத்தியின் இருபத்தைந்து சதவீதத்துக்குக் குறையா தோராகக் கணக்கிடப்படுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், விதிவிலக்கானமுறையில் பெரும் எண்ணிக்கையினரான உற்பத்தி யாளர்களை உட்படுத்துகின்ற துணுக்காக்கப்பட்ட கைத்தொழில் களின் விடயத்தில், பணிப்பாளர் தலைமையதிபதி, புள்ளிவிபர

ரீதியிலான செல்லுபடியுள்ள மாதிரிப்படுத்தல் தொழினுட்பங் களைப் பயன்படுத்துவதன்மூலம், ஆதாரத்தையும் எதிர்ப்பையும் தீர்மானிக்கலாம்.

**15.** (1) பதினான்காம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான விண்ணப்பப்படிவமொன்று, பின்வரும் கருமங்களின்மீது விண்ணப்பகாரருக்கு நியாயமானமுறையில், கிடைக்கக்கூடியவாறான அத்தகைய தகவலைச் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுசெய்தல் வேண்டும்:- தகவல்.

(அ) விண்ணப்பகாரரின் பெயரும், முகவரியும், தொலைபேசி இலக்கமும்;

(ஆ) விண்ணப்பகாரரினால் உற்பத்திசெய்யப்பட்ட அதேபோன்ற உள்நாட்டு உற்பத்திப்பொருளின் தொகையும் பெறுமதியும் பற்றியவொரு விபரணமும்;

(இ) இலங்கைக் கைத்தொழிலின் அதேபோன்ற உற்பத்திப் பொருளின் மற்றெல்லா அறியப்பட்ட உற்பத்தியாளர்களின் பெயர்களும், முகவரிகளும், தொலைபேசி இலக்கங்களும் உட்பட, விண்ணப்பமானது எந்த இலங்கைக் கைத்தொழிலினால் அல்லது அதன் சார்பில் செய்யப்படுகின்றதோ அந்த இலங்கைக் கைத்தொழிலின் அடையாளமும், விண்ணப்பகாரருக்குக் கிடைக்கக்கூடிய அளவுக்கு, அத்தகைய அறியப்பட்ட உற்பத்தியாளர்களினால் கணக்குக்காட்டப்பட்ட அதேபோன்ற உற்பத்திப் பொருளின் தொகையும் பெறுமதியும் பற்றியவொரு விவரணமும்;

(ஈ) உற்பத்திப்பொருளின் தொழினுட்பப் பண்புகளும் பயன்பாடுகளும் அதன் சுமுகமாக்கப்பட்ட உணவுப் பொருள் விவரணமும் குறியிடுதல் முறைமை வகுப்பாக்கமும் உட்பட, மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்டதாகச் சார்த்தப்பட்ட உற்பத்திப்பொருளின் பூரணமானவொரு விவரணமும்;

(உ) *மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்டதாகச் சார்த்தப்பட்ட உற்பத்திப்பொருள் எந்த நாட்டில் தயாரிக்கப்படுகின்றதோ அல்லது உற்பத்திசெய்யப்படுகின்றதோ அந்த நாட்டின் பெயரும், தயாரிப்பு அல்லது உற்பத்தி நாடல்லாத வேறு ஒரு நாட்டிலிருந்து அது இறக்குமதி செய்யப்படின், உற்பத்திப்பொருளானது எந்த இடைநிலை நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றதோ அந்த இடைநிலை நாடும்;*

(ஊ) *மிக அண்மையிலான பன்னிரெண்டு மாதக் காலப்பகுதியின்போது, மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்டதாகச் சார்த்தப்பட்ட உற்பத்திப்பொருளை விற்பனை செய்பவரென விண்ணப்பகாரர் நம்புகின்ற ஒவ்வோராளினதும் பெயரும் முகவரியும், அவ்வாள் கணக்குக்காட்டிய இலங்கைக்கான மொத்த ஏற்றுமதிகளின் விகிதாசாரமும்;*

(எ) *ஏற்றுமதி அல்லது உற்பத்திநாட்டின் உள்நாட்டுச் சந்தையில் பாவனைக்காக ஒதுக்கிவைக்கப்படும்போது சம்பந்தப்பட்ட உற்பத்திப்பொருள் எவ்விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றனவோ அவ்விலைகள் மீதான தகவலும் அல்லது தோதானவிடத்து, ஏற்றுமதி அல்லது உற்பத்திநாட்டிலிருந்து மூன்றாம் நாடொன்றுக்கு உற்பத்திப்பொருளானது எவ்விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றதோ அவ்விலைகள்மீதான அல்லது மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்டதாகச் சார்த்தப்பட்ட உற்பத்திப்பொருளின் கணித்தமைக்கப்பட்ட பெறுமதியின் மீதான தகவலும்;*

(ஏ) *ஏற்றுமதி விலைகள்மீதான அல்லது தோதானவிடத்து, மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்டதாகச் சார்த்தப்பட்ட உற்பத்திப்பொருள் எந்த விலைகளில் இலங்கையிலுள்ள சுயேச்சையான வாங்குநரொருவருக்கு முதன்முதலாக விற்பனைசெய்யப்படுகின்றதோ அந்த விலைகள் மீதான, அத்துடன் இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக எவையேனும் சீர்ப்படுத்தல்கள் மீதான தகவலும்; அத்துடன்*

(ஐ) இச்சட்டத்தின் 76 ஆம் பிரிவிலும், 77 ஆம் பிரிவின் (1) ஆம், (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளிலும், 78 ஆம் பிரிவிலும் நிரற்படுத்தப்பட்டவைபோன்று, இலங்கைக் கைத்தொழிலின் நிலைமையின் மீது தொடர்பு கொண்டுள்ள இயைபான காரணிகளினாலும் சுட்டிகளினாலும் எடுத்துக்காட்டப்பட்டவாறு, மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்டனவாகச் சார்த்தப்பட்ட இறக்குமதிகளின் தொகையினது படிமுறை வளர்ச்சிமீதான, இலங்கைச் சந்தையில் அதேபோன்ற உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின்மீது இவ்விறக்குமதிகளின் பயன்மீதான மற்றும் இலங்கைக் கைத்தொழிலின்மீது இறக்குமதிகளின் விளைவான தாக்கம்மீதான தகவல்; அத்துடன் 77 ஆம் பிரிவின் (4)ஆம், (5) ஆம், (6) ஆம் மற்றும் (7) ஆம் உட்பிரிவுகளில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு காரணஞ்சார் தொடர்பொன்று உள்ளமைமீதான தகவலும்.

*விண்ணப்பத்தைப் பிரசித்தப் படுத்துதல்.*

**16.** (1) பணிப்பாளர் தலைமையதிபதியும், அமைச்சரும், நுண்ணாய்வொன்றை ஆரம்பித்துவைப்பதற்கான முடிபொன்று செய்யப்பட்டிருந்தாலொழிய, 14 ஆம் பிரிவின்கீழ், நுண்ணாய்வொன்றை ஆரம்பித்துவைப்பதற்கான விண்ணப்பத்துக்கு ஏதேனும் பிரசித்தம் கொடுக்கப்படுவதனைத் தவிர்த்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்கின்ற விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல், அத்தகைய நிகழ்வுபற்றிச் சம்பந்தப்பட்ட ஒவ்வோர் ஏற்றுமதிசெய்கின்ற நாட்டின் அரசாங்கத்துக்கும் உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

*விண்ணப்பமொன்றை மீளப்பெறுதல்.*

**17.** பதினான்காம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று–

(அ) நுண்ணாய்வொன்று ஆரம்பித்துவைக்கப்படுவதற்கு முன்னர் எந்நேரத்திலும் மீளப்பெறப்படலாம் இவ்விடயத்தில் அது செய்யப்பட்டிராததாகக் கருதப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) நுண்ணாய்வொன்று ஆரம்பித்துவைக்கப்பட்ட பின்னர் எந்நேரத்திலும் மீளப்பெறப்படலாம் இவ்விடயத்தில் பணிப்பாளர் தலைமையதிபதி, இலங்கையின் பொருளாதார நலனுக்காக அதனைத் தொடர்ந்து நடாத்த வேண்டுமென அவர் தீர்மானித்தாலொழிய, வழிமுறைகளின்றி நுண்ணாய்வை முடிவுறுத்தல் வேண்டும்.

ஆரம்பித்து வைப்பதற்கான முடிபு.

**18.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி, விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட சான்றின் செம்மையையும் போதுமாந்தன்மையையும் பரிசோதனைசெய்து, நுண்ணாய்வொன்றை ஆரம்பித்து வைப்பதனை நியாயப்படுத்துவதற்குப் போதிய சான்று உள்ளதாவென்பதைத் தீர்மானித்தல் வேண்டும். முடிபொன்றைச் செய்வதில் பணிப்பாளர் தலைமையதிபதி, அவசியமானவிடத்து, விண்ணப்பகாரரிடமிருந்து மேலதிகத் தகவலை நாடலாம்.

(2) (அ) விண்ணப்பமானது இலங்கைக் கைத்தொழில் ஒன்றினால் அல்லது அதன் சார்பில் செய்யப்படுகின்றது என்றும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் கருத்துக்குட்பட்ட, மிகைப்பொருள் திணித்தல், ஊறு மற்றும் காரணஞ்சார் தொடர்பு பற்றிப் போதிய சான்று உள்ளது என்றும்,

பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்குமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, விண்ணப்பம் பெறப்பட்டதிலிருந்து நாற்பது நாட்களினுள் நுண்ணாய்வை ஆரம்பிப்பதா இல்லையா என முடிவு செய்தல் வேண்டும்.

சுயமாக ஆரம்பித்து வைத்தல்.

**19.** அமைச்சர், விசேட சூழ்நிலைகளில், நுண்ணாய்வொன்றை ஆரம்பித்து வைப்பதற்காக இலங்கைக் கைத்தொழிலினால் அல்லது அதன் சார்பில் செய்யப்படும் விண்ணப்பமொன்று செய்யப்படுவதனைத் தேவைப்படுத்தாமல்–

(அ) நுண்ணாய்வொன்றை ஆரம்பித்துவைப்பதனை நியாயமாக்குவதற்கு, இச்சட்டத்தின் கருத்துக்குள் மிகைப் பொருள் திணித்தல், ஊறு மற்றும் காரணஞ்சார் தொடர்பு பற்றிப் போதிய சான்றைப் பணிப்பாளர் தலைமையதிபதி அமைச்சருக்குச் சமர்ப்பிக்குமிடத்தும்; அத்துடன்

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதி, கிடைக்கக்கூடியதாக வுள்ள சான்றின் அடிப்படையின்மீது ஆரம்பித்து வைத் தலை விதந்துரைக்குமிடத்தும்.

அத்தகைய நுண்ணாய்வை ஆரம்பித்துவைக்கும்படி பணிப்பாளர் தலைமையதிபதியைப் பணிக்கலாம்.

*குறைந்தளவிலான இறக்குமதித் தொகைகளும் ஆகக்குறைந்த மிகைப்பொருள் திணித்தல் விளிம்புகளும்.*

**20.** இச்சட்டத்தின் 18 ஆம் பிரிவினதும் 19 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பணிப்பாளர் தலைமையதிபதி, அவருக்கு கிடைக்கக் கூடியதாகவுள்ள தகவலிலிருந்து–

(அ) கொடுக்கப்பட்டவொரு நாட்டிலிருந்து இலங்கையினுள் மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்டதாகச் சார்த்தப்பட்ட ஏதேனும் இறக்குமதிகள், மிகைப் பொருளாகத் திணிக் கப்பட்டதாகச் சார்த்தப்பட்ட மற்றும் இலங்கையில் அதேபோன்ற உற்பத்திப்பொருளினதும் இறக்குமதிகளி னதும் மூன்று சதவீதத்துக்குக் குறைவானதற்குத் தனித்தனியாகக் கணக்குக்காட்டுகின்ற, நுண்ணாய்வின் கீழுள்ள நாடுகளிலிருந்து மிகைப்பொருளாகத் திணிக் கப்பட்டதாகச் சார்த்தப்பட்ட உற்பத்திப்பொருளின் இறக்குமதிகள், மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்டதாகச் சார்த்தப்பட்ட மற்றும் இலங்கையில் அதேபோன்ற உற்பத்திப்பொருளின் இறக்குமதிகளின் ஏழு சதவீதத் துக்கு மேற்பட்டதற்குக் கூட்டாகக் கணக்குகாட்டினா லொழிய, மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்டதாகச் சார்த்தப்பட்ட மற்றும் இலங்கையில் அதேபோன்ற உற்பத்திப்பொருளின், மொத்த இறக்குமதிகளின் மூன்று சதவீதத்துக்குக் குறைவானதைக் குறிக்கின்றனவென; அல்லது

(ஆ) மிகைப்பொருள் திணிப்பு விளிம்பானது, ஏற்றுமதி விலையின் நூற்றுவீதமொன்றாக வெளிப்படுத்தப்பட்ட, இரண்டு சதவீதத்துக்குக் குறைவாகவுள்ளதென,

தீர்மானிக்குமிடத்து, நுண்ணாய்வை ஆரம்பித்தலாகாது.

நுண்ணாய் வொன்றை ஆரம்பிப்ப தற்கான தீர்மானம் பற்றிய அறிவித்தல்.

**21.** (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் நுண்ணாய்வொன்று ஆரம்பித்து வைக்கப்படுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி-

(அ) ஏற்றுமதியாளர்களுக்கும், இறக்குமதியாளர்களுக்கும் சம்பந்தப்பட்டவையெனப் பணிப்பாளர் தலைமையதிபதி அறிந்த, இறக்குமதியாளர்களின் அல்லது ஏற்றுமதியாளர்களின் பிரதிநிதித்துவக் கழகங்களும், அத்துடன் ஏற்றுமதிசெய்கின்ற நாடுகளின் பிரதிநிதிகளுக்கும், முறைப்பாட்டாளர்களுக்கும், வேறெவரேனும் அக்கறை கொண்டுள்ள திறத்தவர்களுக்கும் அத்தகைய நுண்ணாய்வு பற்றி அறிவித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இலங்கையில் பரந்தளவில் பழக்கத்திலுள்ள ஏதேனும் செய்தித்தாளில், மூன்று மொழிகளிலுமான ஓர் அறிவித்தலை வெளியிடுவதன்மூலம் பகிரங்க அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவிப்பும் பகிரங்க அறிவித்தலும், பின்வரும் கருமங்கள்மீது போதிய தகவலைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) நுண்ணாய்வுசெய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் ஏற்றுமதி நாட்டின் அல்லது நாடுகளின் பெயரும், வித்தியாசமாயின், உற்பத்தி நாட்டின் அல்லது நாடுகளின் பெயரும்;

(ஆ) உற்பத்திப்பொருளின் தொழினுட்பப் பண்புகளும் பயன்பாடுகளும், அதன் சுமுகமாக்கப்பட்ட உணவுப்பொருள் விவரணமும் குறியிடுதல் முறைமை வகுப்பாக்கமுட்பட, நுண்ணாய்வுசெய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் பூரணமானவொரு விவரணம்;

(இ) அத்தகைய சார்த்துதல்களுக்கான அடிப்படை உட்பட, நுண்ணாய்வு செய்யப்படவேண்டிய சார்த்தப்பட்ட மிகைப்பொருள் திணித்தலின் விவரணம்;

(ஈ) ஊறும் காரணஞ்சார் தொடர்பும் பற்றிய சார்த்துதல்கள் எந்தக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளனவோ அந்தக் காரணிகள் பற்றியவொரு பொழிப்பு;

(உ) தகவலும் கருத்துரைகளும் எம்முகவரிக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டுமோ அம்முகவரி;

(ஊ) நுண்ணாய்வு ஆரம்பித்து வைக்கப்பட்ட தேதி; அத்துடன்

(எ) நுண்ணாய்வை நடாத்துவதற்கான உத்தேச அட்டவணை.

(3) நுண்ணாய்வொன்றை ஆரம்பித்துவைத்தலானது, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட பகிரங்க அறிவித்தல் எத்தேதியன்று வெளியிடப்படுகின்றதோ அத்தேதியன்று தொடங்கியுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

விண்ணப்பத்தை வெளிப்படுத்துதல்.

**22.** (1) அந்தரங்கத் தகவலைப் பாதுகாத்தல் தொடர்பான 25ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பணிப்பாளர் தலைமையதிபதி, நுண்ணாய்வொன்று ஆரம்பித்துவைக்கப்பட்டவுடன், 14 ஆம் பிரிவின்கீழ் பெறப்பட்ட எழுத்திலான விண்ணப்பத்தின் முழுமையான உரையை, அறியப்பட்ட எல்லா, ஏற்றுமதியாளர்களுக்கும் வெளிநாட்டு உற்பத்தியாளர்களுக்கும், ஏற்றுமதிசெய்கின்ற நாட்டின் அதிகாரிகளுக்கும் வழங்குதல் வேண்டுமென்பதுடன், வேண்டுகோளின்பேரில், அத்தகைய நுண்ணாய்வில் அக்கறை கொண்டுள்ள வேறெவரேனும் திறத்தவர்களுக்கு அதனைக் கிடைக்கக்கூடியதாக்குதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சம்பந்தப்பட்டுள்ள ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கை பெரிதாகவுள்ளவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, விண்ணப்பத்தின் உரையை இயைபான எவையேனும் வியாபாரக் கழகங்களுக்கு அல்லது அது அவ்வாறு இயலாததாகவுள்ளவிடத்து, ஏற்றுமதி செய்கின்ற நாடுகளின் அதிகாரிகளுக்கு வழங்கலாம்.

## நுண்ணாய்வை நடாத்துதல்

*நுண்ணாய்வு களின் கால எல்லை.*

**23.** விசேட சூழ்நிலைகளிற்றவிர, மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு நுண்ணாய்வொன்றை, அது ஆரம்பித்து வைக்கப்பட்டதிலிருந்து பன்னிரண்டு மாத காலப்பகுதியொன்றினுள்ளும், எவ்விடயத்திலும் அது, ஆரம்பித்து வைக்கப்பட்டதிலிருந்து பதினெட்டு மாத காலப்பகுதியொன்றுக்கு மேற்படாமலும் முடிவுறுத்தல் பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

*சுங்க அனுமதியளிப்பு.*

**24.** மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு நுண்ணாய்வொன்றை ஆரம்பித்து வைத்தலானது, சுங்க அனுமதியளிப்பு நடவடிக்கை முறைகளைத் தடங்கல் செய்தலாகாது என்பதுடன், வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டவுடன், அவ்வழிமுறைகளை ஏற்புடையன வாக்குவதற்குத் தேவையானவை தவிர்ந்த மேலதிக விதிமுறைகள் எவையும் ஏற்புடையனவாதலுமாகாது.

*இரகசியமான தன்மை.*

**25.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி, இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் இரகசியமாகக் கருதப்படுதலுக்கு உரித்துள்ளதாகச் சமர்ப்பிக்கப்பட்ட எல்லாத் தகவல்களையும் அவ்வாறு இரகசிய மானவையாக வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தகவல்,அதனைச் சமர்ப்பிக்கின்ற திறத்தவரின் குறிப்பிட்ட அனுமதியின்றி வெளியிடப்படுதலுமாகாது.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின்கீழ் வெளிவிடுகையிலிருந்து பாதுகாக்கப்படுகின்ற அத்தகைய தகவலை வழங்குகின்ற திறத்தவரினால் இரகசியமானதெனக் குறித்தளிக்கப்பட்ட எல்லாத் தகவலையும் இரகசியமாகக் கருதுதல் வேண்டும்.

(3) பின்வரும் வகையினவான தகவல்கள், (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் நோக்கத்துக்காக, அத்தகைய தகவலை வழங்குகின்ற ஆளினால் இரகசியமானதெனக் குறித்தளிக்கப்படின், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 5 (1) ஆம் பிரிவின் (ஐ) என்னும் பந்தியின் நியதிகளின் படி, இரகசியமாக வழங்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்:-

(அ) ஓர் உற்பத்திப்பொருளின் தன்மை, உற்பத்திச் செய்முறைகள், தொழிற்பாடுகள், உற்பத்திச்சாதனம், அல்லது பொறித்தொகுதி சம்பந்தமான தொழில் அல்லது வியாபார அந்தரங்கங்கள்;

(ஆ) பகிரங்கமானமுறையில் கிடைக்கக்கூடியதாகவிராத வொரு கம்பெனியின் நிதிநிலைமை சம்பந்தமான தகவல்; அத்துடன்

(இ) ஓர் உற்பத்திப்பொருளின் தயாரிப்பும் விற்பனையும் தொடர்பான ஆகுசெலவுகள், வாடிக்கையாளர்களை ஆளடையாளங்காணல், விற்பனைகள், பொருட்பட்டியல் கள், கப்பலேற்றுபொருட்கள், ஏதேனும் வருமானம், இலாபம், நட்டம் அல்லது செலவினம் என்பவற்றின் தொகை அல்லது மூலம் சம்பந்தமான தகவல்.

(4) நுண்ணாய்வொன்றுக்கான திறத்தவர் ஒருவர், இரகசியமாகக் கருதப்படுதலுக்கான வேண்டுகோளுக்கான காரணங்களுட்பட, குறித்தசில தகவல்கள் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படும் நேரத்தில், அதற்கென விடுக்கப்படும் வேண்டு கோளின்பேரில், அவருக்குக் கிடைக்கக்கூடியதாக்கப்படும் அத்தகைய தகவலுக்கான அவ்வாறு இரகசியமானதாக அந்தஸ்தை நாடலாம். பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய வேண்டு கோள்களைத் துரிதமாகக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டு மென்பதுடன், இரகசியமானதாகக் கருதப்படுவதற்கான வேண்டு கோளுக்கு அதிகாரமளிக்க முடியாததென அவர் தீர்மானித்தால், தகவலைச் சமர்ப்பிக்கின்ற திறத்தவருக்கு அவ்வாறு அறிவித்தலும் வேண்டும்.

(5) நுண்ணாய்வொன்றுக்கான திறத்தவர்கள், எந்தத் தகவல் இரகசியமானதாகக் கருதப்படுவதற்கு நாடப்படுகின்றதோ அந்த எல்லா தகவல்களும் பற்றிய இரகசியஞ்சாரா சுருக்கங்களைக் கொடுத்துதவுதல் வேண்டும். இவை, இரகசியமான உரையில் வழங்கப்பட்ட எண்களைச் சுட்டிக்காட்டுதல் அல்லது உரையிலான அடையாளமிடப்பட்ட நீக்கிவிடுதல்கள் என்ற வடிவத்தில் இருக்கலாம் என்பதுடன் இரகசியமாகச் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் விடயப்பொருளினது நியாயமான விளங்கிக் கொள்ளுதலை அனு மதித்தலும் வேண்டும்.

(6) விதிவிலக்கான சூழ்நிலைகளில், எந்தத் தகவல் இரகசிய மானதாகக் கருதப்படுவதற்கு நாடப்படுகின்றதோ அந்தத் தகவல் சுருக்கப்படுவதற்கு இயன்றதல்லவெனத் திறத்தவர்கள் சுட்டிக் காட்டலாம். இவ்விடயத்தில், சுருக்கப்படுதல் ஏன் சாத்தியமற்றதாக வுள்ளது என்பதற்கான காரணங்கள் பற்றிய கூற்றொன்றும் அத்தகைய திறத்தவர்களினால் வழங்கப்படுதல் வேண்டும்.

(7) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட இரகசியஞ்சாரா சுருக்கம் அவ்வுட்பிரிவின் தேவைப்பாடுகளைத் திருப்திசெய்யத் தவறுகின்றதெனப் பணிப்பாளர் தலைமையதிபதி கருத்துக் கொள்ளுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, இரகசியமான தாகக் கருதப்படுவதற்கான வேண்டுகோளுக்கு அதிகாரமளிக்கப் படுவதில்லையெனத் தீர்மானிக்கலாம் என்பதுடன், அத்தகைய சந்தர்ப்பத்தில் தகவலை வழங்குபவர் தகவலைப் பகிரங்கமான தாக்குவதற்கு விரும்பாதவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய தகவலைப் புறக்கணித்தலும் வேண்டும்; அத்துடன் சம்பந்தப்பட்ட தகவலை, தகவல் சரியானதென பணிப்பாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு அது தெளிவுபடுத்தப்பட் டாலொழிய,அதனைச் சமர்ப்பித்த திறத்தவருக்குத் திருப்பிக் கொடுத்தலும் வேண்டும்.

*கிடைக்கக்கூடிய தாகவுள்ள தகவலின் மீது நம்பியிருத்தல்.*

**26.** (1) நுண்ணாய்வொன்றின் போது எந்நேரத்திலும், அக்கறை கொண்டுள்ள எவரேனும் திறத்தவர்–

(அ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படும் காலத்தினுள் அவசியமான ஏதேனும் தகவல் பெற்றுக் கொள்ளப்படுவதனை மறுக்கின்றவிடத்து அல்லது அவசியமான ஏதேனும் தகவலை வேறுவகையில் வழங்காதவிடத்து; அல்லது

(ஆ) வேறுவகையாகக் குறிப்பிடத்தக்கமுறையில் நுண்ணாய் வைத் தடைசெய்யுமிடத்து,

பணிப்பாளர் தலைமையதிபதி, விண்ணப்பத்தில் அடங்கியுள்ள தகவலுட்பட, கிடைக்கக்கூடிய தகவலின் அடிப்படையின்மீது, (உறுதிப்படுத்துவதான அல்லது எதிர்மாறான) பூர்வாங்க அத்துடன்

இறுதித் தீர்மானத்தைச் செய்யலாம். இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகள், இவ்வுட்பிரிவின்கீழ் தீர்மான மொன்றைச் செய்வதில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பின்பற்றப்படுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, அதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்ட தகவலை வழங்குதலில், அக்கறைகொண்டுள்ள திறத்தவர்களினால், குறிப்பாகச் சிறிய கம்பெனிகளினால், உறப்படும் எவையேனும் சிரமங்களை உரிய கணக்குக்கெடுத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகையவாறாக, விடயத்துக்கேற்ப, ஏதேனும் செயல்முறைக்குகந்த உதவியை வழங்குதலும் வேண்டும் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தகவலைச் சமர்ப்பிப்பதற் கான காலவெல்லையையும் நீடிக்கலாம்.

பகிரங்கக் கோப்பும் அதனைப் பார்வை யிடுதலும்.

**27**. (1) இச்சட்டத்தின்கீழ் நடாத்தப்படும் ஒவ்வொரு நுண்ணாய் வும் அல்லது மீளாய்வும் தொடர்பாகப் பகிரங்கக்கோப்பொன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதி நிர்ணயித்துப் பேணுதல் வேண்டும். 25 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பணிப்பாளர் தலைமையதி பதி, பின்வருவனவற்றைப் பகிரங்கக் கோப்பில் இடுதல் வேண்டும்:-

(அ) நுண்ணாய்வு அல்லது மீளாய்வு தொடர்பான எல்லாப் பகிரங்க அறிவித்தல்களும்;

(ஆ) வினாக்கொத்துக்கள், வினாக்கொத்துக்களுக்கான மறுமொழிகள், அத்துடன் பணிப்பாளர் தலைமையதி பதிக்குச் சமர்ப்பிக்கப்படும் எழுத்திலான கடிதத் தொடர்புகள் உட்பட்ட எல்லா விடயங்களும்;

(இ) 33 ஆம் பிரிவின்கீழ் தயாரிக்கப்படும் எவையேனும் சரிபார்த்தல் அறிக்கைகளுட்பட, பணிப்பாளர் தலைமையதிபதியினால் விருத்திசெய்யப்படும் அல்லது பெறப்படும் வேறெல்லாத் தகவலும்; அத்துடன்

(ஈ) பகிரங்க வெளிப்படுத்தலுக்காகத் தோதானவையெனப் பணிப்பாளர் தலைமையதிபதி கருதுகின்ற வேறெவை யேனும் ஆவணங்களும்.

(2) பகிரங்கக் கோப்பானது, நுண்ணாய்வு, மீளாய்வு மற்றும் விளைகின்ற ஏதேனும் நீதிமுறை மீளாய்வுக் காலப்பகுதி பூராவும், பணிப்பாளர் தலைமையதிபதியின் அலுவலகத்தில் மீளாய்வுக்கும் பிரதியெடுத்தலுக்கும் பொது மக்களுக்குக் கிடைக்கக்கூடியதாக்கப்படுதல் வேண்டும்.

### நுண்ணாய்வு நடவடிக்கைமுறை

நுண்ணாய்வுக்கான உத்தேச அட்டவணை.

**28.** பணிப்பாளர் தலைமையதிபதி, நுண்ணாய்வொன்றை ஆரம்பித்து வைத்தல்பற்றி 21 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில், எழுத்திலான வாதங்களைச் சமர்ப்பிப்பதற்கான உத்தேசக் காலவரையறைகள், வேண்டுகோள் விடுக்கப்படின், ஏதேனும் கேட்புக்கான உத்தேசத் தேதி, பூர்வாங்கத் தீர்மானத்துக்கான உத்தேசத் தேதி, இறுதித் தீர்மானத்துக்கான உத்தேசத் தேதி என்பன உட்பட, நுண்ணாய்வை நடாத்துவதற்கான உத்தேச நடவடிக்கைமுறையை உள்ளடக்குதல் வேண்டும்.

தகவல் சேர்த்தல்.

**29.** (1) நுண்ணாய்வொன்று ஆரம்பித்துவைக்கப்படுவதன்மேல், பணிப்பாளர் தலைமையதிபதி, உள்நாட்டு உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் உட்பட நுண்ணாய்வுக்கு இயைபான தகவலைக் கொண்டிருக்கக்கூடியவரென அவர் நம்புகின்ற எவரேனுமாளுக்கு வினாக்கொத்துக்களை அனுப்புதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, வினாக்கொத்து எவ் ஏற்றுமதியாளர்களுக்கும் வெளிநாட்டு உற்பத்தியாளர்களுக்கும் அனுப்பப்படுகின்றதோ அவ் ஏற்றுமதியாளர்களுக்கும் வெளிநாட்டு உற்பத்தியாளர்களுக்கும், வினாக்கொத்தானது எத்தேதியன்று பிரதிவாதிக்கு அனுப்பப்பட்டதோ அல்லது ஏற்றுமதிசெய்யும்நாட்டின் தோதான இராசதந்திர அல்லது அலுவலகமுறையான பிரதிநிதிக்கு அனுப்பிவைக்கப்பட்டதோ, அத்தேதியிலிருந்து தொடங்குகின்ற முப்பத்தேழு நாட்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றைப் பதிலுக்காக அளித்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி, நுண்ணாய்வை முடிவுறுத்துவதற்கு விதிக்கப்பட்ட காலஎல்லைகளைக் கவனத்திற்கொண்டு, காட்டப்படும் நற்காரணத்தின்மேல், பதிலளிப்பதற்கு அளிக்கப்பட்ட காலத்தை நீடிப்பதற்கான ஏதேனும்

*வேண்டுகோளிற்கு உரிய கவனஞ்செலுத்துதல்வேண்டுமென்பதுடன், செயல்முறைக்குகந்தபோதெல்லாம் அத்தகைய நீடிப்பொன்றை அளித்தலும்வேண்டும்.*

*(3) பணிப்பாளர் தலைமையதிபதி, ஒரு வினாக்கொத்துக்காக ஏதேனும் பதில், வழங்கப்பட்ட காலப்பகுதியினுள் அல்லது அது எவ்வடிவத்தில் அனுப்பப்படுவதற்கு வேண்டுகோள் விடுக்கப் பட்டதோ அவ்வடிவத்தில் சமர்ப்பிக்கப்படாதிருப்பின் அதனைப் புறக்கணிக்கலாம்.*

*(4) பணிப்பாளர் தலைமையதிபதி, நுண்ணாய்வொன்றின்போது, குறைநிரப்பு வினாக்கொத்துக்கள் அல்லது தெளிவுபடுத்தலுக்கான அல்லது மேலதிகக் தகவலுக்கான எழுத்திலான வேண்டுகோள்கள் என்ற வடிவத்தில் அக்கறைகொண்டுள்ள திறத்தவர்களிடமிருந்து மேலதிகத் தகவலுக்காக வேண்டுகோள் விடுக்கலாம். அத்தகைய வேண்டுகோள்கள், பயனுள்ள பதிலொன்றை அனுப்புவதற்குத் தேவைப்படக்கூடியவாறான போதிய காலத்தைக் கவனத்திற் கொண்டு, எத்தேதிக்கு முன்னர் பதிலொன்று அனுப்பப்பட வேண்டுமோ அத்தேதியைக் கூறுதல் வேண்டும்.*

*(5) அக்கறைகொண்டுள்ள எவரேனும் திறத்தவர், அவரின் சொந்த உந்துதலின்பேரில், நுண்ணாய்வுக்கு இயைபானதென அவர் கருதுகின்ற ஏதேனும் தகவலை எழுத்தில் சமர்ப்பிக்கலாம்; பணிப்பாளர் தலைமையதிபதியினால் கவனத்திற்கொள்ளப் படுதலானது,தகாதமுறையில் சுமையிடுவதாக இருந்தாலொழிய அல்லது நுண்ணாய்வின் உரியநேரத்திலான முன்னேற்றத்தை நிலைகுலையச் செய்வதாக இருந்தாலொழிய, அது கவனத்திற்கொள் ளப்படுதல் வேண்டும்.*

*(6) பணிப்பாளர் தலைமையதிபதி, மிகைப்பொருள் திணிப்பு, ஊறு மற்றும் காரணம்சார் தொடர்பு என்பனபற்றிய அவரது மதிப்பீடுகளை வரையறுக்கப்பட்ட காலப்பகுதிகள் தொடர்பான தரவின் அடிப்படையில் செய்தல் வேண்டும்; இது —*

*(அ) மிகைப்பொருள் திணிப்பின் விடயத்தில், எந்த நுண்ணாய் வுக்காகத் தரவு கிடைக்கக்கூடியதாகவுள்ளதோ அந்த*

நுண்ணாய்வை ஆரம்பித்துவைக்கும் தேதிக்கு முற்போந்ததாகவுள்ள ஆறு மாதங்களுக்குக் குறையாததும் பன்னிரெண்டு மாதங்களுக்கு மேற்படாததுமான காலப்பகுதியொன்றைப் பொதுவாக மேவுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஊறின் விடயத்தில், பொதுவாக முப்பத்தாறு மாத காலப்பகுதியை மேவுதல் வேண்டும்.

(7) ஆறாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பணிப்பாளர் தலைமையதிபதி, தோதானவிடத்து, இலங்கைக் கைத்தொழிலும் நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் தன்மையும் தொடர்பாகக் கிடைக்கக்கூடியதாகவுள்ள தகவலின் நோக்கில், விடயத்துக்கேற்ப, குறுகிய அல்லது நீண்டகாலப் பகுதியொன்றைத் தீர்மானிக்கலாம்.

பூர்வாங்க எழுத்திலான வாதங்கள்.

**30**. அக்கறைகொண்டுள்ள திறத்தவர்கள், பூர்வாங்கத் தீர்மானத்தை செய்வதற்கு அட்டவணைப்படுத்தப்பட்ட தேதிக்கு முன்னர் பதினைந்து நாட்கள் கொண்ட காலப்பகுதியொன்றுக்குப் பிந்தாமல், நுண்ணாய்வுக்கு இயைபான ஏதேனும் கருமம் சம்பந்தமான எழுத்திலான வாதங்களைச் சமர்ப்பிக்கலாம்.

பூர்வாங்கத் தீர்மானம்.

**31**. (1) பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அந்நேரத்தில் கிடைக்கக்கூடியதாகவுள்ள எல்லாத் தகவலினதும் அடிப்படையின்மீது, நுண்ணாய்வு ஆரம்பித்துவைக்கப்பட்ட பின்னர் இரண்டு மாத காலப்பகுதியொன்றுக்கு முந்தாமலும், ஐந்து மாத காலப்பகுதியொன்றுக்குப் பிந்தாமலும், மிகைப் பொருள் திணிப்பு, ஊறு மற்றும் காரணஞ்சார் தொடர்பு பற்றிய பூர்வாங்கத் தீர்மானமொன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதி செய்தல் வேண்டும்.

(2) பூர்வாங்கத் தீர்மானம் பற்றிய பகிரங்க அறிவித்தலொன்று பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படுதல் வேண்டும்; அது, இரகசியமான தகவலின் பாதுகாப்புக்கான தேவைப்பாட்டுக்கு உரிய கவனஞ்செலுத்தி முக்கியமானவையெனக் கருதப்படும் நிகழ்வு மற்றும் சட்டம் பற்றிய எல்லாப் பிரச்சினைகளின்மீதும் எய்தப்பட்ட முடிவெடுப்புக்களையும் முடிபுரைகளையும் போதிய விபரமாக எடுத்துக்கூறுதல் வேண்டும். அறிவித்தலானது பின்வருவனவற்றையும்கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) நுண்ணாய்வுசெய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் அறியப்பட்ட ஏற்றுமதியாளர்களினதும் உற்பத்தியாளர்களினதும் பெயர்கள்;

(ஆ) சுமுகமாக்கப்பட்ட உணவுப்பொருள் விவரணமும் குறியிடுதல்முறைமை வகுப்பாக்கமும் உட்பட, சுங்க நோக்கங்களுக்காகப் போதியதாகவுள்ள, நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் விவரணமொன்று;

(இ) வழமையான பெறுமதியையும் ஏற்றுமதி விலையையும் இவை இரண்டையும் ஒப்பிடுகையில் செய்யப்பட்ட எவையேனும் சீர்ப்படுத்தல்களையும் தீர்மானிப்பதில் பயன்படுத்தப்பட்ட முறைமைவியல் பற்றிய விவரணமொன்று உட்பட, உள்ளதாகக் காணப்படும் மிகைப் பொருள் திணிப்பு விளிம்பு ஏதேனுமிருப்பின், அதன் தொகையும் அத்தகைய தீர்மானத்துக்கான அடிப்படையும்;

(ஈ) இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்ட ஒப்பீட்டுமுறை பயன்படுத்தப் பட்டிருப்பின், அவ்வுட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட விளக்கம்;

(உ) இச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகத் தன்னிச்சையாக செயலூக்கம் காட்டுதல்களின் அடிப்படையின்மீது பணிப்பாளர் தலைமையதிபதி தனிப்பட்ட மிகைப் பொருள் திணிப்பு விளிம்பொன்றைத் தீர்மானிப்பதற்கு மறுத்தால், அம்முடிபுக்கான அடிப்படை;

(ஊ) கணக்குக்கு எடுக்கப்பட்டுள்ள மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்ட இறக்குமதிகள் அல்லாத வேறு காரணிகள் மீதான தகவலுட்பட, ஊறு மற்றும் காரணஞ்சார் தொடர்புபற்றித் தீர்மானிப்பதற்கு இட்டுச்சென்றுள்ள காரணிகள்; அத்துடன்

(எ) ஏற்புடையனவாக்கப்படவேண்டிய எவையேனும் தற்காலிக வழிமுறைகளின் தொகையும், நுண்ணாய்வுக் காலப்பகுதியின்போது ஊறுவிளைவிக்கப்படுவதைத் தடுப்பதற்கு அத்தகைய தற்காலிக வழிமுறைகள் ஏன் அவசியமாகவுள்ளன என்பதற்கான காரணங்களும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, பகிரங்க அறிவித்தலை வர்த்தமானியிலும், இலங்கையில் பரந்தளவில் புழக்கத்திலுள்ள ஏதேனும் செய்தித்தாளிலும் மூன்று மொழிகளிலும் வெளியிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிவித்தலின் பிரதியொன்று, நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளை ஏற்றுமதி செய்கின்ற நாட்டுக்கும் அல்லது நாடுகளுக்கும் அறியப்பட்ட அக்கறைகொண்டுள்ள வேறெவரேனும் திறத்தவர்களுக்கும் அளிக்கப்படுதலும் வேண்டும்.

விலைப் பொறுப்பேற் பொன்றை ஏற்றுக் கொள்ளுதல்.

**32.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி-

(அ) 44 ஆம் பிரிவின்கீழ் விலைப்பொறுப்பேற்பொன்றை ஏற்றுக்கொள்ளுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, வர்த்தமானியிலும் இலங்கையில் பரந்தளவில் புழக்கத்திலுள்ள ஏதேனும் செய்தித்தாளிலும் மூன்று மொழிகளிலும் அப்பொருள்பட்ட அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும்; அல்லது

(ஆ) 44 ஆம் பிரிவின்கீழான விலைப்பொறுப்பேற்பொன்றை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய மறுப்புக்கான காரணங்களை வழங்குதல் வேண்டுமென்பதுடன், அதன்மீதான எவையேனும் கருத்துரைகளைத் தெரிவிப்பதற்கான வாய்ப்பொன்றை ஏற்றுமதியாளருக்கு அளித்தலும் வேண் டும்.

(2) ஒரு பொறுப்பேற்பை ஏற்றுக்கொண்டமை பற்றிய பகிரங்க அறிவித்தல் அப்பொறுப்பேற்பின் இரகசியம்சாராப் பாகத்தையும் உள்ளடக்குதல் வேண்டுமென்பதுடன், பணிப்பாளர் தலைமை யதிபதியினால் முக்கியமானவையெனக் கருதப்படும் எல்லா நிகழ்வு மற்றும் சட்டம் பற்றிய பிரச்சினைகளும்மீதான முடிவெடுப்

புக்களையும், முடிவுரைகளையும் போதியளவு விபரமாக எடுத்துக் கூறுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய அறிவித்தல் எந்த நாட்டில் அல்லது நாடுகளின் உற்பத்திப்பொருட்கள் அத்தகைய தீர்மானத்துக்கு அமைந்தனவாகவுள்ளனவோ அந்த நாட்டுக்கும் அல்லது நாடுகளுக்கும் அறியப்பட்ட அக்கறைகொண்டுள்ள வேறெவரேனும் திறத்தவர்களுக்கும் அளிக்கப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் 46 ஆம் பிரிவின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதி நுண்ணாய்வைத் தொடர்ந்து நடாத்துமிடத்து, இறுதித் தீர்மானத்துக்கான உத்தேசிக்கப்பட்ட தேதியையும், நுண்ணாய்வை நடாத்துவதற்காக கடைப்பிடிக்கப்பட்ட உத்தேசிக்கப்படும் நடவடிக்கைமுறைக்கான வேறெவையேனும் திரிபுபடுத்தல்களையும் எடுத்துக்கூறி, நுண்ணாய்வு தொடர்ந்து நடாத்தப்படுகின்றமை பற்றிய அறிவித்தலொன்றை அவர் வெளியிடுதல் வேண்டும். அத்தகையவொரு தொடர்ந்து நடாத்தப்படும் நுண்ணாய்விலான ஏதேனும் இறுதித்தீர்மானம் அத்தகைய அறிவித்தல் வெளியிடப்படும் தேதியிலிருந்து ஆறு மாதங்களினுள் செய்யப்படுதல் வேண்டும்.

**33.** (1) இருபத்தாறாம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான சூழ்நிலைகளிற் தவிர, பணிப்பாளர் தலைமையதிபதி நுண்ணாய்வொன்றின் போது, அவரது முடிவெடுப்புக்கள் அக்கறை கொண்டுள்ள திறத்தவர்களினால் வழங்கப்பட்ட எந்தத் தகவலை அடிப்படையாகக் கொண்டுள்ளனவோ அந்தத் தகவலின் செம்மை பற்றித் தன்னைத் திருப்திப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். தகவலைச் சரிபார்த்தல்.

(2) வழங்கப்பட்ட தகவலைச் சரிபார்க்கும் நோக்கத்துக்காக அல்லது மேலதிகத் தகவலைப் பெறுவதற்காக, பணிப்பாளர் தலைமையதிபதி, சம்பந்தப்பட்ட குழுமங்களின் முற்சம்மதத்துடனும், பிரச்சினையிலுள்ள நாட்டின் அரசாங்கத்தினது பிரதிநிதிகளுக்கு அறிவித்தபின்னரும், அவசியமானவிடத்து வேறு நாடுகளில் நுண்ணாய்வுகளை நிறைவேற்றலாம்.

(3) இச்சட்டத்துக்கான இரண்டாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கைமுறைகள் (2) ஆம் உட்பிரிவின்கீழ் வேறு நாடுகளின் ஆள்புலத்தில் நிறைவேற்றப்பட்ட சரிபார்த்தல்கள் தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, இப்பிரிவின் கீழ் நடாத்தப்படும் ஏதேனும் சரிபார்த்தலின் மீதான அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அவ்வறிக்கையானது அது சம்பந்தப்பட்ட கம்பெனிக்குக் கிடைக்கக்கூடியதாக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் இரகசியம்சாரா உரையொன்று 27 ஆம் பிரிவின் கீழ் வைத்திருக்கப்பட்ட பகிரங்கக் கோப்பில் இடப்படுதல் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி, நுண்ணாய்விலான ஏதேனும் கேட்புத் தேதிக்கு முன்னர், எவையேனும் சரிபார்த்தல்களைப் பூரணப்படுத்துவதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும்.

எழுத்திலான வாதங்கள்.

**34.** (1) (அ) கேட்பதற்கும் வேண்டுகோள் விடுக்கப்படாத நுண்ணாய்வொன்றில், அக்கறைகொண்டுள்ள திறத்தவர் ஒருவர், இறுதித்தீர்மானத்துக்காக உத்தேசிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் ஒன்றரை மாத காலப்பகுதியொன்றுக்குப் பிந்தாமல், நுண்ணாய்வுக்கு இயைபானதென, அவர் கருதுகின்ற ஏதேனும் கருமம் சம்பந்தமாக எழுத்திலான வாதங்களைச் சமர்ப்பிக்கலாம்;

(ஆ) கேட்புக்கென அட்டவணைப்படுத்தப்பட்ட தேதிக்கு முன்னர் பத்து நாட்கள் கொண்ட காலப் பகுதியொன்றுக்குப் பிந்தாமல், கேட்பொன்று நடாத்தப்படும் நுண்ணாய்வொன்றில், அக்கறை கொண்டுள்ள திறத்தவரொருவர், நுண்ணாய்வுக்கு இயைபானதென அவர் கருதுகின்ற ஏதேனும் கருமம் சம்பந்தமான எழுத்திலான சமர்ப்பணங்களைச் சமர்ப்பிக்கலாம்.

(2) கேட்பைப் பின்பற்றி, கேட்பில் பங்குபற்றிய அக்கறை கொண்டுள்ள திறத்தவர்கள், பத்து நாட்கள் கொண்ட காலப்பகுதி யொன்றினுள், கேட்பில் முன்வைக்கப்பட்ட வாதங்களுக்கும் தகவலுக்கும் மறுமொழியாக மேலதிக எழுத்திலான சமர்ப்பணங் களைச் சமர்ப்பிக்கலாம்.

**35**. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, பூர்வாங்கத் தீர்மானம் வெளியிடப்பட்ட பின்னர் ஒரு மாத காலப்பகுதியொன்றுக்குப் பிந்தாமல், அக்கறை கொண்டுள்ள திறத்தவரொருவரினால் செய்யப்படும் வேண்டுகோளின்பேரில் இறுதித் தீர்மானத்தின் உத்தேசிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று வாரகாலப்பகுதி யொன்றுக்குப் பிந்தாமலும் உத்தேசிக்கப்பட்ட தேதிக்குமுன்னர் ஒரு மாதகாலப்பகுதியொன்றுக்கு மேற்படாததுமான தேதியொன்றை நிர்ணயித்தல் வேண்டும் இதற்கான கேட்பில் அக்கறைகொண்டுள்ள எல்லாத் திறத்தவர்களும் தகவலையும் வாதங்களையும் முன்வைக்க லாம். கேட்புகள்.

(2) கேட்பொன்றுக்கு வருகைதருவதற்கு எவரேனும் அக்கறை கொண்டுள்ள திறத்தவருக்குக் கடப்பாடெதுவும் இருத்தலாகாது என்பதுடன், அவ்வாறு செய்யத் தவறுதலானது, அந்த அக்கறை கொண்டுள்ள திறத்தவரின் வழக்குக்குப் பங்கம் விளைவித்த லுமாகாது. கேட்புகள், இயன்றளவுவரை, அக்கறைகொண்டுள்ள எல்லாத் திறத்தவர்களினதும் வசதியைக் கணக்குக்கெடுக்கும் வகையில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஒழுங்குபடுத் தப்படுதல் வேண்டும்.

(3) கேட்பில் தோன்றுவதற்கு உட்கருதுகின்ற அக்கறை கொண் டுள்ள திறத்தவர்கள், கேட்புத் தேதிக்கு முன்னர் ஏழு நாட்கள் கொண்ட காலப்பகுதியொன்றுக்குக் குறையாமலும், கேட்பில் தோன்றக்கூடியவர்களான பிரதிநிதிகளினதும் சாட்சிக்காரர் களினதும் பெயர்களைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதியானவர் கேட்புகளுக்குத் தலைமைதாங்குதல் வேண்டும். இரகசியத்தன்மை பேணிக்காக்கப் படுவதனை அவர் உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், பங்குபற்றுகின்ற எல்லாத் திறத்தவர்களுக்கும் தமது கருத்துக்களை முன்வைப்பதற்குப் போதிய வாய்ப்பு அளிக்கப்படுவதனை உறுதிப்படுத்தும் வகையிலான அத்தகையமுறையில் கேட்பை ஒழுங்குபடுத்துதலும் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி கேட்புப்பற்றிய பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டுமென்ப துடன், இரகசியத் தன்மையினதான ஏதேனும் தகவலைத் தவிர்த்து அது பகிரங்கக் கோப்பில் இடப்படுதலும் வேண்டும்.

*கைத்தொழிற் பயன்படுத்து நரினாலும் பாவனையாளர் ஒழுங்கமைப்பு களின் பிரதி நிதிகளாலும் ஆன பங்களிப்புகள்.*

**36.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி, வழிமுறைகளை விதிப்பதில், இலங்கையின் பொருளாதார நலன் உட்பட, நுண்ணாய்வுக்கு இயைபான கருமங்கள் சம்பந்தமாகத் தகவலை வழங்குவதற்கும், எழுத்திலான வாதங்களைச் சமர்ப்பிப்பதற்கும் என, இலங்கையில் நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப் பொருளின் கைத்தொழிற்பயன்படுத்துநருக்கும், பாவனையாளர் ஒழுங்கமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் வாய்ப்புக்களை அளித்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழான எல்லாத் தகவல்களும் எழுத்தில் வழங்கப்படுதல் வேண்டுமெனப்பதுடன், பணிப்பாளர் தலைமை யதிபதி, நுண்ணாய்வொன்றின்போது நடாத்தப்படும் ஏதேனும் கேட்பில் வாய்மொழிமூலமான முன்வைப்புக்களைச் செய்வதற்கு, நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் கைத்தொழிற் பயன்படுத்துநர்களுக்கும் பாவனையாளர் ஒழுங்கமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் அனுமதியளித்தலும் வேண்டும்.

*அத்தியாவசிய மான நிகழ்வுகள்.*

**37.** (1) இறுதித்தீர்மானத்துக்காக உத்தேசிக்கப்பட்ட தேதிக்கு ஆகக்குறைந்தது மூன்று வார காலப்பகுதியொன்றுக்கு முன்ன ரேனும், பணிப்பாளர் தலைமையதிபதி, 25 ஆம் பிரிவின்கீழான இரகசியமான தன்மைத் தேவைப்பாட்டுக்கமைய, தீர்க்கமான வழி முறைகளைப் பிரயோகிப்பதாவென்ற முடிபுக்கான அடிப்படை யாக அமையவேண்டிய, கவனத்தின்கீழுள்ள அத்தியாவசியமான நிகழ்வுகளைப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட எழுத்தின்மூலம் அல்லது வேறு எவையேனும் வழிவகைகள் மூலம் அக்கறை கொண்டுள்ள எல்லாத் திறத்தவர்க ளுக்கும் அறிவித்தல் வேண்டும்.

(2) அக்கறைகொண்டுள்ள திறத்தவர்கள், தகவல் வெளிப் படுத்தப்பட்டதிலிருந்து ஒரு வார காலப்பகுதியொன்றினுள் அல்லது விதிவிலக்கான சூழ்நிலைகளில் பணிப்பாளர் தலைமை யதிபதியினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நீடித்த காலப்பகுதியினுள், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவர்களுக்கு அத்த கைய தகவல் வெளிப்படுத்தப்படுவதன்மீது, கருத்துரைகள் எவையேனுமிருப்பின், அவற்றை எழுத்தில் பதிவஞ்சல்மூலம் சமர்ப்பிக்கலாம்.

இறுதித் தீர்மானம்.

**38.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி, பூர்வாங்கத் தீர்மானத் தேதியிலிருந்து பொதுவாக ஆறு மாதகாலப்பகுதியொன்றினுள் மிகைப்பொருள் திணிப்பு, ஊறு மற்றும் காரணஞ்சார் தொடர்பு என்பன பற்றிய இறுதித் தீர்மானமொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய இறுதித்தீர்மானம், 25 ஆம் பிரிவின் கீழான இரகசியத் தன்மைத் தேவைப்பாடுகளுக்கமைய, அக்கறை கொண்டுள்ள திறத்தவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளவையும் நுண்ணாய்வின்போது பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெறப்பட்டவையுமான எல்லாத் தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) மிகைப்பொருள் திணிப்பு உள்ளதென்றும், அத்தகைய மிகைப்பொருள் திணிப்பின் விளைவாக ஊறு ஏற்படுகின்றதென்றும் இறுதித் தீர்மானம் எடுத்துக்காட்டுமிடத்தும், அத்துடன் மற்றக் கருமங்களுக்கிடையே–

(அ) நுண்ணாய்வின் கீழுள்ள உற்பத்திப்பொருளுக்கான உள்நாட்டுப் போட்டாபோட்டி நிலைமையையும்; அத்துடன்

(ஆ) ஏற்புடையற்பாலதாகுமிடத்து, கைத்தொழிற் பயன்படுத்துநர்களின் தேவைகளையும் இறுதிப் பாவனையாளர்களின் அக்கறையையும்,

கவனத்துட்கொண்டும், மற்றும் இலங்கையின் பொருளாதார நலன், மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைகளை விதிக்குமாறு கோருமிடத்தும், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, தீர்க்கமான மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வையொன்றுக்கான முன்மொழிவொன்று பணிப்பாளர் தலைமையதிபதியினால் அமைச்சுக்களிடையேயான குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) தீர்க்கமான மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வொன்றை விதிப்பதன் தோதான தன்மையைக் கவனத்துட்கொள்வது அமைச்சுக்களுக்கிடையேயான குழுவின் கடமையாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய முன்மொழிவு கிடைத்ததிலிருந்து பத்து நாட்கள் கொண்ட காலப்பகுதியொன்றினுள் அது, அமைச்சரின்மூலம், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருக்கு அதன் விதப்புரையைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

*(4) பணிப்பாளர் தலைமையதிபதி, முழுமையான மிகைப்பொருள் திணிப்பு விளிம்புக்குக் குறைவானதாகவுள்ள தீர்வொன்று இலங்கைக் கைத்தொழிலுக்கான ஊறை அகற்றுவதற்குப் போதியதாக இருக்குமாவென்பதையும் பரிசோதனை செய்தல் வேண்டும். ஊறை அகற்றுவதற்கு அத்தகைய குறைந்த தீர்வை போதியதாகவிருக்குமெனப் பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்குமிடத்து, விதிக்கப்படும் இறுதி மிகைப்பொருள் திணிப் பெதிர்ப்புத் தீர்வையின் தொகை அந்தக் குறைந்த தீர்வையை விஞ்சுதலாகாது.*

*(5) மிகைப்பொருள் சான்றெதுவுமில்லை; அத்துடன் அதன் விளைவான இலங்கைக் கைத்தொழிலுக்கு ஊறெதுவும் விளைவிக் கப்படுவதில்லை அல்லது மிகைப்பொருள் திணிப்புப் பற்றிய சான்று இருக்கின்றபோதிலும் இலங்கைக் கைத்தொழிலுக்கு ஊறு ஏற்படுகின்றது என்பதற்கான சான்றெதுவுமில்லை அல்லது இலங்கையின் பொருளாதார நலன், எவையேனும் மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைகள் விதிக்கப்படவேண்டுமெனக் கோருவதில்லை என்பது இறுதித் தீர்மானமாக உள்ளவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி நுண்ணாய்வை உடனடியாக முடிவு றுத்தல் வேண்டும்.*

*தீர்வையை விதித்தலும் பகிரங்க அறிவித்தலை வழங்குதலும்.*

**39.** *(1) தீர்க்கமான மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வை யொன்று விதிக்கப்படவேண்டுமென அமைச்சுக்களிடையேயான குழு விதந்துரைக்குமிடத்து, அமைச்சரின் கலந்தாலோசனையுடன் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், அமைச்சுக்களிடையேயான குழுவின் விதப்புரை கிடைத்த தேதியி லிருந்து பதினான்கு நாட்கள் கொண்ட காலப்பகுதியொன்றினுள் ளும் இலங்கையின் பொருளாதார நலனைக் கவனத்துட்கொண்டும், தீர்க்கமான மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வையொன்றை கடைப்பிடிப்பதா அல்லவா என்பதையும், விதிக்கப்படவேண்டிய தீர்வைத் தொகை ஏதேனுமிருப்பின் அதன் தொகையையும் தீர்மானித்தல் வேண்டும்; ஆயின், விதிக்கப்பட்ட தீர்வையானது, உளதாயிருந்ததெனக் காணப்பட்ட மிகைப்பொருள் திணிப்பு விளிம்பை விஞ்சுதலாகாது.*

*(2) பணிப்பாளர் தலைமையதிபதி–*

*(அ) இறுதித் தீர்மானம் (உறுதிப்பாடானதாயினும் அல்லது எதிர்மாறானதாயினும்); அத்துடன்*

(ஆ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் விதிக்கப்பட்ட தீர்வை ஏதேனுமிருப்பின் அதன் தொகை,

என்பனபற்றிய பகிரங்க அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டும் என்பதுடன், இது வர்த்தமானியிலும் இலங்கையிலும் பரந்தளவில் புழக்கத்திலுள்ள ஏதேனும் செய்தித்தாளிலும் மூன்று மொழிகளிலும் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(3) (அ) இரகசியத் தகவலைப் பாதுகாப்பதற்கான தேவைப் பாட்டுக்கு உரிய கவனஞ் செலுத்தி, நிகழ்வும் சட்டமும் பற்றிய கருமங்கள் மீது எல்லா இயல்பான தகவல் களும், இறுதித் தீர்மானத்துக்கு இட்டுச் சென்றுள்ள காரணங்களும் உள்ளடங்கலாக, அத்தகைய இறுதித் தீர்மானத்தையும்; அத்துடன்

(ஆ) இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப் படும் தகவலையும்.

கொண்டுள்ள அறிக்கையொன்று பணிப்பாளர் தலைமையதி பதியினால் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கை பொதுமக்கள் பார்வையிடுவதற்காகக் கிடைக்கக்கூடிய தாக்கப்படுதலும் வேண்டும். அத்துடன் பணிப்பாளர் தலைமை யதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணக் கொடுப்பனவின்மீது அதன் பிரதிகள் வழங்கப்படலாம்.

(4) அறிக்கையில் உள்ளடக்கப்படுவதற்கு (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட தகவல் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திபொருளின் அறியப் பட்ட ஏற்றுமதியாளர்களினதும் உற்பத்தியாளர்களினதும் பெயர்கள்;

(ஆ) சுமுகமாக்கப்பட்ட உணவுப்பொருள் விவரணமும் குறியிடுதல் முறைமை வகுப்பாக்கமும் உட்பட, சுங்க நோக்கங்களுக்காகப் போதியதாகவுள்ள நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் விவரணம்;

(இ) வழமையான பெறுமதி, ஏற்றுமதி விலை மற்றும் இவை இரண்டையும் ஒப்பிடுவதில் செய்யப்பட்ட சீர்படுத்தல்கள் என்பவற்றைத் தீர்மானிப்பதில் பயன்படுத்தப்பட்ட முறைமையியலின் விவரணமொன்று உட்பட, உள தாயுள்ளதெனக் காணப்படும் மிகைப்பொருள் திணிப்பு விளிம்பு ஏதேனுமிருப்பின், அதன் தொகையும் அத்த கைய தீர்மானத்துக்கான அடிப்படையும்;

(ஈ) இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுசெய்யப்பட்ட ஒப்பீட்டுமுறை பயன்படுத்தப்பட்டி ருப்பின், அவ்வுட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட விளக்கம்;

(உ) இச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான தன்னிச்சையான செயலூக்கங்காட்டுதல்களின் அடிப்படையின் மீது பணிப்பாளர் தலைமையதிபதி தனிப்பட்ட மிகைப் பொருள் திணிப்பு விளிம்பொன்றைத் தீர்மானிப்பதற்கு மறுத்தால் அம்முடிபுக்கான அடிப்படை;

(ஊ) கணக்குக்கெடுக்கப்பட்டுள்ள மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்ட இறக்குமதிகள் அல்லாத வேறு காரணங் கள் மீதான தகவலுட்பட, ஊறையும் காரணம்சார் தொடர்பையும் தீர்மானிப்பதற்கு இட்டுச்சென்றுள்ள காரணிகள்;

(எ) ஏற்றுமதியாளர்களினாலும் இறக்குமதியாளர்களினாலும் செய்யப்பட்ட இயைபான வாதங்களை அல்லது உரிமைக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதற்கான அல்லது நிராகரிப்பதற்கான காரணங்கள்;

(ஏ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் விதிக்கப்பட்ட மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைகள் எவையேனுமிருப்பின், அவற்றின்தொகை; அத்துடன்

(ஐ) தற்காலிக வழிமுறைகள் எவ்விறக்குமதிகளுக்கு ஏற்புடையனவாக்கப்பட்டனவோ அவ்விறக்குமதிகள் தொடர்பாக இறுதி மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு தீர்வைகள் சேகரிக்கப்படவேண்டியிருப்பின், அவ்வாறு செய்வதற்கான முடிபுக்கான காரணங்கள்.

(5) பொதுமக்கள் பார்வையிடுவதற்காக (3) ஆம் உட்பிரிவின்கீழ் அறிக்கையைக் கிடைக்கக்கூடியதாக்குவதிலிருந்து ஏழு நாட்கள் கொண்ட காலப்பகுதியொன்றினுள், அத்தகைய அறிக்கையிற் காணப்படுகின்ற எவையேனும் எழுதும்போது விடப்பட்ட பிழைகள் எவரேனும் அக்கறைகொண்டுள்ள திறத்தவர் பணிப்பாளர் தலைமையதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவருமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, அவசியமென அவர் கருதுமிடத்து, அத்தகைய பிழையை நிவர்த்தி செய்யலாம்.

(6) இரண்டாம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலினது பிரதியொன்றும் (3) ஆம் உட்பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட அறிக்கையினது பிரதியொன்றும், எந்த நாட்டின் அல்லது நாடுகளின் உற்பத்திப்பொருள் இறுதித் தீர்மானத்துக்கு அமைந்ததாக இருந்ததோ அந்த நாட்டுக்கும் அல்லது நாடுகளுக்கும், பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அறியப்பட்ட அக்கறைகொண்டுள்ள வேறெவரேனும் திறத்தவர்களுக்கும் அனுப்பப்படுதல் வேண்டும்.

வெளிப்படுத்தல்.

**40.** பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின் 39 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழான அறிவித்தல் வெளியிடப்பட்டதிலிருந்து பதினைந்து நாட்கள் கொண்ட காலப்பகுதியொன்றினுள் செய்யப்படும் வேண்டுகோளின்மீது, தனிவேறான வெளிப்படுத்துகைக் கூட்டங்களை நடாத்தும்படி வேண்டுகோள்விடுக்கும் ஏற்றுமதியாளர்களுடன் அல்லது உற்பத்தியாளர்களுடன், அவ் ஏற்றுமதியாளருக்கு அல்லது உற்பத்தியாளருக்கு இறுதியாக ஏற்புடைய தாக்கப்பட்ட மிகைப் பொருள் திணிப்புக் கணிப்பீட்டு முறைமையியலை விளக்குவதற்கென, அத்தகையவொரு கூட்டத்தை நடாத்துதல் வேண்டும்.

## தற்காலிக வழிமுறைகள்

தற்காலிக வழிமுறைகளை விதித்தல்.

**41.** (1) மிகைப்பொருள் திணிப்பு, ஊறு மற்றும் மிகைப்பொருள் திணிப்புக்கும் ஊறுக்கும் இடையே இரு காரணம்சார் தொடர்பு உள்ளமை பற்றிப் பணிப்பாளர் தலைமையதிபதி உறுதிப்பாடான பூர்வாங்க தீர்மானமொன்றைச் செய்யுமிடத்தும், நுண்ணாய்வின் போது ஊறு தொடர்ந்து நடாத்தப்படுவதனைத் தடுப்பதற்குத் தற்காலிக வழிமுறைகள் அவசியமாகவுள்ளதென அபிப்பிராயப் படுமிடத்தும், அவர் தனது அபிப்பிராயத்தை அமைச்சருக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அபிப்பிராயத்தை அமைச்சர் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச் சருக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், அமைச்சரின் கலந்தாலோசனையுடன், தற்காலிக வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதா அல்லவா என்பது பற்றியும், விதிக்கப்பட வேண்டிய தற்காலிகத் தீர்வை ஏதேனுமிருப்பின், அதன் தொகை பற்றியும் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதி, விதிக்கப்பட்ட அத்தகைய தீர்வை பற்றிய அறிவித்தல், வர்த்தமானியிலும் இலங்கையில் பரந்தளவில் புழக்கத்திலுள்ள ஏதேனும் செய்தித்தாளிலும் மூன்றுமொழிகளிலும் வெளியிடப்படுவதனைச் செய்வித்தலும் வேண்டும்.

(3) மிகைப்பொருள் திணிப்பு பற்றிய எதிர்மாறான பூர்வாங்கத் தீர்மானமொன்று தானாகவே நுண்ணாய்வை முடிவுறுத்துதலா காது, ஆனால் அத்தகையவொரு விடயத்தில் தற்காலிக வழிமுறை கள் எவையும் விதிக்கப்படுதலாகாது.

விதிக்கப்பட வேண்டிய தற்காலிகத் தீர்வையின் தொகை.

**42.** நாற்பத்தியோராம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் விதிக்கப்பட்ட தற்காலிகத் தீர்வை, 31 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட பூர்வாங்கத் தீர்மானம் பற்றிய பகிரங்க அறிவித்தலில் எடுத்துக்கூறப்பட்ட மதிப்பிடப்படும் மிகைப்பொருள் திணிப்பு விளிம்பிற்கு அதிகமாக இருத்தலாகாது.

*தற்காலிக வழிமுறைகளின் ஏற்புடைமைக் காலப்பகுதி.*

**43.** (1) நுண்ணாய்வு ஆரம்பித்துவைக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்று முடிவுறும்வரை தற்காலிக வழிமுறைகள் விதிக்கப்படுதலாகாதென்பதுடன், ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குப் பொதுவாக ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, சம்பந்தப்பட்ட தொழிலின் குறிப்பிடத்தக்க நூற்றுவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஏற்றுமதியாளர்களினால் அதற்கெனச் செய்யப்படும் வேண்டுகோளின் பேரில், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தற்காலிக வழிமுறைகளின் ஏற்புடைமைக் காலப்பகுதியை ஒன்பது மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு நீடிக்கலாம்.

(3) இச்சட்டத்தின் 48 ஆம், 49 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், 41ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தற்காலிக வழிமுறைகளை ஏற்புடையனவாக்குவதில் ஏற்றமாற்றங்களுடன் பின்பற்றப்படுதல் வேண்டும்.

## விலைப்பொறுப்பேற்புகள்

*விலைப் பொறுப்பேற்புகள் தொடர்பான பொறுப்பேற்புகள்.*

**44.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி, எவரேனும் ஏற்றுமதியாளரின் விலைகளை மீளாய்வதற்கு அல்லது மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்ட விலைகளில் சம்பந்தப்பட்ட இடப்பரப்புக்கு ஏற்றுமதிகளை இல்லாதொழிப்பதற்கு அந்த ஏற்றுமதியாளரிடமிருந்தான திருப்திகரமான தன்னிச்சையான பொறுப்பேற்புகள் பெற்றுக்கொள்ளப்பட்டதன்மேலும், மிகைப்பொருள் திணிப்பின் ஊறுபாடான விளைவு இல்லாதொழிக்கப்பட்டதெனப் பணிப்பாளர் தலைமையதிபதி திருப்திப்படுவதன்மேலும், தற்காலிக வழிமுறைகளை அல்லது மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைகளை விதிக்காமல் நுண்ணாய்வொன்றை இடைநிறுத்தி வைக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கொடுக்கப்பட்டவொரு பொறுப்பேற்பின் விளைவாக விதிக்கப்படும் எவையேனும் விலை அதிகரிப்புகள் மிகைப்பொருள் திணிப்பு விளிம்பை இல்லாதொழிப்பதற்கு அவசியமானதற்குக் கூடுதலாக இருத்தலாகாதென்பதுடன்,

குறைவானவொரு விலை அதிகரிப்பு இலங்கைக் கைத்தொழிலுக்கான ஊறை அகற்றுவதற்குப் போதியதாகவிருக்கும் எனப் பணிப்பாளர் தலைமையதிபதி தேசியப் பொருளாதாரத்தின் நலன் கருதித் தீர்மானிக்குமிடத்து, விதிக்கப்படும் விலை அதிகரிப்பு, மிகைப்பொருள் திணிப்பு விளிம்பைவிடக் குறைவானதாக இருக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக விலைப் பொறுப்பேற்புப் பற்றிப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஆலோசனை கூறப்படலாம். ஆனால் ஏற்றுமதியாளர் எவரும் அத்தகையவொரு பொறுப்பேற்பைச் செய்துகொள்வதற்கு வலுக்கட்டாயப்படுத்தப்படுதலாகாது.

(4) ஏற்றுமதியாளர்கள் எவையேனும் விலைப்பொறுப்பேற்புகளை முனைவதில்லை அல்லது அவ்வாறு செய்வதற்கான வரவழைப்பொன்றை ஏற்றுக்கொள்வதில்லை என்ற நிகழ்வு விடயத்தைக் கவனத்துட்கொள்வதனை எவ்வகையிலும் பங்கப்படுத்துதலாகாது, ஆனால் மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்ட இறக்குமதிகள் தொடர்ந்து நடைபெற்றால், ஊறுக்கான அச்சுறுத்தல் நிறைவேற்றப்படக்கூடிய சாத்தியம் கூடுதலாகவுள்ளதெனத் தீர்மானிப்பதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதி சுதந்திரமுடையவராதல் வேண்டும்.

(5) விதிவிலக்கான சூழ்நிலைகளிற்றவிர, (1) ஆம் உட்பிரிவின் கீழான விலைப்பொறுப்பேற்பொன்று, இறுதித் தீர்மானத்தின் உத்தேசிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் இரண்டு மாதகாலப்பகுதியொன்றுக்குக் குறையாத எந்நேரத்திலும் எவரேனும் ஏற்றுமதியாளரினால் முனையப்படலாம்.

*விலைப் பொறுப் பேற்புகளை ஏற்றுக் கொள்வதற் கான நிபந்தனைகள்.*

**45.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி, மிகைப்பொருள் திணிப்பு, ஊறு மற்றும் காரணம்சார் தொடர்பு என்பனபற்றியவொரு பூர்வாங்க உறுதிப்பாடான தீர்மானம் செய்யப்படும்வரை, ஏற்றுமதி யாளர்களிடமிருந்து எவையேனும் விலைப் பொறுப்பேற்புகள் பற்றி ஆலோசனை கூறுவதற்கு அல்லது அவற்றை ஏற்றுக்கொள்வதற்கு நாடுதலாகாது.

(2) உள்ளபடியான ஏற்றுமதியாளர்களின் அல்லது ஏற்றுமதியாளர்களாக வரவிருப்போரின் எண்ணிக்கை மிக அதிகமாக விருக்கின்றமை போன்ற அல்லது பொதுக் கொள்கை பற்றிய காரணங்கள் உட்பட, வேறெவையேனும் காரணங்களுக்காக, முனையப்படும் பொறுப்பேற்புகளை ஏற்றுக்கொள்ளுதல் செயல்முறைக்குக் கந்ததல்ல எனப் பணிப்பாளர் தலைமையதிபதி கருதினால் அவை அவரினால் ஏற்றுக்கொள்ளப்படாதிருக்கலாம்.

(3) பொறுப்பேற்பொன்றை ஏற்றுக்கொள்ளாதிருப்பதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதி முடிபுசெய்யுமிடத்து, பொறுப்பேற்பொன்றை ஏற்றுக்கொள்ளுதல் தோதற்றதெனக் கருதுவதற்கு இட்டுச்சென்றுள்ள காரணங்களை அவர் ஏற்றுமதியாளருக்கு வழங்குதல் வேண்டுமென்பதுடன், அதன் மீதான எழுத்திலான கருத்துரைகளைத் தெரிவிப்பதற்கு அத்தகைய ஏற்றுமதியாளருக்கு வாய்ப்பொன்றை அவர் அளித்தலும் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, எந்த ஏற்றுமதியாளரிடமிருந்து பொறுப்பேற்பொன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோ அந்த ஏற்றுமதியாளரிடமிருந்து, அத்தகைய பொறுப்பேற்பு நிறைவேற்றப்பட்டமைக்கு இயைபான தகவலைக் காலாகாலம் வழங்கும்படியும், அவ்வாறு வழங்கப்படும் தகவலைச் சரிபார்ப்பதற்கு அனுமதியளிக்கும்படியும் தேவைப்படுத்தலாம். இத்தரவுகளை அறிவித்தலானது, இரகசியத்தன்மை தொடர்பான பிரிவின் ஏற்பாடுகளுக்கமையவிருத்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதியினால் வேண்டுகோள் விடுக்கப்பட்ட தகவலை வழங்கத் தவறுதலானது, பொறுப்பேற்பின் மீறுகையாகக் கருதப்படலாம்.

(5) முனைவு செய்யப்பட்ட விலைப்பொறுப்பேற்புகள் விதித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய நடவடிமுறையைப் பின்பற்றியும் அமுலாக்கப்படுதல் வேண்டும்.

நுண்ணாய்வைப் பூர்த்தி செய்தல்.

**46.** (1) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொறுப்பேற்புகளை ஏற்றுக்கொண்டமை எவ்வாறிருப்பினும், பணிப்பாளர் தலைமையதிபதி, ஏற்றுமதியாளர் அவ்வாறு விரும்புமிடத்து அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி அவ்வாறு முடிபுசெய்யுமிடத்து, மிகைப்பொருள் திணிப்பு மற்றும் ஊறு பற்றிய நுண்ணாய்வைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின்கீழான நுண்ணாய்வைப் பூர்த்தி செய்கின்றவொரு விடயத்திலும் -

(அ) மிகைப்பொருள் திணிப்பு அல்லது ஊறு பற்றி எதிர் மாறான தீர்மானமொன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதி செய்கின்ற விடயத்திலும், அத்தகையவொரு தீர்மானம், அத்தகைய பொறுப்பேற்புகள் உள்ளமை காரணமாகவே பெருமளவில் இருக்கின்ற விடயங்களிற் றவிர, அப்பொறுப்பேற்புகள் தாமாகவே காலம்கடந்து போதல் வேண்டுமென்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதி, தம்மால் தீர்மானிக்கப்படவேண்டியவாறான நியாயமானவொரு காலப்பகுதிக்குப் பொறுப்பேற்பொன்று பேணப்படுதல் வேண்டும் எனவும் தீர்மானிக்கலாம்;

(ஆ) மிகைப்பொருள் திணிப்பு அல்லது ஊறு பற்றி உறுதிப்படுத்துவதான தீர்மானமொன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதி செய்கின்ற விடயத்திலும், பொறுப்பேற்பின் நியதிகள் தீர்மானத்தின் அளவிற்கு சீர்செய்யப்பட்டதாதல் வேண்டும்.

பொறுப்பேற்புகளை மீறுதல்.

**47**. நாற்பத்திநான்காம் பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட பொறுப்பேற்பொன்று மீறப்படுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுக, கிடைக்கக்கூடியதாகவுள்ள மிகச் சிறந்த தகவலைப் பயன்படுத்தி, தற்காலிக வழிமுறைகளை விதிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான எல்லா அவசியமான நடபடிகளையும் எடுக்கலாம். அத்தகைய விடயங்களில், அத்தகைய தற்காலிக வழிமுறைகள் ஏற்புடையனவாகு முன்னர் மூன்று மாதகாலப்பகுதியொன்றுக்கு மேற்படாமல், பாவனைக்காக இறக்குமதி செய்யப்படும் பண்டங்கள்மீது இச்சட்டத்திற்கிணங்கத் தீர்க்கமான தீர்வைகள் அத்தகைய ஏதேனும் மதிப்பீடு, பொறுப்பேற்பு மீறப்படுமுன்னர் உட்கொணரப்பட்ட இறக்குமதிகளுக்கு ஏற்புடையதாதலாகாது என்பதுதவிர, அறவிடப்படலாம்.

## மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைகளை விதித்தலும் சேகரித்தலும்

*மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைகளை விதித்தலும் சேகரித்தலும்.*

**48.** (1) மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைகள், பெறுமதிப்படியான அல்லது குறிப்பிட்ட தீர்வைகளின் வடிவத்தை எடுத்தல் வேண்டுமென்பதுடன், சம்பந்தப்பட்ட இறக்குமதி செய்யப்படும் உற்பத்திப்பொருட்களின்மீது அறவிடப்படும் ஏனைய இறக்குமதித்தீர்வைகளுக்கு மேலதிகமானவையாக விதிக்கப்படுதலும் வேண்டும்.

(2) மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைகள், சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் சேகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், தீர்வைகளைச் சேகரித்தல் தொடர்பாகச் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அதற்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(3) நான்காம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்ட சூழ்நிலைகளிற்றவிர, பணிப்பாளர் தலைமையதிபதி, சம்பந்தப்பட்ட மிகைப் பொருளாகத் திணிக்கப்படும் இறக்குமதிகளின் ஒவ்வோர் அறியப் பட்ட ஏற்றுமதியாளருக்கும் அல்லது உற்பத்தியாளருக்கும் தனிப்பட்ட மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வையை நிர்ணயித்தல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கிணங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி விசாரணையை வரையறுத்துள்ளபோது, விசாரணையில் உள்ளடக்கப்படாத ஏற்றுமதியாளர்களிடமிருந்தான அல்லது உற்பத்தியாளர்களிடமிருந்தான இறக்குமதிகளுக்கு ஏற்புடைய தாக்கப்படும் ஏதேனும் மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வை, தெரிவுசெய்யப்பட்ட ஏற்றுமதியாளர்கள் அல்லது உற்பத்தியாளர்கள் தொடர்பில் நிர்ணயிக்கப்பட்ட நிறையளித்த சராசரி மிகைப்பொருள் திணிப்பு விளிம்பை விஞ்சுதலாகாது; ஆயின், பணிப்பாளர் தலைமையதிபதி, எவையேனும் பூச்சிய அல்லது ஆகக்குறைந்த விளிம்புகளையும் 26 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சூழ்நிலைகளின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட விளிம்புகளையும் இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காகப் புறக்கணித்தல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளில் வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, பணிப்பாளர் தலைமையதிபதி, நுண்ணாய்வின்போது அவசியமான தகவலை வழங்கியுள்ளவரும் விசாரணையில் உள்ளடக்கப்படாதவருமான எவரேனும் ஏற்றுமதியாளரிடமிருந்தான அல்லது உற்பத்தியாளரிடமிருந்தான இறக்குமதிகளுக்குத் தனிப்பட்ட தீர்வைகளை ஏற்புடையனவாக்குதலும் வேண்டும்.

(6) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், இறுதித்தீர்மானம் செய்யப்பட்ட நேரத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்குத் தெரியாத ஏற்றுமதியாளர்களிடமிருந்தும் உற்பத்தியாளர்களிடமிருந்துமான இறக்குமதிகளுக்காக மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத்தீர்வை வீதத்தை ஏற்புடையதாக்கலாம். அத்தகைய மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத்தீர்வை வீதம், இச்சட்டத்தின் 26 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சூழ்நிலைகளின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட விளிம்புகள் நீங்கலாக, நுண்ணாய்வின்போது விசாரணை செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட தனிப்பட்ட மிகைப்பொருள் திணிப்பு விளிம்புகளின் நிறையளித்த சராசரியை விஞ்சுதலாகாது.

*மிகைப்பொருள் திணிப்பு விளிம்புக்கு விஞ்சுதலாகச் செலுத்தப்பட்ட தீர்வைகளை மீளளித்தல்.*

**49.** (1) எந்த மிகைப்பொருள் திணிப்பு விளிம்பின் அடிப்படையில் தீர்வைகள் செலுத்தப்பட்டனவோ அந்த மிகைப்பொருள் திணிப்பு விளிம்பு இல்லாதொழிக்கப்பட்டுள்ளது அல்லது வலுவிலுள்ள தீர்வையின் மட்டத்துக்குக் கீழான ஒரு மட்டத்துக்குக் குறைக்கப்பட்டுள்ளதெனப் பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்குமிடத்து, இறக்குமதியாளரொருவருக்குச் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் சேகரிக்கப்படும் தீர்வைகளின் மீளளிப்பொன்று அளிக்கப்படுதல் வேண்டும்.

(2) இறக்குமதியாளர், ஏதேனும் ஆறு மாதகாலப்பகுதியினுள் சேகரிக்கப்படும் மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைகளின் மீளளிப்புக்காக, அக்காலப்பகுதியின் முடிவில் இருந்து இரண்டு மாத காலப்பகுதியொன்றினுள், பணிப்பாளர் தலைமையதிபதிக்கு

விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அக்காலப் பகுதிக்காக உரிமை கோரப்பட்ட மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைகளின் மீளளிப்புத்தொகை மற்றும் அத்தகைய தொகையைக் கணக்கிட்டுக் கொடுப்பனவு செய்வது தொடர்பான எல்லாச் சுங்க ஆவணப்படுத்துதலும் பற்றிய தகவலைக் கொண்டிருத்தல் வேண்டும். எந்த ஏற்றுமதியாளருக்கு அல்லது உற்பத்தியாளருக்குத் தீர்வை ஏற்புடையதாகவுள்ளதோ அந்த ஏற்றுமதியாளருக்காக அல்லது உற்பத்தியாளருக்காக, இலங்கைக்கான வழமையான பெறுமதியும் ஏற்றுமதி விலைகளும் பற்றிய சான்றையும் அது உள்ளடக்குதல் வேண்டும்.

(3) இறக்குமதியாளர், உற்பத்தியாளருடன் அல்லது ஏற்றுமதியாளருடன் இணைந்திராத, அத்துடன் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தகவல் உடனடியாகக் கிடைக்கக்கூடியதாக விராத அல்லது உற்பத்தியாளர் அல்லது ஏற்றுமதியாளர் அதனை இறக்குமதியாளருக்கு அளிப்பதற்கு விரும்பாதுள்ள ஏதேனும் விடயத்தில், மிகைப்பொருள் திணிப்பு விளிம்பு குறைக்கப்பட்டுள்ளது அல்லது இல்லாதொழிக்கப்பட்டுள்ளது என்றும், இயைபான ஆதாரப்படுத்துகின்ற சான்று பணிப்பாளர் தலைமையதிபதிக்கு நேரடியாக வழங்கப்படும் என்றும் கூறுகின்ற, உற்பத்தியாளரிடமிருந்தான அல்லது ஏற்றுமதியாளரிடமிருந்தான கூற்றொன்றை விண்ணப்பமானது கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய சான்று நியாயமானவொரு காலப்பகுதியினுள் ஏற்றுமதியாளரிடமிருந்து அல்லது உற்பத்தியாளரிடமிருந்து கிடைக்காதவிடத்து, விண்ணப்பமானது நிராகரிக்கப்படுதல் வேண்டும்.

(4) மீளளிப்பொன்றுக்கான விண்ணப்பத்தை நுண்ணாய்வு செய்வதில் பணிப்பாளர் தலைமையதிபதி தனது தீர்மானத்திற்கு நுண்ணாய்வொன்றை நடாத்துதல் தொடர்பாக இச்சட்டத்தின் இயைபான ஏற்பாடுகளை ஏற்புடையனவாக்குதல் வேண்டும். குறிப்பாக, ஏற்றுமதி விலை இல்லாதமையினால் அல்லது ஏற்றுமதிவிலை, 9 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி நம்பகமற்றதெனத் தோன்றும் காரணமாக, இறக்குமதிசெய்யப்பட்ட உற்பத்திப்பொருட்கள் எந்தவிலைக்குத் தனிப்பட்ட வாங்குநரொருவருக்கு முதன்முதலாக மீளவிற்பனை செய்யப்படுகின்றனவோ அந்த விலையின் அடிப்படையில்

ஏற்றுமதிவிலை கணித்தமைக்கப்படும்போது மீளளிப்பொன்று செய்யப்படவேண்டுமாவென்பதையும் அது எந்த அளவுக்குச் செய்யப்படவேண்டுமென்பதையும் தீர்மானிக்கும்போது, பணிப்பாளர் தலைமையதிபதி, வழமையான பெறுமதியிலான ஏதேனும் மாற்றத்தையும், அடுத்துப் பின்னரான விற்பனை விலைகளில் உரியமுறையில் பிரதிபலிக்கப்படும் மீள்விற்பனை விலைகளிலான ஏதேனும் அசைவையும் கணக்குக்கெடுத்தல் வேண்டுமென்பதுடன், மேலேயுள்ளவை பற்றித் திருப்திகரமான சான்று வழங்கப்படும்போது செலுத்தப்பட்ட மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைகளின் தொகைக்காகக் கழிப்பன வெதுவுமின்றி ஏற்றுமதி விலையைக் கணக்கிடுதலும் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி, மீளளிப்புக்கான வேண்டுகோள் சம்பந்தமான தீர்மானத்திற்கான காரணங்கள் பற்றிய விபரமான விளக்கமொன்றை வேண்டுகோள் விடுக்கின்ற இறக்குமதியாளருக்கு வழங்குதல் வேண்டும்.

(6) தீர்வைகளின் மீளளிப்புகள், மீளளிப்புக்கான விண்ணப்பமொன்று எத்தேதியன்று செய்யப்பட்டதோ அத்தேதிக்குப்பின்னர் பன்னிரெண்டு மாத காலப்பகுதியொன்றினுள்ளும் எவ்விடயத்திலும் பதினெட்டு மாதங்களுக்கு மேற்படாமலும் பொதுவாக நடைபெறுதல் வேண்டும். அதிகாரமளிக்கப்படும் ஏதேனும் மீளளிப்பு, மீளளிப்பொன்றைச் செய்வதற்கான தீர்மானம் செய்யப்பட்டதிலிருந்து மூன்று மாத காலப்பகுதியினுள் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் செய்யப்படுதல் வேண்டும். இவ்வுட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட காலவரையறைகளைக் கடைப்பிடித்தலானது, சம்பந்தப்பட்ட தீர்வைகளை ஏற்புடையனவாக்குவதற்கான தீர்மானம், நீதிமுறை மீளாய்வு நடவடிக்கையொன்றுக்கு அமைந்ததாகவுள்ளவிடத்து இயன்றதாகாதிருக்கலாம்.

(7) இப்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இதன்கண் குறிப்பீடுசெய்யப்படும் காலவரையறைகள், விடயப்பொருள் நீதிமுறையில் மீளாயப்படுவதன் விளைவாக கண்டிப்பாகக் கடைப்பிடித்தல் இயன்றதாகவிராதிருக்குமிடத்து அவ்வாறு கடைப்பிடிக்கப்படாதிருக்கலாம்.

**50.** (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், பணிப்பாளர் தலைமையதிபதியின் கலந்தாலோசனையுடனும் அமைச்சுகளிடையிலான குழுவின் விதப்புரைகளின் மேலும், குறித்துரைப்பட்டவொரு காலப்பகுதிக்கு, இச்சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட அத்தகைய தற்காலிக வழிமுறைகளின் பிரயோகத்தை அல்லது மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைகளை இடைநிறுத்தி வைக்கலாம். இடைநிறுத்தி வைத்தல்.

(2) தற்காலிக வசதிமுறைகளின் பிரயோகத்தை அல்லது மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைகளை இடைநிறுத்துவதற்கான முடிபு தேசிய பொருளாதார நலனைக் கருத்திற் கொண்டும்–

(அ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் கலந்தாலோசனையுடன், அமைச்சர் விதித்துரைக்கக் கூடியவாறான சந்தை நிலைமைகள் உட்பட அத்தகைய காரணிகளின் பரிசோதனையொன்றைப் பின்பற்றியும்; அத்துடன்

(ஆ) விடயத்தில் கருத்துரைகளுக்கான இலங்கைக் கைத்தொழி லுக்கு சந்தர்ப்பத்தை அளித்தும்,

எய்தப்படுதல் வேண்டும்.

**பின்னோக்கிய செயற்பாடு**

**51.** இச்சட்டத்தின் 47 ஆம், 52 ஆம் மற்றும் 53 ஆம் பிரிவுகளில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, தற்காலிக வழிமுறைகளும் மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைகளும், இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் நடாத்தப்பட்ட நுண்ணாய்வொன்றில் அல்லது இச்சட்டத்தின் 57 முதல் 59 வரையிலான பிரிவுகளின்கீழ் நிறைவேற்றப்படும் மீளாய்வொன்றில், உறுதிப்பாடான பூர்வாங்க அல்லது இறுதித்தீர்மானம் வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது அதன்பின்னர், பாவனைக்காக இலங்கைக்குள் உட்கொணரப்படுகின்ற உற்பத்திப்பொருட்களுக்கு மட்டுமே ஏற்புடையனவாக்கப்படுதல் வேண்டும். பின்னோக்கிய செயற்பாடு பற்றிய நெறி.

குறித்தசில சூழ்நிலைகளில் தீர்க்கமான தீர்வைகளின் முன்னோக்கிச் செயற்படும் ஏற்புடைமை.

**52.** சம்பந்தப்பட்ட மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்ட உற்பத்திப்பொருள் தொடர்பாகப் பணிப்பாளர் தலைமையதிபதி பின்வருமாறு தீர்மானிக்குமிடத்து, தீர்க்கமான மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வையொன்று, தற்காலிக வழிமுறைகள் ஏற்புடையதாகும் தேதிக்குமுன்னர் மூன்று மாத காலப்பகுதியொன்றுக்கு மேற்படாமல் பாவனைக்கு உட்கொணரப்பட்ட உற்பத்திப் பொருட்களின்மீது சேகரிக்கப்படலாம்:–

(அ) ஊறை விளைவித்த மிகைப்பொருள் திணிப்புப் பற்றிய வரலாறு உள்ளதென்றும் அல்லது ஏற்றுமதியாளர் மிகைப்பொருள் திணிப்பைப் புரிகின்றாரென்றும் அத்தகைய மிகைப்பொருள் திணிப்பு ஊறுவிளைவிக்குமென்றும் இறக்குமதியாளர் அறிந்திருந்தர் அல்லது அறிந்திருக்கவேண்டியவராக இருந்தாரென்றும்; அத்துடன்

(ஆ) நேரகாலத்தின் நோக்கிலும் மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்ட இறக்குமதிகளின் தொகையினதும் ஏனைய சூழ்நிலைகளினதும் நோக்கிலும் (இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் பொருட்பட்டியல் களின் துரிதமான தயாரிப்புப்போன்று) ஏற்புடையதாக்கப் படவுள்ள தீர்க்கமான மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வையின் பரிகரிப்பு ரீதியிலான பயனைப் பாரதூரமானவகையில் அழித்துவிடும் சாத்தியம் கொண்டதாகவிருக்கின்ற, ஒப்பீட்டுமுறையிலான குறுகியகாலத்தில் உற்பத்திப் பொருளொன்றின் பெருமளவினதான மிகைப் பொருளாகத் திணிக்கப்பட்ட இறக்குமதிகளினால் ஊறானது விளைவிக்கப்படுகின்றதென்றும்; ஆயின் சம்பந்தப்பட்ட இறக்குமதியாளர்களுக்குக் கருத்துரைகளைத் தெரிவிப்பதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தற்காலிகத் தீர்வைகளின் தீர்க்கமான சேகரிப்பு.

**53.** (1) ஊறுபற்றிய இறுதித்தீர்மானமொன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதி செய்யுமிடத்து, (ஆனால் அது தொடர்பான அச்சுறுத்தல் பற்றியல்ல அல்லது ஒரு கைத்தொழிலைத் தாபித்தல் பற்றிய முக்கியமான தாமதம் தொடர்பான அச்சுறுத்தல் பற்றியல்ல)

அல்லது, ஊறு பற்றிய அச்சுறுத்தலின் இறுதித்தீர்மானத்தின் விடயத்தில், மிகைப்பொருள் திணிக்கப்பட்ட இறக்குமதிகளின் பயன், தற்காலிக வழிமுறைகள் இல்லாதபோது, ஊறு பற்றிய தீர்மானமொன்று இட்டுச்சென்றிருக்குமெனப் பணிப்பாளர் தலைமையதிபதி கருதுமிடத்து, தற்காலிக வழிமுறைகள் எவையேனுமிருப்பின், அவை ஏற்புடையனவாக்கப்பட்டுள்ள காலப் பகுதிக்காகத் திட்டவட்டமான மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைகள் பின்னோக்கிச் செயற்படும் ரீதியில் அறவிடப்படலாம்.

(2) தீர்க்கமான மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத்தீர்வை, தற்காலிக வழிமுறையின் நோக்கத்துக்காக மதிப்பிடப்பட்ட தொகையிலும் பார்க்க கூடுதலாகவுள்ளவிடத்து, வித்தியாசமானது சேரிக்கப்படுதலாகாது, ஆனால் தீர்க்கமான தீர்வையானது பிணைப் பொறுப்பின் நோக்கத்துக்காக மதிப்பிடப்பட்ட தொகைக்குக் குறைவாகவுள்ளவிடத்து, வித்தியாசமானது மீளளிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறுதவிர, ஊறு அல்லது முக்கியமான தாமதம் பற்றிய அச்சுறுத்தல் தொடர்பான தீர்மானமொன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதி செய்யுமிடத்து (ஆனால் ஊறெதுவும் இதுவரை ஏற்படாதபோது), தீர்க்கமான மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வையொன்று, ஊறு அல்லது முக்கியமான தாமதம் பற்றிய அச்சுறுத்தல் தொடர்பான தீர்மானத்தின் தேதியிலிருந்து மட்டுமே விதிக்கப்படலாம். செலுத்தப் படும் ஏதேனும் தற்காலிகத்தீர்வை, ஒன்றரை மாத காலப்பகுதியொன்றினுள் மீளளிக்கப்படுதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி எதிர்மாறான இறுதித் தீர்மானமொன்றைச் செய்யுமிடத்து. விண்ணப்பக் காலப்பகுதியின் போது செலுத்தப்படும் ஏதேனும் தற்காலிகத்தீர்வை, ஒன்றரை மாத காலப்பகுதியொன்றினுள் மீளளிக்கப்படுதல் வேண்டும்.

### வழிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் முடிவுறுத்தல்

*போதியதற்ற சான்று, ஆகக்குறைந்த மிகைப் பொருள் திணிப்பு விளிம்பு அல்லது ஆகக்குறைந்த தொகை என்பவற்றுக்கான முடிவுறுத்துகை.*

**54.** *(1)* நுண்ணாய்வொன்றை மேற்கொண்டு நடாத்துவதனை நியாயப்படுத்துவதற்கு, ஒன்றில் மிகைப்பொருள் திணிப்பு அல்லது ஊறு பற்றிப் போதிய சான்றில்லையெனப் பணிப்பாளர் தலைமையதிபதி திருப்திப்படுமிடத்து, நுண்ணாய்வானது எந்நேரத்திலும் முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

*(2)* மிகைப்பொருள் திணிப்பு விளிம்பு ஆகக்குறைவாகவுள்ளது, அல்லது உள்ளபடியாக அல்லது உணர்த்துகின்றமிகைப் பொருளாகத் திணிக்கப்பட்ட இறக்குமதிகள் தொகையளவு அல்லது ஊறு புறக்கணிக்கத்தக்கதாகவுள்ளது எனப் பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானித்தால், நுண்ணாய்வொன்றை அவர் முடிவுறுத்து தல் வேண்டும்.

*(3)* இரண்டாம் உட்பிரிவின் நோக்கத்துக்காக-

(அ) மிகைப்பொருள் திணிப்பு விளிம்பானது, ஏற்றுமதி விலையின் நூற்றுவீதமொன்றாக வெளிப்படுத்தப்படும், இரண்டு சதவீதத்துக்குக் குறைவாகவிருப்பின், அவ் விளிம்பானது ஆகக்குறைந்ததாகவிருப்பதாகக் கருதப் படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இலங்கையில் நுண்ணாய்வு செய்யப்பட்டதும் அதேபோன்றதுமான உற்பத்திப்பொருளின் மொத்த இறக்குமதிகளின், மூன்று சதவீதத்துக்குக் குறைந்தவற்றுக்குத் தனித்தனியாகக் கணக்குக் காட்டுகின்றனவான, நுண்ணாய்வின் கீழுள்ள எல்லா நாடுகளிலுமிருந்தான நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் இறக்குமதிகள், இலங்கையில் நுண்ணாய்வு செய்யப்பட்டதும் அதேபோன்றதுமான உற்பத்திப்பொருளின் ஏழு சதவீதத்திற்கு அதிகமானதற்குக் கூட்டாகக் கணக்குக் காட்டினாலொழிய, குறித்த நாடொன்றிலிருந்து நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருட்களின் மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்ட இறக்குமதிகளின் தொகை இலங்கையில் நுண்ணாய்வு செய்யப்பட்டதும்

அதேபோன்றதுமான உற்பத்திப்பொருளின் மொத்த இறக்குமதிகளின் மூன்று சதவீதத்திலும் பார்க்க குறைவானதற்கு கணக்குக்காட்டுவதாகக் கண்டுபிடிக் கப்படின், புறக்கணிக்கத்தக்கதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

*வழிமுறைகளை விதிக்காமல் நுண்ணாய் வொன்று முடிவுற்றமை பற்றிய பகிரங்க அறிவித்தல்.*

**55**. பணிப்பாளர் தலைமையதிபதி, இரகசியமான தகவலைப் பாதுகாப்பதற்கான தேவைப்பாட்டுக்கு உரிய கவனஞ்செலுத்தி, வழிமுறைகளை விதிக்காமல் நுண்ணாய்வொன்று முடிவுற்றமை பற்றிய பகிரங்க அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டும்; விடயத்துக்கேற்ப, வாதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்கு அல்லது நிராகரிக்கப்பட்டமைக்கு இட்டுச்சென்றுள்ள நிகழ்வு மற்றும் சட்டம் பற்றிய கருமங்களுட்பட, பணிப்பாளர் தலைமையதிபதியினால் முக்கியமானவை எனக் கருதப்படும் நிகழ்வு மற்றும் சட்டம் பற்றிய எல்லா வழக்கெழுவினாக்கள்மீதும் எய்தப்பட்ட முடிவெடுப்புக்க ளையும் முடிபுரைகளையும் போதிய விபரமாக அது எடுத்துக்கூறு தல் வேண்டும்.

## மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புக் கடமைகளினதும் விலைப் பொறுப்பேற்புக்களினதும் கால நீட்டியும் மீளாய்வும்

*மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வையொன்றின் காலநீட்சி.*

**56**. (1) மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வையொன்று, ஊறு விளைவிக்கின்ற மிகைப்பொருள் திணிப்பை எதிர்மாறாக்கு வதற்கு அவசியமான காலம் வரையும் அவசியமான அளவுக்கும் வலுவிலிருத்தல் வேண்டும்.

(2) ஏதேனும் தீர்க்கமான மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு தீர்வை, அது விதிக்கப்படுவதிலிருந்து ஐந்தாண்டுகள் காலப்பகுதி யொன்றிற்குப் பிந்தாதவொரு தேதியன்று அல்லது 57 ஆம் பிரிவின்கீழ் மிக அண்மைக் காலத்தைய மீளாய்வுத் தேதியிலிருந்து, அம்மீளாய்வு, மிகைப்பொருள் திணிப்பு மற்றும் ஊறு ஆகிய இரண்டையும் மேவியிருப்பின், முடிவுறுத்தப்பட்டதாதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, தீர்க்கமான மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வை முடிவுறும் தேதிக்கு மூன்று மாத காலப்

*பகுதியொன்றிற்குப் பிந்தாமல், ஏதேனும் மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வையின் நிகழவுள்ள முடிவுறுகை பற்றி, வர்த்தமானியிலும் இலங்கையில் பரந்தளவில் புழக்கத்திலுள்ள ஏதேனும் செய்தித்தாளிலும் மூன்று மொழிகளிலும் வெளியிடுதல் வேண்டும். தீர்க்கமான தீர்வையொன்று முடிவுறுதலானது, மிகைப்பொருள் திணிப்பும் ஊறும் தொடர்ந்திருப்பதற்கு அல்லது மீள ஏற்படுத்துவதற்கு இட்டுச்செல்கின்ற சாத்தியம் கொண்டதாக விருக்குமெனப் பணிப்பாளர் தலைமையதிபதி தமது சொந்த உந்துதலின்மேல் அல்லது சம்பந்தப்பட்ட தீர்க்கமான மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைகளின் நிகழவுள்ள முடிவுறுத்துகைபற்றிய பகிரங்க அறிவித்தலிலிருந்து ஒன்றரை மாத காலப்பகுதியொன்றினுள் இலங்கைக் கைத்தொழிலினால் அல்லது அதன் சார்பில் செய்யப்படும் உரியமுறையில் ஆதாரப்படுத்தப்பட்ட வேண்டுகோளின் பேரில், முடிவுறுதல் தேதிக்குமுன்னர் ஆரம்பித்துவைக்கப்படும் மீளாய்வொன்றில் தீர்மானித்தால், அத்தீர்க்கமான தீர்வையானது முடிவுறாதிருக்கலாம். தீர்வை யானது அத்தகையவொரு மீளாய்வின் விளைவை எதிர்நோக்கி, வலுவில் தொடர்ந்திருக்கலாம்.*

*சூழ்நிலை களிலான மாற்றத்துக்கான மீளாய்வு.*

**57.** *(1) பணிப்பாளர் தலைமையதிபதி, அதிகாரமளிக்குமிடத்து, தமது சொந்த உந்துதலின்மேல் அல்லது தீர்க்கமான மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வை விதிக்கப்பட்டதிலிருந்து நியாயமான வொரு காலப்பகுதி கழிந்துள்ளவிடத்து, மீளாய்வொன்றுக்கான தேவையை ஆதாரப்படுத்துகின்ற ஆக்கபூர்வமான தகவலைக் கொண்டுள்ளதாய் அக்கறைகொண்டுள்ள எவரேனும் திறத்தவரி னால் சமர்ப்பிக்கப்படும் எழுத்திலானவொரு வேண்டுகோளின் பேரில், மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைத் தொடர்ந்து விதிக்கப்படுவதற்கான தேவையை மீளாய்தல் வேண்டும்.*

*(2) பணிப்பாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின்கீழான மீளாய்வொன்றை ஆரம்பித்து வைப்பதன்மேல், அத்தகையவொரு மீளாய்வு ஆரம்பித்து வைக்கப்பட்டமை பற்றிய வர்த்தமானியிலும் இலங்கையில் பரந்தளவில் புழக்கத்திலுள்ள ஏதேனும் செய்தித்தாளி லும் மூன்று மொழிகளிலும் அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும்.*

(3) இப்பிரிவின்கீழான மீளாய்வொன்றை நடாத்துகையில், பணிப்பாளர் தலைமையதிபதி, அக்கறைகொண்டுள்ள திறத்தவரொருவரினாற் செய்யப்படும் வேண்டுகோளின் பேரில்–

(அ) தீர்வையைத் தொடர்ந்து விதித்தலானது மிகைப்பொருள் திணிப்பைத் தவிர்ப்பதற்கு அவசியமாகவுள்ளதாவென் பதை;

(ஆ) தீர்வையானது அகற்றப்பட்டால் அல்லது வேறுபடுத்தப் பட்டால் ஊறானது தொடர்ந்திருக்கும் அல்லது மீள ஏற்படும் சாத்தியம் உண்டாவென்பதை; அல்லது

(இ) இரு சம்பவங்களும் நடைபெறுகின்றனவாவென்பதை,

பரிசோதனை செய்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழான மீளாய்வொன்றின் விளைவாக, மிகைப் பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைக்கு இனிமேல் அதிகார மளிக்கப்படவேண்டியதில்லையெனப் பணிப்பாளர் தலைமை யதிபதி தீர்மானிக்குமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய தீர்வை உடனடியாக முடிவுறுத்தப்படவேண்டுமென நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருக்கு விதந்துரைக்கவேண்டும்.

**58.** (1) உற்பத்திப்பொருளொன்று தீர்க்கமான மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைகளுக்கு அமைந்ததாகவுள்ளவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, நுண்ணாய்வுக் காலப்பகுதியின் போது இலங்கைக்கு அவ்வுற்பத்திப் பொருளை ஏற்றுமதி செய்திராத சம்பந்தப்பட்ட ஏற்றுமதி செய்கின்ற நாட்டிலுள்ள எவரேனும் ஏற்றுமதியாளர்களுக்கான அல்லது உற்பத்தியாளர்களுக்கான தனிப்பட்ட மிகைப்பொருள் திணிப்பு விளிம்புகளைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக உடனடியாக மீளாய்வொன்றை நிறைவேற்றுதல் வேண்டும். ஆயின், அத்தகைய ஏற்றுமதியாளர்கள் அல்லது உற்பத்தியாளர்கள், இறக்குமதி செய்யப்படும் நுண்ணாய்வு செய்யப் பட்ட உற்பத்திப்பொருளின் மீதான மிகைப்பொருள் திணிப் பெதிர்ப்புத் தீர்வைகளுக்கமைந்தவர்களான ஏற்றுமதி செய்யும் புதுவருகை மீளாய்வு.

நாட்டிலுள்ள ஏற்றுமதியாளர்களுள் அல்லது உற்பத்தியாளர்களுள் எவருடனும் தாம் தொடர்புபட்டிருக்கவில்லையெனக் காட்டலாம். அத்தகையவொரு மீளாய்வு, சம்பந்தப்பட்ட உற்பத்தியாளரினால் அல்லது ஏற்றுமதியாளரினால் விண்ணப்பம் பெறப்பட்ட தேதிக்குப் பின்னரும் ஒரு மாதகாலப் பகுதியினுள் ஆரம்பித்து வைக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான மீளாய்வொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டதிலிருந்து ஆறு மாதகாலப் பகுதியினுள்ளும், எச்சந்தர்ப்பத்திலும், அது ஆரம்பித்து வைக்கப்பட்டதிலிருந்து பன்னிரெண்டு மாத காலப்பகுதியொன்றுக்குப் பிந்தாமலும் பொதுவாகப் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும்.

(3) மீளாய்வானது, கொண்டு நடாத்தப்படுகையில், (1) ஆம் உட்பிரிவின்கீழ் மீளாய்வொன்று எந்த ஏற்றுமதியாளர்களின் அல்லது உற்பத்தியாளர்களின் தூண்டுதலின்பேரில் நிறைவேற்றப்படுகின்றதோ அந்த ஏற்றுமதியாளர்களிடமிருந்தான அல்லது உற்பத்தியாளர்களிடமிருந்தான இறக்குமதிகளின் மீது மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வை எதுவும் அறவிடப் படுதலாகாது. எவ்வாறாயினும், பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகையவொரு மீளாய்வு, அத்தகைய உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதியாளர்கள் தொடர்பில் மிகைப்பொருள் திணிப்பு என்ற தீர்மானமொன்றை விளைவித்தால், மீளாய்வு ஆரம்பித்து வைக்கப்பட்ட தேதிவரை மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைகளை பின்னோக்கிச் செயற்படும் ரீதியில் அறவிடமுடியு மென்பதனை உறுதிப்படுத்துவதற்கென, இச்சட்டத்தின் 48 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்டவாறு, எச்சமான மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வை வீதத்தின் தொகை யிலான உத்தரவாதங்களுக்கு வேண்டுகோள் விடுக்கலாம்.

விலைப் பொறுப்பேற்புகளின் கால நீடிப்பும் மீளாய்வும்.

**59.** (அ) இச்சட்டத்தின் 56 ஆம், 57 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் 44 முதல் 47 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகளின்கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைப் பொறுப்பேற்புகளுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்;

(ஆ) இச்சட்டத்தின் 21, 25, 26, 27, 29, 32, 33, 34, 35, 36, 37, 38,39 மற்றும் 40 ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் மீளாய்வுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், துரிதமான முறையில் நிறைவேற்றப்படவேண்டியதும், மீளாய்வு ஆரம்பித்து வைக்கப்பட்ட தேதியில் இருந்து பன்னிரெண்டு மாத காலப்பகுதியொன்றினுள் முடிவுறுத்தப்பட வேண்டியதும், இச்சட்டத்தின் 56 ஆம், 57 ஆம் பிரிவுகளின்கீழ் நடாத்தப்படுவது மான ஏதேனும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## சூழ்ச்சி எதிர்ப்பு

*மிகைப் பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வையின் சூழ்ச்சி.*

**60.** (1) மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைக்கு அமைவான பொருள் ஒன்று, ஒன்றுகூட்டாத, முடிக்கப்படாத அல்லது பூர்த்திசெய்யப்படாத வடிவமொன்றில் மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வையின் விதித்தலின் நோக்கத்திற்கென அறிவிக்கப்பட்ட உற்பத்தி செய்யும் நாடு அல்லது ஏற்றுமதி செய்யும் நாடு உட்பட ஏதேனும் நாட்டிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளவிடத்தும், இலங்கையில் அல்லது அத்தகைய நாட்டில் ஒன்றுகூட்டப்பட்டுள்ள, முடிக்கப்பட்டுள்ள அல்லது பூர்த்திசெய்யப்பட்டுள்ளவிடத்தும், அத்தகைய ஒன்றுகூட்டுதல், முடித்தல் அல்லது பூர்த்திசெய்தல்-

(அ) தொழிற்பாடுகள் மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு நுண்ணாய்வுகளுக்கு பின்னதாக அல்லது சற்று முன்பதாக தொடங்கியிருந்து அல்லது அதிகரித்திருப்பின் அத்துடன் பாகங்கள் அல்லது ஆக்கக்கூறுகள் மிகைப் பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வை விதிக்கும் நோக்கத்திற்கென அறிவிக்கப்பட்ட உற்பத்தி செய்யும் நாட்டின் அல்லது ஏற்றுமதி செய்யும் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு இருப்பினும்; அத்துடன்

(ஆ) ஒன்றுகூட்டுதல், முடித்தல் அல்லது பூர்த்திசெய்தல் தொழிற்பாட்டிற்கான விளைவான பெறுமதி ஒன்று கூட்டப்பட்ட, முடிக்கப்பட்ட அல்லது பூர்த்திசெய்யப்பட்ட பொருளின் ஆகுசெலவின் முப்பத்தைந்து சதவீதத்திற்கு குறைவாக இருப்பின்,

வலுவிலுள்ள மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு தீர்வைக்கு சூழ்ச்சி செய்வதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு தீர்வைக்கு அமைவான பொருள் ஒன்று, பொருளொன்றின் விபரணம், பெயர் அல்லது தொகுப்பின் மாற்றத்துடன் சம்பந்தப்படுகின்ற ஏதேனும் நடவடிமுறைக்கு அமைவாக்கப்பட்டபின்னர், மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு தீர்வையின் விதிப்புக்கென அறிவிக்கப்பட்ட உற்பத்தி செய்யும் நாட்டிலிருந்து அல்லது ஏற்றுமதி செய்யும் நாட்டிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுமிடத்து, அத்தகைய மாற்றம், மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு தீர்வைக்கு அமைவான பொருளின் விபரணம், பெயர் அல்லது தொகுப்பின் மாற்றமானது, இறுப்பனவு வகுப்பாக்கத்தின் வேறுபாடுகள், ஏதேனுமிருப்பின், கருத்திற்கெடுக்கப்படாத சிறிய வடிவங்களில்கூட வடிவத்தில் அல்லது தோற்றத்தில் மாற்றப்படுகின்ற பொருளில் முடிவடையுமாயின், வலுவிலுள்ள மிகைப்பொருள் திணிப் பெதிர்ப்பு தீர்வையை சூழ்ச்சி செய்வதாக கருதப்படுதல் வேண்டும்.

(3) மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு தீர்வைக்கு அமைவான பொருளொன்று, மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு தீர்வைக்கு அமைவானதல்லாத ஏற்றுமதியாளர்கள் அல்லது உற்பத்தியாளர்கள் அல்லது நாட்டினூடாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுமிடத்து, அத்தகைய ஏற்றுமதிகள், மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வைக்கென அறிவிக்கப்பட்ட ஏற்றுமதியாளர்கள் அல்லது உற்பத்தியாளர்கள், மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு தீர்வைக்கு அமையாத ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் அல்லது நாட்டினூடாக இலங்கைக்கு தமது உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நோக்கில் பொருளின் தமது வியாபார பழக்கம், வியாபார மாதிரி அல்லது விற்பனைகளின் வழிகளை மாற்றியிருப்பின், வலுவிலுள்ள மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு தீர்வைக்கு சூழ்ச்சி செய்வதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*சூழ்ச்சியை தீர்மானிப்பதற்கு நுண்ணாய்வை ஆரம்பித்து வைத்தல்.*

**61.** (1) இதனகத்து கீழே ஏற்பாடு செய்யப்பட்டவாறாக தவிர, பணிப்பாளர் தலைமையதிபதி, இலங்கைக் கைத்தொழிலினால் அல்லது அது சார்பிலான எழுத்திலான விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மேல், இச்சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்புத் தீர்வையின் ஏதேனும் சார்த்தப்படும் சூழ்ச்சி உள்ளமை மற்றும் விளைவைத் தீர்மானிப்பதற்கு நுண்ணாய்வை ஆரம்பித்து வைக்கலாம்.

(2) விண்ணப்பம், சூழ்ச்சி எதிர்ப்பு நுண்ணாய்வொன்றினை ஆரம்பித்து வைத்தலை நியாயப்படுத்துவதற்கான சூழ்நிலைகள் உள்ளமை தொடர்பாக மற்றவற்றுடன் போதிய சான்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், பணிப்பாளர் தலைமையதிபதி, போதுமான சான்று வலுவிலுள்ள மிகைப்பொருள் திணிப்பெதர்ப்பு தீர்வையின் சூழ்ச்சிக்கு இட்டுச் செல்லுகின்ற சூழ்நிலைகளின் உள்ளமை பற்றி வெளிப்படுத்துகின்றதென ஏதேனும் அக்கறையுடைய திறத்தவரிடமிருந்து பெறப்பட்ட தகவலிலிருந்து அவர் திருப்திப்படின், தனது சொந்த முயற்சியில் நுண்ணாய்வை ஆரம்பித்து வைக்கலாம்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, வலுவிலுள்ள மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பினை சூழ்ச்சி செய்கின்ற பொருட்களின் இறக்குமதிகள் மிகைப்பொருளாக்கப்பட்டிருப்பதாக கண்டுபிடிக்கப்படுவதாக அவர் திருப்திப்படுமிடத்து, வலுவிலுள்ள மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பின் ஏதேனும் சார்த்தப்பட்ட சூழ்ச்சியின் உள்ளமை மற்றும் விளைவைத் தீர்மானிப்பதற்கு நுண்ணாய்வொன்றை ஆரம்பித்து வைக்கலாம்:

ஆயின், பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய நுண்ணாய்வொன்றை ஆரம்பித்து வைத்தலுக்கான நடபடிமுறைக்கு முன்பதாக ஏற்றுமதி செய்யும் நாட்டின் அரசாங்கத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின்கீழான மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு நுண்ணாய்வுகளை நடாத்துவது தொடர்பிலான ஏற்பாடுகள் இப்பிரிவின்கீழ் கொண்டுநடாத்தப்படும் ஏதேனும் நுண்ணாய்வுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(6) ஏதேனும் அத்தகைய நுண்ணாய்வு பன்னிரண்டு மாத காலப்பகுதியினுள் முடிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதியினால் எழுத்தில் பதிவுசெய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக நுண்ணாய்வினை ஆரம்பித்து வைத்தல் திகதியிலிருந்து பதினெட்டு மாதங்களுக்கு மேற்படுதலாகாது.

*சூழ்ச்சியின் தீர்மானம்.*

**62.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி, மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு தீர்வையின் சூழ்ச்சி உள்ளதாக தீர்மானிப்பதன்மேல், உள்ளதாம் மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு தீர்வையை சூழ்ச்சி செய்திருப்பதாக காணப்பட்ட பொருட்களின் இறக்குமதிகளுக்கு அல்லது மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு தீர்வையின் விதிப்புக்கு நோக்கத்திற்கென ஏற்கனவே அறிவிக்கப்பட்டவை தவிர்ந்த நாடுகளிலிருந்தான ஏற்றுமதி செய்யப்படும் அல்லது நாடுகளிலிருந்து தோற்றுவிக்கப்படும் பொருட்களின் இறக்குமதிகளுக்கு மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு தீர்வையின் விதிப்பனவை அமைச்சுக்களிடையேயான குழுவிற்கு விதப்புரை செய்யலாம் அத்துடன் அத்தகைய விதிப்பனவு 61 ஆம் பிரிவின்கீழ் நுண்ணாய்வு ஆரம்பிப்புத் திகதியிலிருந்து பின்னோக்கியதாக ஏற்புடையதாகலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியின் விதப்புரையின் தோதானதன்மையை கருத்திற்கெடுப்பது அமைச்சுகளிடையிலான குழுவின் கடமையாதல் வேண்டுமென்பதுடன், அது அத்தகைய விதப்புரை கிடைக்கப்பெற்றதிலிருந்து பத்து வேலைநாட்கள்கொண்ட காலப்பகுதியொன்றினுள் அமைச்சரூடாக நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு அதனது சிபாரிசை சமர்ப்பித்தல் வேண்டும்.

*சூழ்ச்சியின் மீளாய்வு.*

**63.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி அதிகாரமளிக்குமிடத்து, தனது சொந்த உந்துதலின்மேல் அல்லது வழிமுறைகளின் விதிப்பனவிலிருந்து நியாயமான காலப்பகுதி காலாவதியான பின்னர் மீளாய்வுக்கான தேவை ஆதாரப்படுத்துகின்ற நேர்மறையான தகவலை சமர்ப்பிக்கின்ற ஏதேனும் அக்கறையுடைய திறத்தவரினால் செய்யப்படும் வேண்டுகோளின்மீது, தீர்வையின் தொடர்ச்சியான விதிப்பனவுக்கான தேவையை மீளாய்வு செய்யலாம்.

(2) ஒராம் பிரிவின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட ஏதேனும் மீளாய்வு, மீளாய்வு ஆரம்பிப்பு திகதியிலிருந்து பன்னிரண்டு மாதங் களுக்கு விஞ்சாத காலப்பகுதியொன்றினுள் முடிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் II

### எதிரீட்டுத் தீர்வைகள்

எதிரீட்டுத் தீர்வையொன்று எச்சூழ்நிலையில் விதிக்கப் படலாமென்பது.

**64.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆரம்பித்து வைக்கப்பட்டு நடத்தப்பட்டவொரு நுண்ணாய்வைப் பின்பற்றி–

(அ) இச்சட்டத்தின் கருத்துக்குட்பட செயற்படத்தகு மானிய மொன்று, நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப் பொருள் தொடர்பில் வழங்கப்படுகின்றதென்றும்;

(ஆ) இலங்கைத் கைத்தொழிலுக்கு ஊறு விளைவிக்கப் படுகின்றதென்று; அத்துடன்

(இ) மானியமளிக்கப்பட்ட இறக்குமதிகளுக்கும் விளைவிக் கப்படும் ஊறுக்கும் இடையே காரணம்சார் தொடர் பொன்று உள்ளதென்றும்,

பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்குமிடத்து, இலங் கைக்கு இறக்குமதி செய்யப்படும் உற்பத்திப்பொருட்களின் மீது எதிரீட்டுத் தீர்வைகள் விதிக்கப்படலாம்.

(2) ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளிலிருந்து அதேபோன்ற உற்பத்திப் பொருட்களின் இறக்குமதிகள், ஒரே நேரத்திலான எதிரீட்டுத் தீர்வை நுண்ணாய்வின் விடயப்பொருளாக உள்ள விடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, ஊறுள்ளதாவென் பதைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, இலங்கைக் கைத் தொழிலின்மீது அத்தகைய மானியமளிக்கப்பட்ட இறக்குமதி களின் விளைவுகளை–

(அ) மனுக்கள் ஒரே நேரத்தில் கோப்பிடப்பட்டால் மட்டுமே;

(ஆ) ஒவ்வொரு நாட்டிலுமிருந்தான இறக்குமதிகள் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட எதிரீட்டுக்குட் படுத்தப்படற்பாலதான மானியவளிப்பின் தொகை, 74 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறு ஆகக் குறைந்ததற்கு அதிகமாகவுள்ளதென்றும் ஒவ்வொரு நாட்டிலுமிருந்தான இறக்குமதிகளின் தொகை, 74 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறு ஆகக்குறைந்ததாக இருப்பதில்லையென்றும் பணிப்பாளர் தலைமை யதிபதி தீர்மானித்தால் மட்டுமே; அத்துடன்

(இ) இறக்குமதிகளின் விளைவுகளினது படிப்படியாக ஒன்றுதிரண்ட மதிப்பீடு, இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திப்பொருட்களிடையேயான போட்டாபோட்டி நிபந்தனைகளினதும், இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திப்பொருட்களுக்கும் அதேபோன்ற உள்நாட்டு உற்பத்திப்பொருட்களுக்கும் இடையேயான போட்டா போட்டி நிபந்தனைகளினதும் நோக்கில் தோதான தாகவுள்ளதெனப் பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானித்தால் மட்டுமே,

படிப்படியாக ஒன்றுதிரண்ட முறையில் மதிப்பீடு செய்யலாம்.

மானியமொன்று எப்போது எதிரீட்டுத் தீர்வை யொன்றுக்கு அமைந்ததாக லாம் என்பது.

**65.** (1) இச்சட்டத்தின் 64 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, மானியமொன்று,

(அ) தடைசெய்யப்பட்ட மானியமொன்றாக இருப்பின்; அல்லது

(ஆ) செயற்படத்தகு மானியமொன்றாக இருப்பின்,

எதிரீட்டுத் தீர்வையொன்றுக்கு அமைவாக இருக்கலாம்.

(2) மானியமொன்று-

(அ) இச்சட்டத்தின் 66 ஆம் பிரிவின் கருத்துக்குட்பட சிறப்புத் திறனுடையதல்லதென்றும்; அல்லது

(ஆ) இச்சட்டத்துக்கான மூன்றாம் அட்டவணையிற் குறிப்பீடு செய்யப்பட்ட மானியமொன்றாக உள்ளதென்று,

பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்குமிடத்து, அத்தகைய மானியம் இச்சட்டத்தின் கருத்துக்குட்பட எதிரீட்டுத் தீர்வையொன்றுக்கு அமைந்ததாகவிருத்த லாகாது என்பதுடன், செயற்படத்தக்கதல்லாத மானியமொன்றாகக் கருதப்படுதலுமாகாது.

(3) தடைசெய்யப்பட்ட மானியமொன்று இச்சட்டத்தின் 66 ஆம் பிரிவின் நியதிகளின்படி குறித்துரைத்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

மானியத்தின் சிறப்புத்திறனும் தேர்வும்.

**66.** (1) இச்சட்டத்தின் 65 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, மானியமொன்றை அளிக்கின்ற அதிகாரிகள் நியாயாதிக்கத்தினுள் (இப்பிரிவில் ''குறித்த சில தொழில் முயற்சிகள்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தொழில் முயற்சி யொன்றுக்கு அல்லது கைத்தொழிலொன்றுக்கு அல்லது தொழில் முயற்சிகளின் அல்லது கைத்தொழில்களின் தொகுதிக்கு அது சிறப்புத் திறனுடையதாகவுள்ளதாவென்பதைத் தீர்மானிப் பதற்கென,பின்வரும்கோட்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) அளிக்கின்ற அதிகாரி அல்லது அளிக்கின்ற அதிகாரி எந்தச் சட்டவாக்கத்தைப் பின்பற்றி தொழிற்படு கின்றாரோ அந்தச் சட்டவாக்கம், குறித்தசில தொழில்முயற்சிகளுக்கு மானியமொன்றுக்கான அணுகுகையை வெளிப்படையாக வரையறுக்குமிடத்து, அத்தகைய மானியம் சிறப்புத்திறனுடையதாகவிருத்தல் வேண்டும்;

(ஆ) அளிக்கின்ற அதிகாரி அல்லது அளிக்கின்ற அதிகாரி எந்தச் சட்டவாக்கத்தைப் பின்பற்றி தொழிற்படு கின்றாரோ அந்தச் சட்டவாக்கம், ஒரு மானியத்துக் கான தகவுடைமையையும் அதன் தொகையையும் ஆளுகின்ற புறப்பொருள்சார் கட்டளைக் கற்களை அல்லது நிபந்தனைகளை தாபிக்குமிடத்து, சிறப்புத் திறன் இல்லாதிருத்தல் வேண்டும்; ஆயின், தகவுடை

மையானது தன்னாலானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கட்டளைக்கற்களும் நிபந்தனைகளும் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டு, சரிபார்க்கப்படுவதனை இயலச்செய்யும் வகையில், அச்சட்டவாக்கத்தில் அல்லது வேறு அலுவலகமுறையான ஆவணத்தில் தெளிவாக எடுத்துக் கூறப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(இ) இவ்வுட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் உட்பந்திகளில் விதிக்கப்பட்ட கோட்பாடுகளை ஏற்புடையன வாக்குவதிலிருந்து விளைகின்ற சிறப்புத்திறனின்மை பற்றிய ஏதேனும் தோற்றம் எவ்வாறிருப்பினும், மானியமானது உண்மையில் சிறப்புத் திறனுடையதாகவிருக்கலாமென நம்புவதற்கான காரணங்கள் இருப்பின், பின்வரும் காரணிகள் கவனத்துட்கொள்ளப் படலாம்:-

(i) குறித்த சில தொழில்முயற்சிகளின் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையினால் மானிய நிகழ்ச்சித் திட்டமொன்று பயன்படுத்தப்படுதல், குறித்த சில தொழில்முயற்சிகளினால் பெருமளவில் பயன்படுத்தப்படுதல், குறித்த சில தொழில் முயற்சிகளுக்கு மானியத்தின் பெருந்தொகைகளை அளவுக்கொவ்வாத வகையில் அளித்தல், மற்றும் மானியமொன்றை அளிப்பதற்கான முடிபில் அளக்கின்ற அதிகாரியினால் தற்றுணிபு பிரயோகிக்கப்பட்டுள்ளமுறை; அத்துடன்

(ii) அளிக்கின்ற அதிகாரியின் நியாயாதிக்கத்தினுள் பொருளாதாரச் செயற்பாடுகள் பன்முகப்படுத்தப்படும் அளவும் மானிய நிகழ்ச்சித் திட்டம் தொழிற்பாட்டில் இருந்துள்ள கால நீட்சியும் கணக்குக்கெடுக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, புறப்பொருள்சார் கட்டளைக்கற்கள் அல்லது நிபந்தனைகள் என்பது, ஊழியர்களின் எண்ணிக்கை அல்லது தொழில் முயற்சியின் அளவுபோன்ற, நடுநிலையான குறித்தசில தொழில் முயற்சிகளிலும் பார்க்க ஏனையவற்றுக்கு அனுகூலம் காட்டாத மற்றும் தன்மையில் சிக்கனமானவையும் ஏற்புடைமையில் கிடையானவையுமான கட்டளைக்கற்கள் அல்லது நிபந்தனைகள் என்று பொருளாகும்.

(3) பொதுவாக, ஏற்புடையற்பாலனவான வரிவீதங்களை விதித்தல் அல்லது மாற்றுதல், சிறப்புத்திறனுடைய, மானியமொன்றாகக் கருதப்படுதலாகாது.

(4) மானியத்தை அளிக்கின்ற அதிகாரியின் நியாயாதிக்கத்தினுள் உள்ள பெயர்குறிக்கப்பட்ட புவியியல்சார் பிராந்தியத்தினுள் அமைந்துள்ள குறித்தசில தொழில்முயற்சிகளுக்கு வரையறுக்கப்பட்ட மானியமொன்று சிறப்புத்திறனுடைய மானியமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் சிறப்புத்திறன்பற்றிய ஏதேனும் தீர்மானம் ஆக்கபூர்வமான சான்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

**67**. (1) இச்சட்டத்தின் 85 ஆம் பிரிவில் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறு ''மானியம்'' ஒன்றின் நோக்கத்துக்காக ''நன்மையொன்றை அளித்தல்'' என்பது என்னவெனத் தீர்மானிப்பதில் பணிப்பாளர் தலைமையதிபதி பின்வரும் வழிகாட்டுநெறிகளைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்:- மானியமொன்றை அளிப்பதன்மூலம் நன்மையைத் தீர்மானித்தல்.

(அ) அந்நாட்டின் ஆள்புலத்தில் தனிப்பட்ட முதலீட்டாளர்களின் அபாய மூலதனத்தை வழங்குதல் உட்பட, முதலீட்டு முடிபு வழமையான முதலீட்டு வழக்கத்துக்கு ஒவ்வாததாகவுள்ளதெனக் கருதப்படமுடிந்தாலொழிய, அரசாங்கம் ஒப்புரவு மூலதனத்தை வழங்குதல் நன்மையொன்றை அளிப்பதாகக் கருதப்படுதலாகாது;

(ஆ) அரசாங்கக் கடனைப் பெறுகின்ற குழுமம்; அத்துடன் மீது செலுத்துகின்ற தொகைக்கும், குழுமமானது சந்தையின்மீது உண்மையாகப் பெறக்கூடிய ஒப்பிடற்பாலதான வர்த்தகக் கடனின் மீது குழுமம் செலுத்த வேண்டிய தொகைக்கும் இடையே வித்தியாசமொன்று இருந்தாலொழிய, அரசாங்கமொன்றிலான கடனொன்று நன்மையொன்றை அளிப்பதாகக் கருதப்படுதலாகாது. இவ்விடயத்தில், நன்மையானது இவ்விரு தொகைகளுக்கும் இடையிலான வித்தியாசமாக விருத்தல் வேண்டும்.

(இ) அரசாங்க உத்தரவாதத்தைப் பெறுகின்ற குழுமம் அரசாங்கத்தினால் உத்தரவாதமளிக்கப்படும் கடனொன்றின்மீது செலுத்துகின்ற தொகைக்கும், அந்த அரசாங்க உத்தரவாதமின்றி ஒப்பிடற்பாலதான வர்த்தகக் கடனொன்றின்மீது குழுவானது செலுத்த வேண்டிய தொகைக்கும் இடையே வித்தியாசமொன்று இருந்தாலொழிய, அரசாங்கமொன்றினாலான கடன் உத்தரவாதமொன்று நன்மையொன்றை அளிப்பதாகக் கருதப்படுதலாகாது. இவ்விடயத்தில் நன்மையானது, கட்டணங்களிலான எவையேனும் வித்தியாசங் களுக்காகச் சீர்படுத்தப்பட்ட இவ்விரு தொகைகளுக்கும் இடையிலான வித்தியாசமாகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) அரசாங்கமொன்றினால் பண்டங்கள் அல்லது சேவைகள் வழங்கப்படுதல் அல்லது பண்டங்கள் கொள்வனவு செய்யப்படுதல், போதிய ஊதியத்துக்குக் குறைவானதற்கு வழங்குகை செய்யப்பட்டாலொழிய, அல்லது கொள்வனவானது போதிய ஊதியத்துக்கு அதிகமானதற்காகச் செய்யப்பட்டாலொழிய, நன்மையொன்றை அளிப்பதாகக் கருதப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, ஊதியத்தின் போதுமாந்தன்மையானது, விலை, தரம், கிடைக்கக்கூடியமை, சந்தைப்படுத்தக்கூடியமை, போக்குவரத்து, கொள்வனவின் அல்லது விற்பனையின் மற்றும் வேறு நிபந்தனைகள் உட்பட, வழங்கப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட நாட்டில் சம்பந்தப்பட்ட பண்டங்களுக்காக அல்லது சேவைகளுக்காக நிலவுகின்ற சந்தைநிலைமைகள் தொடர்பாகத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*எதிரீட்டுத் தீர்வை வீதத்தை நிர்ணயித்தல்.*

**68.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி, (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, தனிப்பட்டமுறையில் நுண்ணாய்வுசெய்யப்பட்டுள்ள நுண்ணாய்வுசெய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் சம்பந்தப்பட்ட ஒவ்வோர் அறியப்பட்ட ஏற்றுமதியாளருக்காகவும் அல்லது உற்பத்தியாளருக்காகவும் தனிப்பட்ட எதிரீட்டுத் தீர்வைவீதம் ஏற்புடையதாதல் தொடர்பாக, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருக்கான முன்மொழிவொன்றை அமைச்சர்மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக ஒவ்வோர் அக்கறைகொண்டுள்ள திறத்தவரையும் விசாரிப்பதை அல்லது நுண்ணாய்வு செய்யப்பட்ட எல்லா உற்பத்திப்பொருட்களையும் தனிப்பட்டமுறையில் பரிசோதனைசெய்வதைச் செயல்முறைக்குகந்ததாக்கும்வகையில் ஏற்றுமதியாளர்களின், உற்பத்தியாளர்களின் அல்லது இறக்குமதியாளர்களின் எண்ணிக்கை அல்லது நுண்ணாய்வுசெய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் வகைகள் அவ்வளவு பெரியதாகவிருக்குமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, ஒன்றில்,தெரிவின் நேரத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கிடைக்கக்கூடிய தகவலின் அடிப்படையில் புள்ளி விபரரீதியில் செல்லுபடியாகவுள்ள மாதிரிகளைப் பயன்படுத்துவதன்மூலம், அக்கறைகொண்டுள்ள திறத்தவர்களின் அல்லது நுண்ணாய்வுசெய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களின் நியாயமானவோர் எண்ணிக்கைக்கு அல்லது நியாயமானமுறையில் நுண்ணாய்வு செய்யப்பட முடியுமானதாகவுள்ள சம்பந்தப்பட்ட நாட்டிலிருந்தான ஏற்றுமதியின் தொகையினது ஆகக்கூடிய நூற்றுவீதத்துக்கு பரிசோதனையை வரையறுக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களின், உற்பத்தியாளர்களின் அல்லது இறக்குமதியாளர்களின் அல்லது நுண்ணாய்வுசெய்யப்பட்ட உற்பத்திப் பொருள் வகைகளின் ஏதேனும் தெரிவானது, சம்பந்தப்பட்ட ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் அல்லது இறக்குமதியாளர்கள் என்போரின் கலந்தாலோசனையுடனும் அவர்களின் சம்மதத்துடனும் தெரிவுசெய்யப்படுவது விரும்பத்தக்கதாதல் வேண்டும்.

(4) இரண்டாம், (3) ஆம் உட்பிரிவுகளின்கீழ் வரையறுக்கப்பட்ட பரிசோதனையொன்று நிறைவேற்றப்படுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, நுண்ணாய்வில் உள்ளடக்கப்படாத எவரேனும் ஏற்றுமதியாளருக்கு அல்லது உற்பத்தியாளருக்கு, தனிப்பட்ட முறையில் விசாரணைசெய்யப்பட்ட எல்லா ஏற்றுமதியாளர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் நிர்ணயிக்கப்படும் தனிப்பட்ட எதிரீட்டுத்தீர்வை வீதங்களின் நிறையளித்த சராசரிக்குச் சமமான வீதமொன்றை ஏற்புடையதாக்குதல் வேண்டும்; ஆயின், பணிப்பாளர் தலைமையதிபதி, ஏதேனும் பூச்சிய அல்லது ஆகக்குறைந்ததாக இருப்பதாக கருதப்படும் எதிரீட்டுத்தீர்வையிடப்படற்பாலதான மானியத்தை இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காகப் புறக்கணித்தல் வேண்டும்.

## நுண்ணாய்வையும் மீளாய்வையும் ஆரம்பித்துவைத்தலும், நடாத்துதலும், முடிவுறுத்துதலும்

*இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் நுண்ணாய்வை ஆரம்பித்து வைத்தல்.*

**69**. இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் எதிரீட்டுத்தீர்வை நுண்ணாய்வொன்றை ஆரம்பித்துவைத்தல் தொடர்பாக, இச்சட்டத்தின் 14 முதல் 22 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள் (இரு பிரிவுகளுமுட்பட), பின்வரும் திரிபுகளுக்கமைய, அதற்கும் அது தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்:–

(அ) எதிரீட்டுத்தீர்வை நுண்ணாய்வொன்றை ஆரம்பித்து வைக்கமுன்னரும் நுண்ணாய்வின் நடாத்துகை பூராவும், பணிப்பாளர் தலைமையதிபதி, நுண்ணாய்வுக்கு இயைபான எவையேனும் கருமங்களைத் தெளிவு

படுத்தி, பரஸ்பரமாக உடன்பட்டுக்கொள்ளப்பட்ட தீர்வொன்றைக்காணும் நோக்கங்களுக்காக, அக்கறை கொண்டுள்ள ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்துக்குக் கலந்தாலோசனைக்கான வாய்ப்பொன்றை அளித்தல் வேண்டும்;

(ஆ) (அ) என்னும் பந்தியின்கீழான கலந்தாலோசனையொன்று, பணிப்பாளர் தலைமையதிபதி நுண்ணாய்வை மேற்கொண்டு நடாத்துவதிலிருந்து அல்லது அது தொடர்பாகத் தற்காலிக அல்லது இறுதித் தீர்மானமொன்றைச் செய்வதிலிருந்து அவரை எவ்வழியிலும் தடுத்தலாகாது; அத்துடன்

(இ) 16 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான இயைபான தேவைப்பாட்டை விண்ணப்பமானது நிறைவேற்றுமிடத்து, நுண்ணாய்வொன்றை ஆரம்பித்துவைப்பதற்கானவொரு முடிபுபற்றி ஒவ்வோர் ஏற்றுமதிசெய்யும்நாட்டினதும் அரசாங்கத்துக்கு அறிவிப்பதற்கான தேவைப்பாடு, இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் ஆரம்பித்து வைக்கப்பட்ட நுண்ணாய்வொன்றுக்கு ஏற்புடையற்பாலதாதலாகாது.

*இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் நுண்ணாய்வொன்றை நடாத்துதலும் முடிவுறுத்துதலும்.*

**70.** தற்காலிக வழிமுறைகளை விதித்தலுட்பட, இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழான நுண்ணாய்வொன்றை நடாத்துதலும் முடிவுறுத்துதலும் தொடர்பாக,இச்சட்டத்தின் 23 முதல் 43 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள் (இரு பிரிவுகளுமுட்பட), பின்வரும் திரிபுகளுக்கமைய, அதற்கும் அது தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) நுண்ணாய்வொன்றை ஆரம்பித்துவைப்பதன்மேல் வினாக்கொத்துக்களை அனுப்புவதற்கான இச்சட்டத்தின் 29 ஆம் பிரிவின்கீழான தேவைப்பாடு, இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழான நுண்ணாய்வொன்றின் விடயத்தில், அத்தகைய வினாக்கொத்துக்களை அக்கறை கொண்டுள்ள உறுப்பினர்களுக்கு அல்லது அக்கறை கொண்டுள்ள திறத்தவர்களுக்கு அனுப்புவதனையும் உள்ளடக்குதல் வேண்டும்;

(ஆ) இச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தற்காலிக ஏற்பாடுகள், இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழான நுண்ணாய்வொன்றின் விடயத்தில், பண வைப்புகளின் வடிவத்திலிருத்தல் வேண்டும் அல்லது தற்காலிகரீதியில் கணக்கிடப்பட்ட மானியமளித்தல் தொகையின் தொகைக்குச் சமமான முறிகளின் வடிவத்திலிருத்தல் வேண்டும்;

(இ) இச்சட்டத்தின் 43 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு விதிக்கப்பட்ட எவையேனும் தற்காலிக வழிமுறைகளின் ஏற்புடைமைக் காலப்பகுதி, இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழான நுண்ணாய்வொன்றில் விதிக்கப்பட்ட தற்காலிக வழிமுறைகளின் விடயத்தில், நான்கு மாதகாலப்பகுதியொன்றை விஞ்சுதலாகாது; அத்துடன்

(ஈ) விதிக்கப்பட்ட தற்காலிக வழிமுறைகளின் ஏற்புடைமைக் காலப்பகுதியின் நீடிப்பொன்றை அளித்தல் தொடர்பாக 43 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழான நுண்ணாய்வொன்றுக்கு ஏற்புடையனவாதலாகாது.

விலைப் பொறுப்பேற்புகள்.

**71.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி, மானியத்தை அளிக்கின்ற அரசாங்கத்திடமிருந்து அல்லது சம்பந்தப்பட்ட ஏற்றுமதியாளரிடமிருந்து-

(அ) மானியத்தை அளிக்கின்ற அரசாங்கம், மானியத்தை இல்லாதொழிப்பதற்கு அல்லது வரையறுப்பதற்கு அல்லது அதன் விளைவுகள் சம்பந்தமாக வேறு வழிமுறைகளை எடுப்பதற்கு உடன்படுகின்றதென்றும்; அல்லது

(ஆ) சம்பந்தப்பட்ட ஏற்றுமதியாளர், அம்மானியம் அளிக்கப்பட்டதனால் ஏற்படுத்தப்பட்ட ஊறுபாடான விளைவுகள் இல்லாதொழிக்கப்படும் வகையில் அவரின் விலைகளை மீளாய்வதற்கு உடன்படுகின்றாரென்றும்,

திருப்திகரமான தன்னிச்சையான பொறுப்பேற்புகளைப் பெற்றதன்மேல், தற்காலிக வழிமுறைகளை விதிக்காமல், இச்சட்டத்தின் இப்பாகத் தின்கீழான நுண்ணாய்வொன்றை இடைநிறுத்தி வைக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் கொடுக்கப்பட்டவொரு பொறுப்பேற்பின் விளைவாக விதிக் கப்பட்ட எவையேனும் விலை அதிகரிப்புகள், விதிக்கப்பட்ட அத்தகைய விலை அதிகரிப்பு, இலங்கைக் கைத்தொழிலுக்கு விளைவிக்கப்பட்ட ஊறை, அகற்றுவதற்குப் போதியதாக விருப்பின், மானியத்தொகையை இல்லாதொழிப்பதற்கு அவசியமாகவுள்ள தொகைக்குக் கூடுதலாகவிருத்தலாகாது என்பதுடன், மானியத்தொகையை விடக் குறைவாகவிருப்பது விரும்பத்தக்கதாதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, விலைப்பொறுப் பேற்புகள் பற்றிப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஆலோசனை கூறப்படலாம். ஆனால் சம்பந்தப்பட்ட ஏற்றுமதி யாளர் அத்தகைய பொறுப்பேற்புகளைச் செய்துகொள்வதற்கு வலுக்கட்டாயப்படுத்தப்படுதலாகாது.

(4) சம்பந்தப்பட்ட ஏற்றுமதியாளர் எவையேனும் விலைப் பொறுப்பேற்புகளை முனைவதில்லை அல்லது அவ்வாறு செய்வதற்கான வரவழைப்பொன்றை ஏற்றுக்கொள்வதில்லை என்ற நிகழ்வு, விடயம் கவனத்திற்கொள்ளப்படுவதனை எவ்வழியிலும் பங்கப்படுத்துதலாகாது. ஆனால், பணிப்பாளர் தலைமையதிபதி, மானியமளிக்கப்பட்ட இறக்குமதிகள் தொடர்ந்து செய்யப்பட்டால், இலங்கைக் கைத்தொழிலுக்கான ஊறு ஏற்படுமென்ற அச்சுறுத்தல் உண்மையாகவே நடைபெறக்கூடிய சாத்தியமுண்டெனத் தீர்மானிப்பதற்குச் சுதந்திரமுடையவராதல் வேண்டும்.

*71 ஆம் பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட தன்னிச்சையான பொறுப்பேற்பு களின் விளைவுகள்.*

**72.** இச்சட்டத்தின் 71 ஆம் பிரிவின்கீழ் ஏற்றுமதியாளரொருவரிடமிருந்து தன்னிச்சையான பொறுப்பேற்புகளை ஏற்றுக்கொள்வதற்காக நிபந்தனைகளும் அத்தகையவோர் ஏற்றுக்கொள்ளுதலின் விளைவுகளும் தொடர்பாக, இச்சட்டத்தின் 45 முதல் 47 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள் (இருபிரிவுகளுமுட்பட), அதற்கும் அது தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் எதிரீட்டுத் தீர்வைகள் முதலியவற்றை விதித்தலும் சேகரித்தலும்.*

**73.** (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழான நுண்ணாய்வொன்றில், எதிரீட்டுத் தீர்வைகளை விதித்தலும் சேகரித்தலும், பின்னோக்கிச் செயற்படுதல், நுண்ணாய்வுகளை முடிவுறுத்தல், எதிரீட்டுத் தீர்வைகளின் காலப்பகுதிகளையும் மீளாய்வும் மற்றும் தன்னிச்சையான பொறுப்பேற்புகள் என்பன தொடர்பாக, இச்சட்டத்தின் 54 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் தவிர இச்சட்டத்தின் 48 முதல் 57 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகளும் (இருபிரிவுகளுமுட்பட) 59 ஆம் பிரிவின் ஏற்பாடுகளும், அதற்கும் அது தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், (ஒத்துழைப்பதற்கு மறுத்தமையல்லாத வேறு காரணங்களுக்காக) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் நிறைவேற்றப்பட்ட நுண்ணாய்வொன்றில் உள்ளடக்கப்படாத ஏற்றுமதியாளரொருவரினால் ஏற்றுமதிசெய்யப்பட்ட உற்பத்திப்பொருட்கள்மீது எதிரீட்டுத் தீர்வையொன்று விதிக்கப்பட்டுள்ளவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழான நுண்ணாய்வொன்றை உடனடியாக ஆரம்பித்துவைத்து உடனடியாக மீளாய்வுசெய்தல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அதற்கும் அது தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

*இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழான நுண்ணாய்வொன்றைப் போதியதற்ற சான்று காரணமாக முடிவுறுத்தல்.*

**74.** இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழான நுண்ணாய்வொன்று-

(அ) எதிரீட்டுத் தீர்வையிடப்படற்பாலதான மானியத்தின் தொகை ஆகக்குறைந்ததாகவுள்ளது அல்லது உள்ளபடியான அல்லது நிகழ்வுகளை, மானியமளிக்கப்பட்ட இறக்குமதிகளின் தொகை அல்லது இலங்கைக் கைத்தொழிலுக்கு விளைவிக்கப்படக்கூடிய ஊறு புறக்கணிக்கத்தக்கதானதென்று; அல்லது

(ஆ) நுண்ணாய்வைத் தொடர்ந்து நடாத்துவதனை நியாயப் படுத்துவதற்குப் போதிய சான்றில்லையென்று,

பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்குமிடத்து, இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழான நுண்ணாய்வொன்று எந்நேரத்திலும் முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

**75.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி, தனது சொந்தப் பிரேரணையில்அல்லது எவரேனும் அக்கறைகொண்ட திறத்தவரினால் வழங்கப்பட்ட தகவல்மீது, தடைசெய்யப்பட்ட அல்லது மானியமொன்று இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற உற்பத்திப்பொருளொன்று தொடர்பில் உறுப்பு நாடொன்றினால் அளிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது அல்லது பேணப்பட்டுக் கொண்டிருக்கின்றது என நம்புவதற்கு காரணம் உள்ளவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி அமைச்சரின் கவனத்துக்கு அத்தகைய தகவலைக்கொண்டுவருதல் வேண்டும். *கலந்தாலோசனைகள்.*

(2) அமைச்சர், இச்சட்டத்தின் நியதிகளின்படி எடுக்கப்படக் கூடியவாறான வேறேதேனும் நடவடிக்கைக்குப் பங்கமின்றி, அது தொடர்பான சூழ்நிலைகளை தெளிவுபடுத்தும் நோக்கிலும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றை அடையும் நோக்கிலும் கலந்தாலோசனைக்கென தடைசெய்யப்பட்ட அல்லது செயற்படத்தகு மானியம் அளிக்கப்பட வேண்டுமெனச் சார்த்தப்படுகின்ற அத்தகைய உறுப்புநாட்டிற்கு கோரிக்கை விடுக்கலாம், ஆயின் எவ்வாறாயினும், கேட்பொன்று ஏதேனும் அத்தகைய தீர்வை இறுதியாக்குவதற்கு முன்னதாக இலங்கைக் கைத்தொழிலுக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் II ஆம் பாகத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட ஏதேனும் நுண்ணாய்வுகள் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அடையப்பட்டுள்ள தீர்வொன்றின்மேல் முடிவுறுத்தப்படலாம். ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய நுண்ணாய்வு எதுவும் (2) ஆம் உட்பிரிவின்கீழான ஏதேனும் கலந்தாலோசனைக்கான கோரிக்கை விடுக்கப்படுவதால் அல்லது ஆரம்பிக்கப்படுவதனால் மட்டும் இடைநிறுத்தப்படுதலோ அல்லது முடிவுறுத்தப்படுதலோ ஆகாது.

*(4)* ஓராம் உட்பிரிவின்கீழான கலந்தாலோசனையொன்றுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையொன்று அத்தகைய தடைசெய்யப்பட்ட அல்லது செயற்படத்தகு மானியத்தின் உளதாம்தன்மை அல்லது அத்தகைய மானியத்தின் தன்மை தொடர்பிலான கிடைக்கக்கூடிய எல்லாச் சான்றுகளையும் உள்ளடக்கிய கூற்றொன்றினால் இணைக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் III

## பொது

ஊறைத் தீர்மானித்தல்.

**76.** *(1)* இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியினதும் 64 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினதும் நோக்கங்களுக்காக ஊறின் தீர்மானமொன்று, ஆக்கபூர்வமான சான்றை அடிப்படையாகக் கொண்டிருத்தலும் -

(அ) மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்ட அல்லது மானிய மளிக்கப்பட்ட இறக்குமதிகளின் தொகையினதும் அதேபோன்ற உற்பத்திப் பொருட்களுக்காக உள் நாட்டுச் சந்தையிலான விலைகளின்மீது மிகைப் பொருளாகத் திணிக்கப்பட்ட அல்லது மானியமளிக் கப்பட்ட இறக்குமதிகளின் பயனினதும்; அத்துடன்

(ஆ) அத்தகைய அதேபோன்ற உற்பத்திப்பொருட்களின் உள்நாட்டு உற்பத்தியாளர்களின்மீது இவ்இறக்குமதி களின் விளைவானதாக்கத்தினதும்,

புறப்பொருள்சார் பரிசோதனையொன்றை உட்படுத்துதலும் வேண்டும்.

*(2)* இலங்கைக் கைத்தொழிலின்மீது, மானியமளிக்கப்பட்ட அல்லது மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்ட இறக்குமதிகளின் தாக்கத்தைப் பரிசோதனை செய்கையில், பணிப்பாளர் தலைமை யதிபதி, அவரது பரிசோதனையை, பின்வருவன உட்பட,

அத்தகைய கைத்தொழிலின் நிலைமையின் மீது தொடர்பு கொண்டுள்ள இயைபான எல்லாப் பொருளாதாரக் காரணிகளையும் சுட்டிகளையும் மதிப்பீடுசெய்வதனை அடிப்படையாகக் கொள்ளுதல் வேண்டும்:-

(அ) விளைவு, விற்பனைகள், சந்தைப்பங்கு, இலாபங்கள், உற்பத்தித்திறன், முதலீடுகளின் மீதான திரும்பல் அல்லது கொள்வனவுப் பயன்பாடு என்பவற்றில் உள்ளபடியான மற்றும் நிகழக்கூடிய வீழ்ச்சி;

(ஆ) உள்நாட்டு விலைகளைப் பாதிக்கின்ற காரணிகள்;

(இ) மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு நுண்ணாய்வொன்றின் விடயத்தில் மிகைப்பொருள் திணிப்பு விளிம்பின் அளவு;

(ஈ) பணஓட்டம்,பொருட்பட்டியல்கள், தொழில், கூலிகள், வளர்ச்சி அல்லது மூலதனத்தைத் திரட்டுவதற்கான ஆற்றல் அல்லது முதலீடுகள் என்பனமீது உள்ளபடியான மற்றும் நிகழக்கூடிய எதிர்மாறான விளைவுகள்; அத்துடன்

(உ) கமத்தொழிலை உட்படுத்தும் எதிரீட்டுத் தீர்வை நுண்ணாய்வொன்றின் விடயத்தில், அரசாங்க ஆதரவு நிகழ்ச்சித் திட்டங்களின்மீது அதிகரித்த சுமையொன்று ஏற்பட்டுள்ளதாவென்பது.

(3) இரண்டாம் உட்பிரிவில் நிரற்படுத்தப்பட்ட காரணிகளும் சுட்டிகளும் முழுமையானவையாகக் கருதப்படுதலோ அல்லது அத்தகைய ஏதேனும் காரணி அல்லது சுட்டி, அவசியமான முறையில் முடிவானதாகவிருத்தலோ ஆகாது.

காரணமாக விருத்தல்.

**77.** (1) விடயத்துக்கேற்ப, நுண்ணாய்வுசெய்யப்பட்ட உற்பத்திப் பொருளினால் இலங்கைக் கைத்தொழிலுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுக்கும் மிகைப்பொருள் திணிப்புக்கும் அல்லது எதிரீட்டுத் தீர்வையிடப்படற்பாலதான மானியத்தின் அளிப்புக்கும் இடையே

காரணம்சார் தொடர்பு உள்ளதாவென்பதை இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியின் அல்லது 64 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் நோக்கத்துக்காகத் தீர்மானிப்பதற்கென, பணிப்பாளர் தலைமையதிபதி, ஏனைய காரணிகளுக்கிடையே, பின்வருவனவற்றைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்:-

(அ) இலங்கையில் உற்பத்திக்கு அல்லது பாவனைக்கு, முழுமையான நியதிகளில் ஒப்பீட்டு அளவில், மிகைப் பொருளாகத் திணிக்கப்பட்ட அல்லது மானியமளிக்கப்பட்ட இறக்குமதிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இருந்துள்ளதாவென்பது;

(ஆ) அதேபோன்ற உள்நாட்டு உற்பத்திப்பொருளின் விளைவுடன் ஒப்பிடுகையில், மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்ட அல்லது மானியமளிக்கப்பட்ட இறக்குமதிகளின்மூலம் குறிப்பிடத்தக்க விலைவீழ்ச்சிக் குறைப்பு இருந்துள்ளதாவென்பது; அத்துடன்

(இ) குறிப்பிடத்தக்கவோர் அளவுக்கு விலைகளைக் குறைக்கும் வகையில், அல்லது குறிப்பிடத்தக்கவோர் அளவுக்கு வேறுவகையாக ஏற்பட்டிருக்கக்கூடிய விலை அதிகரிப்புகளைத் தடுக்கும்வகையில் மிகைப் பொருளாகத் திணிக்கப்பட்ட அல்லது மானியமளிக்கப்பட்ட இறக்குமதிகளின் விளைவு அத்தகையதாக உள்ளதாவென்பது.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, உற்பத்திச் செய்முறை, உற்பத்தியாளர்களின் விற்பனைகள் மற்றும் இலாபங்கள் போன்ற, அத்தகைய கட்டளைக்கற்களுக்கிணங்க, கிடைக்கக்கூடியதாகவுள்ள தரவு உற்பத்தியின் தனிவேறான அடையாளங்காணுதலை அனுமதிக்குமிடத்து, அதேபோன்ற உற்பத்திப் பொருளின் உள்நாட்டு உற்பத்தி தொடர்பாக மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்ட அல்லது மானியமளிக்கப்பட்ட இறக்குமதிகளின் விளைவை மதிப்பீடுசெய்தல் வேண்டும்.

(3) உற்பத்தியின் தனிவேறான அடையாளங்காணுகை இயன்றதாகவிராதிருப்பின், பணிப்பாளர் தலைமையதிபதி, அதற்கான தகவல் வழங்கப்படக்கூடிய அதேபோன்ற உள்நாட்டு உற்பத்திப்பொருளை உள்ளடக்குகின்ற உற்பத்திப்பொருட்களின் மிக ஒழுக்கமான தொகுதியின் அல்லது வர்த்தகத்தின் உற்பத்தியைப் பரிசோதனை செய்வதன்மூலம் மிகைப் பொருளாகத் திணிக்கப்பட்ட அல்லது மானியமளிக்கப்பட்ட இறக்குமதிகளின் விளைவுகளை மதிப்பீடு செய்தல் வேண்டும்.

(4) மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு நுண்ணாய்வொன்று தொடர்பாக, மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்ட இறக்குமதி களுக்கும் இலங்கைக் கைத்தொழிலுக்கான ஊறுக்கும் இடையே யான காரணம்சார் தொடர்பை எடுத்துக்காட்டுதல், பணிப் பாளர் தலைமையதிபதியின் முன்னருள்ள இயைபான எல்லாச் சான்றுகளினதும் பரிசோதனையை அடிப்படையாகக் கொண் டிருத்தல் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி, இலங்கைக் கைத்தொழிலை அதேநேரத்தில் ஊறுபடுத்துகின்ற, மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்ட அல்லது மானியமளிக்கப்பட்ட இறக்குமதிகளைத் தவிர, வேறெவையேனும் அறியப்பட்ட காரணிகளையும் பரிசோதனைசெய்தல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர் தலைமையதி பதியினாற் கவனத்திற்கொள்ளப்படக்கூடிய காரணிகள், மற்ற வற்றுக்கிடையில் பின்வருவனவற்றையும் உள்ளடக்கலாம்:-

(அ) சம்பந்தப்பட்ட பண்டங்களின் அல்லது மிகைப் பொருளாகத் திணிக்கப்பட்ட விலைகளில் விற்பனை செய்யப்படாத இறக்குமதிகளின் மானியமளிக்கப்படாத இறக்குமதிகளின் தொகையும் விலைகளும்;

(ஆ) கோரிக்கையிலான சுருங்கல் அல்லது பாவனை மாதிரி களிலான மாற்றங்கள்;

(இ) வெளிநாட்டு மற்றும் இலங்கை உற்பத்தியாளர்களின் வியாபார மட்டுப்பாட்டு வழக்கங்களும் அவர்களுக்கிடையிலான போட்டாபோட்டியும்;

(ஈ) தொழினுட்பவியலிலான அபிவிருத்திகள்; அத்துடன்

(உ) இலங்கைக் கைத்தொழிலின் ஏற்றுமதிப் புரிகையும் உற்பத்தித் திறனும்.

(7) மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்ட அல்லது மானியமளிக்கப்பட்ட இறக்குமதிகள் அல்லாத வேறு காரணிகளால் விளைவிக்கப்பட்ட இலங்கைக் கைத்தொழிலுக்கான ஊறு, மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்ட அல்லது மானியமளிக்கப்பட்ட இறக்குமதிகளுக்கு ஏற்றிக் கூறப்படுதலாகாது.

முக்கியமான ஊறு பற்றிய அச்சுறுத்தல்.

**78.** (1) இச்சட்டத்தின் நோக்கத்துக்காக இலங்கைக் கைத்தொழிலுக்கான முக்கியமான ஊறு பற்றிய அச்சுறுத்தலைத் தீர்மானித்தலானது, வெறுமனே சார்த்துதல், ஊகம் அல்லது தொலைவான நிகழ்தகவு என்பனவற்றையல்லாது நிகழ்வுகளையே அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன் மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்ட அல்லது மானியமளிக்கப்பட்ட உற்பத்திப்பொருட்கள், எந்நிலைமையில் ஊறு விளைவிக்குமோ அந்த நிலைமையொன்றை உருவாக்கக்கூடிய சூழ்நிலைகளிலான மாற்றம், தெளிவாக முற்காணப்பட்டு உடனடியாக நிகழவுள்ளதாகவிருத்தல் வேண்டும்.

(2) முக்கியமான ஊறுபற்றிய அச்சுறுத்தல் உள்ளதாவென்பதைத் தீர்மானிக்கையில், பணிப்பாளர் தலைமையதிபதி, மற்றவற்றுக்கிடையில், பின்வரும் காரணிகளை விசேட கவனத்துடன் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்:-

(அ) பெருமளவில் அதிகரித்த இறக்குமதிசெய்வதற்கான சாத்தியத்தைச் சுட்டிக்காட்டி இலங்கைச் சந்தையினுள் மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்ட அல்லது மானியமளிக்கப்பட்ட இறக்குமதிகளின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு வீதம்;

(ஆ) மேலதிகமான எவையேனும் ஏற்றுமதிகளை ஏற்பதற்கு வேறு ஏற்றுமதிச் சந்தைகள் கிடைக்கக்கூடியமையைக் கணக்குக்கெடுத்து, இலங்கைச் சந்தைக்கும் பெருமளவில் அதிகரித்த மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்ட அல்லது மானியமளிக்கப்பட்ட ஏற்றுமதிகளின் சாத்தியம்பற்றிச் சுட்டிக்காட்டி, ஏற்றுமதியாளரின் போதிய இலகுவாகக் கையாளக்கூடிய கொள்வனவு அல்லது அதில் உடனடியாக நிகழவுள்ள பெருமளவின தான அதிகரிப்பு;

(இ) இலங்கை விலைகளின்மீது குறிப்பிடத்தக்க குறைக்கின்ற அல்லது இறக்குகின்ற விளைவை ஏற்படுத்தும், அத்துடன் மேலதிக இறக்குமதிசெய்யப்பட்ட பண்டங்களுக்கான கோரிக்கையை அதிகரிக்கின்ற சாத்தியத்தை உண்டாக்கும் விலைகளில் இறக்குமதிகள் உட்கொணரப்படுகின்றனவாவென்பது;

(ஈ) நுண்ணாய்வு செய்யப்படுகின்ற உற்பத்திப்பொருட்கள் பொருட்பட்டியல்கள்; அத்துடன்

(உ) எதிரீட்டுத்தீர்வை நுண்ணாய்வொன்றின் விடயத்தில், சம்பந்தப்பட்ட மானியத்தின் அல்லது மானியங்களின் தன்மையும், அதிலிருந்து எழக்கூடிய வியாபார விளைவுகளும்.

(3) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட காரணிகளுள் எவையும், தானாகவோ ஏதேனும் முடிபான வழிகாட்டுதலை அவசியமான முறையில் கொடுப்பதாகக் கருதப்படுதலாகாது, ஆனால் கவனத்துட் கொள்ளப்படும் காரணிகளின் முழுமையும், மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்ட அல்லது மானியமளிக்கப்பட்ட உற்பத்திப்பொருட்களின் மேலதிக இறக்குமதிகள் உடனடியாக நிகழவுள்ளனவென்று அத்துடன் பாதுகாப்பான நடவடிக்கை எடுக்கப்பட்டாலொழிய, ஊறு ஏற்படுமென்ற முடிபுக்கு இட்டுச் செல்லவேண்டும்.

முக்கியமான தாமதம்.

**79.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இலங்கைக் கைத்தொழிலைத் தாபிப்பதற்கான முக்கியமான தாமதம் பற்றிய தீர்மானமொன்று-

(அ) அதேபோன்ற உற்பத்திப்பொருட்களை உற்பத்தி செய்கின்ற இலங்கைக் கைத்தொழில் தாபிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது;

(ஆ) அத்தகையவொரு கைத்தொழில் ஒப்பேறக்கூடியதானது;

(இ) அத்தகையவொரு கைத்தொழிலைத் தாபித்தல் உடனடியாக நிகழவுள்ளது; அத்துடன்

(ஈ) மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்ட அல்லது மானியமளிக்கப்பட்ட இறக்குமதிகள், மிகைப்பொருள் திணிப்பு அல்லது எதிரீட்டுத் தீர்வையிடப்படற்பாலதான மானியம் என்பவற்றின் விளைவுகளினூடாக, அத்தகையவொரு கைத்தொழில் தாபிக்கப்படுதலை முக்கியமானமுறையில் தாமதப்படுத்துகின்றது,

எனப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட தீர்மானமொன்றை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, பணிப்பாளர் தலைமையதிபதி, புதிய முதலீட்டுக் கருத்திட்டங்களை அல்லது ஏலவேயுள்ள பொறித்தொகுதிகளை விசாலிப்பதனை இலக்காகக்கொண்ட சாத்திய தன்மைபற்றிய கற்கைகளும், இணக்கப்பேச்சுமூலம் பெறப்பட்ட கடன்களும் மற்றும் எந்நேரத்தொகுதிகளைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தங்களும் போன்ற காரணிகளையும், அத்தகையவொரு கைத்தொழிலைத் தாபிப்பதற்குக் குறிப்பிடத்தக்க முதலீடு இருந்துள்ளதாவென்பதையும் மற்றவற்றுக்கிடையில் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

*இரகசியமான தகவல் வெளியிடப்படுதலாகாது.*

**80**. இருபத்தைந்தாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் இரகசியமான தகவலாகக் கொள்ளப்படுவதற்கு உரித்துள்ளதும், இச்சட்டத்தின்கீழ் நடாத்தப்படும் நுண்ணாய்வொன்றின்போது எவரேனுமாளினால் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக விருத்தல் வேண்டும்.

*நிதிமுறை மீளாய்வு.*

**81**. இச்சட்டத்தின்கீழான நுண்ணாய்வு, மீளாய்வு அல்லது மீளளிப்பு நடவடிக்கைமுறையொன்றில் பங்குபற்றிய அக்கறை கொண்டிருந்த எவரேனும் திறத்தவர்,அரசியலமைப்பின் 140 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி நீதிமுறை மீளாய்வு வழக்குநடவடிக்கையை நாடலாம்.

*அமைச்சுக்களுக் கிடையேயான குழுவை அமைத்தல்.*

**82**. (1) இச்சட்டத்தின் நோக்கத்துக்காக அமைக்கப்படவேண்டிய, அமைச்சுக்களிடையேயான குழு, (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்; அவர் அமைச்சுகளுக்கிடையிலான குழுவின் தவிசாளராக இருத்தல் வேண்டும்;

(ஆ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பெயர் குறிக்கப்பட்டநியமத்தர்;

(இ) கைத்தொழில் அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பெயர் குறிக்கப்பட்டநியமத்தர்;

(ஈ) உள்நாட்டு வியாபாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பெயர்குறிக்கப்பட்ட நியமத்தர்;

(உ) கமத்தொழில் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பெயர் குறிக்கப்பட்ட நியமத்தர்;

(ஊ) வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பெயர் குறிக்கப்பட்ட நியமத்தர்;

(எ) சுங்கத் தலைமையதிபதி அல்லது அவரது பெயர் குறிக்கப்பட்ட நியமத்தர்; அத்துடன்

(ஏ) இலங்கை மத்திய வங்கி ஆளுநரின் நியமத்தர் ஒருவர்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழ் தவிசாளர், அவரது கவனத்துக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற முன்மொழிவின் தன்மையைக் கவனத்திற்கொண்டு, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் கலந்தாலோசனையுடன், தோதானதென அவர் கருதுமிடத்து, இரண்டுக்கு மேற்படாத வேறு உறுப்பினர்களை அமைச்சுகளிடையிலான குழுவிற்கு உடன் சேர்க்கலாம்.

(3) தவிசாளர் சமுகமளித்திருப்பின், அமைச்சுகளுக்கிடையிலான குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும்; அத்துடன் தவிசாளர் அத்தகைய ஏதேனும் கூட்டத்திற்கு வருகை தராதிருந்தால், சமுகமளித்துள்ள உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்கவெனச் சமுகமளித்துள்ள உறுப்பினர்களுள் ஒருவரைப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

(4) அமைச்சுகளுக்கிடையிலான குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் நான்காதல் வேண்டும்; அத்துடன் அதனது கூட்டங்களை நடாத்துதல், அதன் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் தொடர்பான நடவடிக்கைமுறை அமைச்சுகளுக்கிடையிலான குழுவினால் ஒழுங்குபடுத்தப்படுதல் வேண்டும்.

*பணிப்பாளர் தலைமையதிபதி யினால் கையளிக்கப்படுதல்.*

**83.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின் கீழான அவரது பணிகளுள் மற்றும் தத்துவங்களுள் எவற்றையும், பிரதி வர்த்தகப் பணிப்பாளர் என்ற பதவி வரிசைக்குக் குறையாத பதவியிலுள்ள எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் பணி அல்லது தத்துவம் எவ்வலுவலருக்குக் கையளிக்கப்படுகின்றதோ அவ் அலுவலர் ஒருவர், பணிப்பாளர் தலைமையதிபதியினால் விடுக்கப்படக் கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கமைய, அத்தகைய பணியை அல்லது தத்துவத்தை நிறைவேற்றுதல் அல்லது பிரயோகித்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின் கீழான ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும்,அவ்வாறு கையளிக் கப்பட்ட ஏதேனும் பணியை அல்லது தத்துவத்தை நிறைவேற்று வதற்கான அல்லது பிரயோகிப்பதற்கான உரிமையைக் கொண் டிருத்தல் வேண்டும்.

*ஒழுங்குவிதிகள்.*

**84.** (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அவை தொடர்பில் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர்ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர் வசதியாகக் கூடியளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

வரைவிலக் கணங்கள்.

**85.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய–

"செயற்படத்தகு மானியம்" என்பது–

(அ) இச்சட்டத்தின் 66 ஆம் பிரிவின் கருத்தெல் லையினுள் குறிப்பானதாக உள்ளதெதுவும்;

(ஆ) இச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறாக தன்மையின் பெறுகையில் விளைவாகின்ற அதன் அளிப்பு; அத்துடன்

(இ) இச்சட்டத்திற்கான மூன்றாவது அட்டவணை யில் குறித்துரைக்கப்பட்டதல்லாததாக உள்ளது எனவுமான,

மானியமொன்று என்று பொருளாகும்;

"நாடு" என்பது, ஒரு சுங்கச் சமாசத்தையும் அல்லது சுங்க ஆள்புலத்தையும் உள்ளடக்கும்;

"திணைக்களம்" என்பது, வர்த்தகத் திணைக்களம் என்று பொருளாகும்;

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, வர்த்தக பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

"சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தில் கொடுக்கப்பட்டவாறான அதே பொருளை உடையதா தல் வேண்டும்;

"அதேபோன்ற உள்நாட்டு உற்பத்திப்பொருள்" என்பது, நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் "அதேபோன்ற உற்பத்திப்பொருளாக" உள்ளதாய் இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்ட உற்பத்திப் பொருள் என்றுபொருளாகும் என்பதுடன், ஏதேனும் கமத்தொழில் உற்பத்திப்பொருளையும் அல்லது கால்நடை உற்பத்திப் பொருளையும் உள்ளடக்கும்;

"மிகைப்பொருள் திணிப்பு" என்பது, உற்பத்திப் பொருளொன்றை அதன் வழமையான பெறுமதிக்குக் குறைந்தவொரு விலையில் இலங்கையின் வர்த்தகத் துக்கு அறிமுகப்படுத்துதல் என்று பொருளாகும்;

"மிகைப்பொருள் திணிப்பு விளிம்பு" என்பது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏற்றுமதி விலையையும் வழமையான பெறுமதியையும் ஒப்பிடுவதிலிருந்து விளைகின்றவாறு, ஏற்றுமதி விலையின் நூற்றுவீத மொன்றாக வெளிப்படுத்தப்பட்ட, இவை இரண்டுக்கு மிடையிலான வித்தியாசம் என்று பொருளாகும்;

"ஊறு" என்பது, வேறுவகையாகக் குறித்துரைக்கப்பட்டா லொழிய, இலங்கைக் கைத்தொழிலொன்றுக்கான முக்கியமான ஊறுபற்றிய அச்சுறுத்தல் அல்லது இலங்கைக் கைத்தொழிலொன்றைத் தாபிப்பதிலான முக்கியமான தாமதம் என்று பொருளாகும்;

"நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருள்" என்பது, நுண்ணாய்வை ஆரம்பித்துவைத்தல் பற்றிய அறிவித்தலில் விவரிக்கப்பட்டவாறு மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு நுண்ணாய்வொன்றுக்கமைந்த உற்பத்திப்பொருளொன்று அல்லது மானியமளிக் கப்பட்ட இறக்குமதிகள் என்று பொருளாகும்;

"அதேபோன்ற உற்பத்திப்பொருள்" என்பது, ஒரே மாதிரியாகவுள்ள உற்பத்திப் பொருளொன்று, அதாவது, எல்லா அம்சங்களிலும் நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப்பொருளைப் போன்றது அல்லது அத்தகையவோர் உற்பத்திப்பொருள் இல்லாதவிடத்து, எல்லா அம்சங்களிலும் அதைப்போன்றதாக இராத போதிலும், நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப் பொருளின் பண்புகளைப் பெருமளவு ஒத்திருக்கின்ற பண்புகளையுடைய இன்னுமோர் உற்பத்திப் பொருளைப்போன்றது என்று பொருளாகும்;

"உறுப்பு நாடு" என்பது, 1994, ஏப்பிறல் 15 ஆம் தேதியன்று செய்துகொள்ளப்பட்ட மரக்கேஷ் உடன்படிக்கையினால் தாபிக்கப்பட்ட உலக வியாபார ஒழுங்கமைப்பின் ஓர் உறுப்புநாடு என்று பொருளாகும்;

"அமைச்சர்" என்பது, வியாபாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் என்று பொருளாகும்;

"செயற்படத்தகாத மானியம்" என்பது, இச்சட்டத்தின் 65 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்டவாறு எதிரீட்டுத் தீர்வையொன்றுக்கு அமையாத ஒரு மானியம் என்று பொருளாகும்;

"அக்கறை கொண்டுள்ள திறத்தவர்கள்" என்பது,-

(i) நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப் பொருளின் ஏற்றுமதியாளர் அல்லது வெளிநாட்டு உற்பத்தியாளர்;

(ii) நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப் பொருளின் இறக்குமதியாளர்;

(iii) அவற்றின் உறுப்பினர்களுள் பெரும்பான்மை யோர், நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப் பொருளின் உற்பத்தியாளர்களாக, ஏற்றுமதி யாளர்களாக அல்லது இறக்குமதியாளர்களாக உள்ள வியாபார அல்லது தொழிற்கழகங்கள்;

(iv) ஏற்றுமதி செய்கின்ற நாட்டின் அரசாங்கம்;

(v) இலங்கையில் அதேபோன்ற உள்நாட்டு உற்பத்திப் பொருளின் உற்பத்தியாளர்; அத்துடன்

(vi) அவற்றின் உறுப்பினர்களுள் பெரும்பான்மை யோர் இலங்கையில் அதேபோன்ற உள்நாட்டு உற்பத்திப் பொருளை உற்பத்தி செய்கின்ற வியாபார மற்றும் தொழிற்கழகங்கள்;

என்று பொருளாகும்;

"தடைசெய்யப்பட்ட மானியம்" என்பது, -

(அ) இச்சட்டத்துக்கான நாலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவை உட்பட, ஏற்றுமதி புரிகையின் மீது, தனியாகவேனும் அல்லது ஏனைய பல்வேறு நிபந்தனைகளுள் ஒன்றாக வேனும் (மானியம் அளித்தலானது, உண்மை யில், உள்ளபடியான அல்லது எதிர்பார்க்கப் பட்ட ஏற்றுமதியுடன் அல்லது ஏற்றுமதி உழைப்புக்களுடன் இணைக்கப்பட்டுள்ளதென நிகழ்வுகள் எடுத்துக்காட்டுமிடத்து), சட்டத்தில் அல்லது நிகழ்வில் நேர்வான மானியங்கள் என்று; அத்துடன்

(ஆ) இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களை விட உள்நாட்டுப் பண்டங்களைப் பயன்படுத்துவதன் மீது, தனியாகவேனும் அல்லது ஏனைய பல்வேறு நிபந்தனைகளுள் ஒன்றாகவேனும், நேர்வான மானியங்கள் என்று,

பொருளாகும்.

"தற்காலிக வழிமுறைகள்" என்பது,-

(அ) இச்சட்டத்தின் I ஆம் பாகம் தொடர்பாக, தற்காலிகத் தேவையைச் செலுத்துவதற்கான அல்லது பூர்வாங்கத் தீர்மானத்தில் காணப் படும் மதிப்பிடப்பட்ட மிகைப்பொருள் திணிப்பு விளிம்புக்குச் சமமான பிணைப்பொறுப் பொன்றைக் கொடுத்துதவுவதற்கான தேவைப் பாடு என்று; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் II ஆம் பாகம் தொடர்பாக, தற்காலிகத் தீர்வையைச் செலுத்துவதற்கான அல்லது பூர்வாங்கத் தீர்மானத்தில் காணப் படும் மதிப்பிடப்பட்ட மானியத்துக்குச் சமமான பிணைப்பொறுப்பொன்றைக் கொடுத்துதவு வதற்கான தேவைப்பாடு என்று,

பொருளாகும்,

"இலங்கை கைத்தொழில்" என்பது, உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்களுடன் அல்லது இறக்குமதியாளர் களுடன் தொடர்புபட்டவர்களாகவிருக்கும்போது அல்லது மிகைப்பொருளாகத் திணிக்கப்பட்டதெனச் சார்த்தப்பட்ட நுண்ணாய்வு செய்யப்பட்ட உற்பத்திப் பொருளின் அல்லது உற்பத்திப்பொருட்களின் இறக்குமதியாளர்களாகத் தாமே உள்ளபோது, இலங்கைக் கைத்தொழில் என்ற பதம், ஏனைய உற்பத்தியாளர்களைக் குறிப்பீடு செய்கின்றதாகப் பொருள் கோடப்படலாம் என்பது தவிர்ந்த அதே போன்ற உள்நாட்டு உற்பத்திப்பொருளின் அல்லது உற்பத்திப்பொருட்களின் முழு எண்ணிக்கை யினருமான உள்நாட்டு உற்பத்தியாளர்கள் அல்லது அவ்வுற்பத்திப் பொருளின் எவர்களினது கூட்டு விளைவு, அவ்வுற்பத்திப்பொருளின் அல்லது உற்பத்திப்பொருட்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தி யின் பாரிய விகிதாசாரமாக அமைகின்றதோ அவர் களுள் அத்தகையவோர் என்று பொருளாகும்.

இந்த வரைவிலக்கணத்தின் நோக்கங்களுக்காக, பின்வரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்களுடன் அல்லது இறக்குமதியாளர்களுடன் தொடர்புபட்டவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்:-

(i) அவர்களுள் ஒருவர் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ மற்றவரைக் கட்டுப்படுத்தினால்; அல்லது

(ii) அவர்கள் இருவரும் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ மூன்றாம் ஆளொருவரினால் கட்டுப்படுத்தப்பட்டால்; அல்லது

(iii) அவர்கள் ஒன்று சேர்ந்து நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ மூன்றாம் ஆளொருவரைக் கட்டுப்படுத்தினால்; அல்லது

ஆயின், சம்பந்தப்பட்ட உற்பத்தியாளர், தொடர்புபட்டிராத உற்பத்தியாளர்களைப் போலல்லாது வித்தியாசமான முறையில் நடப்பதனைச் செய்விக்கும்வகையில் தொடர்பின் பயன் அத்தகையதாகவுள்ளதென நம்புவதற்கான அல்லது சந்தேகிப்பதற்கான ஏதுக்கள் இருத்தல் வேண்டும். இவ்வரைவிலக்கணத்தின் நோக்கங்களுக்காக, சட்டப்படி அல்லது தொழிற்பாட்டு ரீதியில் ஒருவர், இன்னொருவர் மீது மட்டுப்பாட்டை அல்லது நெறிப்படுத்துகையைப் பிரயோகிப்பதற்கான நிலையிலுள்ள போது, முன்னையவர், பின்னையவரைக் கட்டுப்படுத்துபவராகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

"மானியம்" என்பது, இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் உற்பத்திப்பொருட்கள் தொடர்பாக-

(அ) அரசாங்கத்தினாலான அல்லது ஒரு பகிரங்கக் குழுவினால் செய்யப்பட்ட நிதிப் பங்களிப்பு, இது பின்வருவனவற்றை உட்படுத்தும்:-

(i) அவ்வரசாங்கத்திடமிருந்தான அல்லது ஒரு பகிரங்கக் குழுவிடமிருந்தான நிதி

களின் நேரடிக் கைமாற்றம் (மானியக் கொடைகள், கடன்கள், ஒப்புரவுச் செலுத்துகை முதலியன);

(ii) அவ்வரசாங்கத்திடமிருந்தான அல்லது ஒரு பகிரங்கக் குழுவிடமிருந்தான நிதிகளின் அல்லது பொறுப்புக்களின் நிகழவுள்ள நேரடிக் கைமாற்றம் (கடன் உத்தரவாதங்கள் முதலியன);

(iii) அவ்வரசாங்கத்துக்கு அல்லது பகிரங்கக் குழுவுக்குப் போகுமதியான விட்டுவிடப் படுகைக்கு அல்லது அரசிறை சேகரிக் கப்படாமை (வரி வரவுகள் போன்ற நிதி ஊக்குவிப்புகள் முதலியன);

(iv) வழமையான உள்ளகக்கட்டமைப்பு வசதிகளை வழங்கும்போதல்லாது வேறுவகையாக அவ்வரசாங்கத்தினால் அல்லது பகிரங்கக்குழுவினால் பண்டங்கள் அல்லது சேவைகள் வழங்கப்படுதல்;

(v) அவ்வரசாங்கத்தினால் அல்லது பகிரங்கக் குழுவினால் உற்பத்திப்பொருட்கள் கொள்வனவு செய்யப்படுதல்;

(vi) நிதியளிக்கும் அமைப்பொன்றுக்கான கொடுப்பனவுகள் அல்லது மேலே (i) முதல் (v) வரையிலான பந்திகளின் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணிகளை நிறைவேற்றுமாறு தனியார் குழுவொன்றுக்குப் பொறுப்பளித்தல் அல்லது அதனைப்

*பணித்தல் இது வழமையாக அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்படுவதுடன் இவ்வழக்கமானது, உள்ளமையாக, அரசாங்கங்களினால் வழமையாகப் பின்பற்றப்படும் வழக்கங்களிலிருந்து வித்தியாசப்படுகின்றது; அல்லது*

*(ஆ) அந்த அரசாங்கத்திடமிருந்து அல்லது பகிரங்கக் குழுவிடமிருந்து பெறப்படும் 1994 ஆம் ஆண்டின் சுங்கத் தீர்வைகளும் வியாபாரமும் பற்றிய பொது உடன்படிக்கையின் XVI ஆம் உறுப்புரையில் குறிப்பீடுசெய்யப்பட்ட கருத்தில் எவ்வகையினதுமான வருமானம் அல்லது விலை ஆதாரம் என்று பொருளாகும்; அத்துடன், அதன்மூலம் நன்மையொன்று அளிக்கப்படும், ஆனால் அவ்வரசாங்கத்தினால் உள்நாட்டுப் பாவனைக்காக ஒதுக்கிவைக்கப்பட்டபோது அதேபோன்ற உற்பத்திப்பொருளினால் ஏற்கப்பட்ட தீர்வைகளிலிருந்தும் வரிகளிலிருந்தும் ஏதேனும் ஏற்றுமதி உற்பத்திப்பொருளுக்கு விலக்களிக்கப்படுதல் அல்லது ஒன்று திரண்டுள்ளவற்றுக்கு விஞ்சுதலாகவிராத தொகைகளில் அத்தகைய தீர்வைகளும் வரிகளும் குறைக்கப்படுதல், இவ்வரைவிலக்கணத்தின் கருத்துக்குட்பட "மானியம்" ஒன்றாகக் கருதப்படுதலாகாது.*

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**86.** *இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

**முதலாம் அட்டவணை** (பிரிவு 26(1))

**கிடைக்கக்கூடியதாகவுள்ள தகவலின் மீது நம்பியிருத்தல்**

1. நுண்ணாய்வு ஆரம்பித்துவைக்கப்பட்ட பின்னர் இயன்றளவு விரைவாக, பணிப்பாளர் தலைமையதிபதி, எவரேனும் அக்கறை கொண்டுள்ள திறத்தவரிடமிருந்து தேவைப்படும் தகவலையும்) அத்தகவல் அக்கறை கொண்டுள்ள திறத்தவரினால் அதன் மறுமொழியில் எவ்வகையில் படிமுறைப்படுத்தப்பட வேண்டு மென்றும் விபரமாகக் குறித்துரைத்தல் வேண்டும். தகவலுக்கான வேண்டுகோளில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் தகவல் வழக்கப்படாவிடின், கிடைக்கக்கூடிய நிகழ்வுகளின் அடிப்படை யில், இலங்கைக் கைத்தொழிலினால் நுண்ணாய்வு ஆரம்பித்து வைக்கப்படுவதற்கான விண்ணப்பத்தில் அடங்கியுள்ளவை உட்பட, பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானங்களைச் செய்வதற்குச் சுதந்திரமுடையவராதல் வேண்டுமென்பதைத், திறத்தவர் அறிந்துள்ளாரென்பதையும் பணிப்பாளர் தலைமை யதிபதி உறுதிப்படுத்துதல் வேண்டும்.

2. அக்கறைகொண்டுள்ள திறத்தவரொருவர் அவரின் மறுமொழி யைக் குறிப்பிட்டவோர் ஊடகத்தில் (உ-ம், கணனி நாடா) அல்லது கணனி மொழியில் வழங்குதல் வேண்டுமெனவும் பணிப்பாளர் தலைமையதிபதி வேண்டுகோள் விடுக்கலாம். அத்தகையவொரு வேண்டுகோள் விடுக்கப்படுமிடத்து, திணைக்களம் விருப்பப்பட்ட ஊடகத்தில் அல்லது கணனி மொழியில் மறுமொழியளிப்பதற்கு அக்கறைகொண்டுள்ள திறத்தவரின் நியாயமான ஆற்றலைக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், குழுமத்தினால் பயன்படுத்தப்பட்டதல்லாத வேறு கணினிமுறைமையை அதன் மறுமொழிக்காகப் பயன்படுத்துமாறு கம்பெனிக்கு வேண்டு கோள் விடுக்காதிருக்கலாம். அக்கறை கொண்டுள்ள திறத்தவர் கணனிமயமாக்கப்பட்ட கணக்குகளைப் பேணாதிருப்பின், அத்துடன் வேண்டுகோள் விடுக்கப்பட்டவாறு மறுமொழியை முன் வைத்தல், அக்கறை கொண்டுள்ள திறத்தவர்மீது நியாயமற்ற மேலதிகச் சுமையை அது விளைவிக்குமாயின், உதாரணமாக அது நியாயமற்ற மேலதிகச் செலவையும் சிரமத்தையும் ஏற்படுத்து மாயின், பணிப்பாளர் தலைமையதிபதி, கணினிமய மாக்கப்பட்ட மறுமொழியொன்றுக்கான வேண்டுகோளை வலுக்கட்டாயப்படுத்த லாகாது. அக்கறை கொண்டுள்ள திறத்தவர் அத்தகைய ஊடகத்தில்

அல்லது கணினிமொழியில் அதன் கணினிமயமாக்கப்பட்ட கணக்குகளைப் பேணாதிருப்பின், மற்றும் வேண்டுகோளொன்று விடுக்கப்பட்டவாறாக ஒரு மறுமொழியை முன்வைத்தல், அக்கறை கொண்டுள்ள திறத்தவரின்மீது நியாய மற்ற மேலதிகச் செலவையும் சிரமத்தையும் அது உட்படுத்துமாயின், பணிப்பாளர் தலைமை யதிபதி, குறிப்பிட்டவோர் ஊடகத்தில் அல்லது கணினிமொழியில் மறுமொழிக்கான வேண்டுகோளை வலுக்கட்டாயப்படுத்துத லாகாது.

3. சரிபார்க்கப்படற்பாலதும், தகாத சிரமங்களின்றி நுண்ணாய்வில் பயன்படுத்தப்படக் கூடியவகையில் தோதானமுறையில் சமர்ப் பிக்கப்பட்டதும், உரியநேரத்தில் வழங்கப்பட்டதும், ஏற்புடையற் பாலதானவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதியினால் வேண்டுகோள் விடுக்கப்பட்ட ஓர் ஊடகத்தில் அல்லது கணினி மொழியில் வழங்கப்பட்டதுமான எல்லாத் தகவலும் தீர்மானங் கள் செய்யப்படும்போது கணக்குக்கெடுக்கப்படுதல் வேண்டும். திறத்தவரொருவர் விடுக்கப்பட்ட ஊடகத்தில் அல்லது கணினிமொழியில் மறுமொழியளிக்காது விட்டால், ஆனால் 2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள சூழ்நிலைகள் திருப்திசெய்யப்பட் டுள்ளனவெனப் பணிப்பாளர் தலைமையதிபதி கண்டால், இது, நுண்ணாய்வைக் குறிப்பிடத்தக்கமுறையில் தடைசெய்வதாக கருதப்படுதலாகாது.

4. குறிப்பிட்டவோர் ஊடகத்தில் வழங்கப்பட்டால் (உ-ம்: கணினி நாடா) தகவலை செய்முறைப்படுத்தலுக்கான ஆற்றலைப் பணிப்பாளர் தலைமையதிபதி கொண்டிராதவிடத்து, தகவலானது எழுதப்பட்ட விடயம் என்ற வடிவத்தில் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதிக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதாக விருக்கும் வேறேதேனும் வடிவத்தில் வழங்கப்படுதல் வேண்டும்.

5. வழங்கப்பட்ட தகவல் எல்லா அம்சங்களிலும் திறமையாகவிராத போதிலும், பணிப்பாளர் தலைமையதிபதி அதனைப் புறக் கணிப்பது நியாயமாகவிருக்காது; ஆயின், அக்கறைகொண்டுள்ள திறத்தவர், அவரின் ஆற்றலுக்கியன்றவரை செயலாற்றியிருத்தல் வேண்டும்.

6. சான்று அல்லது தகவல் ஏற்றுக்கொள்ளப்படாவிடின், அதற் கான காரணங்கள், வழங்குகின்ற திறத்தவருக்கு உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் நுண்ணாய்வின் கால எல்லைகளை உரிய கவனத்துக்கெடுத்து, நியாயமானவொரு காலப்பகுதியினுள் மேலதிக விளக்கங்களை வழங்குவதற்கான வாய்ப்பொன்று அவருக்களிக்கப்படுதல் வேண்டும். அவ்விளக் கங்கள் திருப்தியானவையல்லவெனப் பணிப்பாளர் தலைமைய திபதி, கருதினால், அத்தகைய சான்றை அல்லது தகவலை நிராகரிப்பதற்கான காரணங்கள், வெளியிடப்பட்ட எவையேனும் முடிவெடுப்புகளில் கொடுக்கப்படுதல் வேண்டும்.

7. பணிப்பாளர் தலைமையதிபதி, வழமையான பெறுமதி தொடர் பிலானவை உட்பட்ட அவரது தீர்மானங்களுக்கு நுண்ணாய்வை ஆரம்பித்துவைப்பதற்கான விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட தகவலுட்பட, இரண்டாம் மூலத்திலிருந்தான தகவலை அடிப் படையாகக் கொள்ளவேண்டியவராகவிருப்பின், அவர் விசேட மதிநுட்பத்தோடு அவ்வாறு செய்தல் வேண்டும். அத்தகைய விடயங்களில், பணிப்பாளர் தலைமையதிபதி, செயல்முறைக் குகந்தவிடத்து, வெளியிடப்பட்ட விலைப்பட்டியல்கள், அலுவலக முறையான இறக்குமதிப் புள்ளிவிபரங்கள், சுங்க விபரத் திரட்டுகள் போன்ற, அவரின் கையாளுகையிலுள்ள ஏனைய சுயேச்சையான மூலங்களிலிருந்தும் மற்றும் நுண்ணாய்வின் போது அக்கறை கொண்டுள்ள ஏனைய திறத்தவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவலிலிருந்தும் தகவலைச் செவ்வை பார்த்தல் வேண்டும். எவ்வாறாயினும், அக்கறைகொண்டுள்ள திறத்தவர் ஒருவர் ஒத்துழைக்காதுவிடுவதனால் இயைபான தகவல் அதிகாரிகளுக்கு வெளியிடப்படாதிருப்பின், இந்நிலைமை யானது, திறத்தவர் ஒத்துழைத்திருப்பின் அவர் பெற்றிருக்கக் கூடிய அனுகூலத்தை அவர் பெறுவதற்கு இட்டுச்செல்லக்கூடும்.

**இரண்டாம் அட்டவணை** (பிரிவு 33(3))

**3 ஆம் பிரிவைப் பின்பற்றி ஸ்தலத்திலான நுண்ணாய்வுகளுக்கான நடவடிக்கைமுறைகள்**

1. நுண்ணாய்வொன்று ஆரம்பித்துவைக்கப்பட்டதன்மேல், ஏற்றுமதிசெய்யும் நாடுகளின் அதிகாரிகளுக்கும் சம்பந்தப் பட்டனவாக அறியப்பட்ட குழுமங்களுக்கும் ஸ்தலத்திலான நுண்ணாய்வுகளை நிறைவேற்றுவதற்குப் பணிப்பாளர் தலை மையதிபதிக்குள்ள முன்னம் பற்றி அறிவிக்கப்படுதல் வேண்டும்.

2. விதிவிலக்கான சூழ்நிலைகளில், நுண்ணாய்வு செய்யும் தொகுதியில் அரசாங்கஞ்சாரா நிபுணர்களைச் சேர்ப்பதற்கு உட்கருதப்படுமாயின், ஏற்றுமதிசெய்யும் நாட்டின் குழுமங்களுக்கும் அதிகாரிகளுக்கும் அவ்வாறு அறிவிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய அரசாங்கஞ்சாரா நிபுணர்கள், இச்சட்டத்தின் 80 ஆம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்ட அந்தரங்கத் தன்மைத் தேவைப்பாடுகளின் மீறுகைக்காகத் தண்டனைகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

3. விஜயமானது இறுதியாக அட்டவணைப்படுத்தப்படுமுன்னர் ஏற்றுமதிசெய்யும் நாடுகளிலுள்ள சம்பந்தப்பட்ட குழுமங்களின் வெளிப்படையான உடன்பாட்டைப் பெறுவது நியம வழக்கமாதல் வேண்டும்.

4. சம்பந்தப்பட்ட குழுமங்களின் உடன்பாடு பெறப்பட்டவுடன், பணிப்பாளர் தலைமையதிபதி, விஜயம் செய்யப்படவேண்டிய குழுமங்களின் பெயர்களையும் முகவரிகளையும் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட தேதிகளையும் ஏற்றுமதிசெய்யும் நாட்டின் அதிகாரிகளுக்கு அறிவித்தல் வேண்டும்.

5. விஜயம் செய்யப்படுமுன்னர் சம்பந்தப்பட்ட குழுமங்களுக்குப் பணிப்பாளர் தலைமையதிபதி போதிய முன்னறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

6. வினாக்கொத்தை விளக்குவதற்கான விஜயங்கள், ஏற்றுமதி செய்யும் குழுமமொன்றின் வேண்டுகோளின்பேரில் மட்டுமே செய்யப்படுதல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி, சம்பந்தப்பட்ட நாட்டினது அரசாங்கத்தின் பிரதிகளுக்கு அறிவித்திருப்பின் மட்டுமே அத்துடன் அவர்கள் அவ்விஜயத்துக்கு ஆட்சேபனை தெரிவித்திருந்தாலொழிய மட்டுமே அத்தகையவொரு விஜயம் செய்யப்படலாம்.

7. ஸ்தலத்திலான நுண்ணாய்வின் பிரதான நோக்கம் வழங்கப்பட்ட தகவலைச் சரிபார்ப்பதற்காக அல்லது மேலதிக விபரங்களைப் பெறுவதற்காக உள்ளதனால், குழுமமானது முரணாக உடன்பட்டு ஏற்றுமதிசெய்யும் நாட்டின் அரசாங்கத்துக்கு எதிர்பார்க்கப்பட்ட விஜயம் பற்றிப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அறிவிக்கப்பட்டு அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்படாதிருந்தாலொழிய, வினாக்கொத்துக்கான மறுமொழி பெறப்பட்ட பின்னர் அது நிறைவேற்றப்படுதல் வேண்டும்; மேலும்,

சரிபார்க்கப்படவேண்டிய தகவலின் பொதுத்தன்மை பற்றியும் வழங்கப்பட வேண்டிய ஏதேனும் மேலதிகத் தகவல் பற்றியும் சம்பந்தப்பட்ட குழுமங்களுக்கு விஜயத்துக்குமுன்னர் அறிவித்தல், நியம வழக்கமாகவிருத்தல் வேண்டும்; ஆனால், இது பெறப்பட்ட தகவலின் நோக்கில் மேலதிக விபரங்களை வழங்குமாறு ஸ்தலத்தில் வைத்து வேண்டுகோள்கள் விடுக்கப்படுவதனைத் தடுத்தலாகாது.

8. ஏற்றுமதிசெய்யும் நாடுகளின் அதிகாரிகளினால் அல்லது குழுமங்களினால் கேட்கப்பட்டவையும் வெற்றிகரமான ஸ்தலத்திலான நுண்ணாய்வுக்கு அவசியமானவையுமான கேள்விகளுக்கு அல்லது வினாக்களுக்கு இயன்றபோதெல்லாம், விஜயம் செய்யப்படுவதற்குமுன்னர் பதிலளிக்கப்படுதல் வேண்டும்.

**மூன்றாம் அட்டவணை** (பிரிவு 65(2)(ஆ))

**செயற்படத்தகா மானியங்கள்**

1. கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவினால், அல்லது அத்தகைய ஆட்கள் குழுவுடன் ஓர் ஒப்பந்த அடிப்படையின்மீது எவையேனும் உயர்கல்வி அல்லது ஆராய்ச்சித் தாபனங்களினால் நடாத்தப்படும் ஆராய்ச்சிச் செயற்பாடுகளுக்கான உதவி–

(அ) கைத்தொழில் ஆராய்ச்சிக்கான ஆகுசெலவுகளின் எழுபத்தைந்து சதவீதத்துக்கு அல்லது போட்டா போட்டிக்கு முன்னரான அபிவிருத்திச் செயற்பாட்டுக்கான ஆகுசெலவுகளின் ஐம்பது சதவீதத்துக்கு அதிகமாகவிராததை மேவுமிடத்து அவ்வுதவி; அத்துடன்

(ஆ) (i) ஆராய்ச்சிச் செயற்பாட்டில் புறநீங்கலாகத் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆராய்ச்சியாளர்கள், தொழில்நுட்பவியலர் மற்றும் வேறு ஆதாரப்படுத்துகின்ற பணியாட்டொகுதி என்போருக்கான ஆகுசெலவை;

(ii) ஆராய்ச்சிச் செயற்பாட்டுக்காகப் புறநீங்கலாக வும் நிரந்தரமாகவும் பயன்படுத்தப்பட்டவையும் வர்த்தக அடிப்படையில் கையுதிர்க்கப்பட்டவையு மான கருவிகள், சாதனம், காணி மற்றும் கட்டிடங்கள் என்பவற்றுக்கான ஆகுசெலவை;

(iii) விலைக்கெடுத்துப்பெற்ற ஆராய்ச்சி, தொழினுட்ப அறிவு, ஆக்கவுரிமைகள் முதலியவையுட்பட, ஆராய்ச்சிச் செயற்பாட்டுக்காகப் புறநீங்கலாகப் பயன்படுத்தப்பட்ட ஆலோசனை மற்றும் சமமான சேவைகளுக்கான ஆகுசெலவை;

(iv) ஆராய்ச்சிச் செயற்பாட்டின் விளைவாக நேரடி யாக உறப்பட்ட மேலதிக மேந்தலை ஆகுசெலவு களை; அத்துடன்

(v) ஆராய்ச்சிச் செயற்பாட்டின் விளைவாக நேரடி யாக உறப்பட்ட பொருட்கள், வழங்கல்கள் மற்றும் அவைபோன்ற வேறுநடத்தல் ஆகுசெலவுகளை;

மேவுவதற்குப் புறநீங்கலாக வரையறுக்கப்படுமிடத்து, அவ்வுதவி.

2. பிராந்திய அபிவிருத்தின் பொதுவானவொரு கட்டுக்கோப்பைப் பின்பற்றிக் கொடுக்கப்பட்டதும், தகவுடைய பிராந்தியங்களினுள் (66 ஆம் பிரிவின் கருத்துக்குட்பட) சிறப்புத் திறனுடைய தாகவிராததுமான உறுப்புநாடொன்றின் ஆள்புலத்தினுள் அனுகூலம் குறைந்த பிராந்தியங்களுக்கான உதவி; ஆயின் –

(அ) ஒவ்வோர் அனுகூலம் குறைந்த பிராந்தியமும், வரையறுக்கப்படற்பாலதான பொருளாதார மற்றும் நிருவாக அடையாளத்துடன் தெளிவாகப் பெயர் குறிக்கப்பட்ட அணித்தாயுள்ள புவியியற்சார் பிரதேசமொன்றாக இருத்தல் வேண்டும்;

(ஆ) பிராந்தியத்தின் சிரமங்கள் தற்காலிகச் சூழ்நிலைகளை விடக் கூடுதலானவற்றிலிருந்து எழுகின்றனவெனச் சுட்டிக்காட்டி, நடுநிலையான, புறப்பொருள்சார் நடுநிலையான, புறப்பொருள்சார் கட்டளைக்கற்களின் அடிப்படையில் பிராந்தியமானது, அனுகூலம் குறைந்த தாகக் கருதப்படுதல் வேண்டும். கட்டளைக்கற்களானவை, சரிபார்க்கப்படுவதற்கு இயன்றனவாக விருக்கும்வகையில், சட்டம், ஒழுங்குவிதி அல்லது வேறு அலுவலகமுறையான ஆவணம் என்பனவற்றில் தெளிவாக எடுத்துக்கூறப்படு தல் வேண்டும்.

(இ) கட்டளைக்கற்களானவை, ஆகக்குறைந்தது பின்வரும் காரணிகளுள் ஒன்றையாவது அடிப்படையாகக் கொள்ளவேண்டிய பொருளாதார அபிவிருத்தி பற்றிய அளவீடொன்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(i) ஒன்றில் ஓர் ஆள்வீத வருமானத்தின் அல்லது ஓர் ஆள்வீத குடும்ப வருமானத்தின் ஒன்று, அல்லது சம்பந்தப்பட்ட ஆள்புலத்துக்குச் சராசரி யின் எண்பத்தைந்து சதவீதத்துக்கு மேற்படா திருக்கவேண்டிய ஓர் ஆள்வீத மொத்த உள்நாட்டு உற்பத்திப்பொருள்;

(ii) சம்பந்த ஆள்புலத்துக்கு ஆகக்குறைந்தது சராசரி யின் நூற்றிப்பத்துச் சதவீதமாகவாவது இருக்க வேண்டிய தொழிலின்மைவீதம்; (மூன்றாண்டு காலப்பகுதியொன்றின்போது அளவிடப்பட்டவாறு; எவ்வாறாயினும், அத்தகைய அளவீடு தொகுப்பான தொன்றாகவிருக்கலாமென்பதுடன், ஏனைய காரணிகளையும் உள்ளடக்கலாம்.)

3. குழுமங்களின்மீது கூடுதலான தடைகளையும் நிதிச்சுமையையும் விளைவிக்கின்ற, ஏதேனும் சட்டத்தினால் அத்துடன் அல்லது எவையேனும் ஒழுங்குவிதிகளினால் விதிக்கப்பட்ட புதிய சூழல் தேவைப்பாடுகளுக்கு ஏலவேயுள்ள வசதிகளை இசைவாக்குவதனை மேம்படுத்துவதற்கான உதவி; ஆயின் அவ்வுதவியானது-

(அ) ஒருதடவை ஏற்படுகின்ற மீள நிகழாத வழிமுறை யொன்றாக இருக்கின்றது;

(ஆ) இசைவாக்கற் செலவின் இருபது சதவீதத்துக்கு வரையறுக்கப்படுகின்றது;

(இ) குழுமங்களினால் முழுமையாக ஏற்கப்படவேண்டிய, உதவப்பட்ட முதலீட்டை மாற்றீடுசெய்து தொழிற் படுத்துவதற்கான ஆகுசெலவை மேவுகின்றதல்ல;

(ஈ) தொல்லைகளையும் மாசுபடுத்தலையும் குழுவொன்று திட்டமிட்டுக் குறைத்தலுக்கு நேரடியாக இணைந் துள்ளதுடன் அதற்கு விகிதாசாரப்படியாகவும் உள்ளது என்பதுடன், எய்தப்படக்கூடிய எவையேனும் தயாரிப்புச் செலவுச் சேமிப்புகளை மேவுகின்றதுமல்ல; அத்துடன்

(உ) புதிய சாதனத்தை அத்துடன் அல்லது உற்பத்திச் செய் முறைகளை ஏற்றுக்கொள்ள முடியுமான எல்லாக் குழுமங்களுக்கும் கிடைக்கக்கூடியதாகவுள்ளது.

பணிப்பாளர் தலைமையதிபதி, இவ்வட்டணையிற் குறித்துரைக்கப்பட்ட செயற்படத்தகா மானியங்களின் ஏதேனும் சரிபார்த்தலுக்காக உள் ஒழுங் கமைப்பின் "மானியங்களும் எதிரீட்டு வழிமுறைகளும் பற்றிய உடன்படிக்கை யைப்" பார்வையிடலாமென்பதுடன், செயற்படத்தகா மானியங்களை அடையாளங்காண்பதில் உவி ஒழுங்கமைப்பின் "மானியங்களும் எதிரீட்டு வழிமுறைகளும் பற்றி குழுவினால்" செய்யப்பட்ட திரிபுகளையும் மற்றவற்றுக் கிடையில் கவனத்திற்கொள்ளலாம்.

**நாலாம் அட்டவணை** (பிரிவு 85)

**தடைசெய்யப்பட்ட மானியங்கள்**

1. ஏற்றுமதி மானியங்களின் எடுத்துக்காட்டு நிரல் -

(அ) ஏற்றுமதி புரிகையின்மீது நேர்வாக, கூட்டிணைக்கப் பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவுக்கு அல்லது கைத்தொழில் ஒன்றுக்கு அரசாங் கங்களினால் நேரடி மானியங்கள் வழங்கப்படுதல்;

(ஆ) ஏற்றுமதிகளின்மீதான மிகையூதியமொன்றை உட்படுத் துகின்ற நாணயம் வைத்திருக்கைத் திட்டங்கள் அல்லது எவையேனும் ஒத்த வழக்கங்கள்;

(இ) உள்நாட்டுக் கப்பலேற்றல்களுக்கானதைவிடக் கூடுதலான அனுகூலம்வாய்ந்த நியதிகளின் மீது, அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட அல்லது ஆணையிடப்பட்ட ஏற்றுமதிக் கப்பலேற்றல்களின் மீது உள்நாட்டுப் போக்குவரத்து மற்றும் கப்பற்கேள்வுக் கட்டணங்கள்;

(ஈ) உள்நாட்டுப் பாவனைக்காகப் பண்டங்களை உற்பத்தி செய்வதில் பயன்படுத்துவதற்காக அதேபோன்ற அல்லது நேரடியாகப் போட்டாபோட்டியுள்ள உற்பத்திப்பொருட்களை அல்லது சேவைகளை வழங்குவதற்காக விடக் கூடுதலான அனுகூலம்வாய்ந்த நியதிகளின் மீது அல்லது நிபந்தனைகளின் மீது (உற்பத்திப் பொருட்களின் விடயத்தில்) அத்தகைய நியதிகள் அல்லது நிபந்தனைகள் அவற்றின் ஏற்றுமதியாளர்களுக்கு உலகச் சந்தைகளில் வர்த்தகரீதியில் கிடைக்கக் கூடியவற்றைவிட அத்தகைய நியதிகள் அல்லது நிபந்தனைகள் கூடுதலான அனுகூலம் வாய்ந்தவையாகவிருப்பின், ஏற்றுமதிசெய்யப்பட்ட பண்டங்களின் உற்பத்தியில் பயன்படுத்துவதற்காக இறக்குமதிசெய்யப்பட்ட அல்லது உள்நாட்டு உற்பத்திப்பொருட்களை அல்லது பண்டங்கள், அரசாங்கத்தினால் ஆணையிடப்பட்ட திட்டங்களினூடாக, ஒன்றில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் அரசாங்கத்தினால் அல்லது எவற்றின் முகவர் நிலையங்களினால் வழங்கப்படுதல்;

(உ) கைத்தொழில் அல்லது வர்த்தகத் தொழில் முயற்சியினால் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படற்பாலனவையான நேரடி வரிகளின் அல்லது சமூகச் சேமநலக் கட்டணங்களின், குறிப்பாக ஏற்றுமதிகளுடன் தொடர்புபட்ட முழுமையான அல்லது பகுதியளவிலான விலக்களிப்பு, குறைப்பு அல்லது பின்போடுதல்;

(ஊ) நேரடியான வரிகள் எந்த அடிப்படையின் மீது இறுக்கப்படுகின்றனவோ அந்த அடிப்படையைக் கணக்கிடுவதில், உள்நாட்டுப் பாவனைக்கான உற்பத்தி தொடர்பில் அளிக்கப்பட்டவற்றுக்கு மேலதிகமாக, ஏற்றுமதிகளுடன் அல்லது ஏற்றுமதி புரிகையுடன் நேரடியாகத் தொடர்புபட்ட விசேட கழிப்பனவுகளை அனுமதித்தல்;

(எ) ஏற்றுமதிசெய்யப்பட்ட உற்பத்திப்பொருட்களின் உற்பத்தியும் பகிர்வும் தொடர்பில் உள்நாட்டுப் பாவனைக்காக விற்பனை செய்யப்படும்போது அதே போன்ற உற்பத்திப்பொருட்களின் உற்பத்தியும் பகிர்வும் தொடர்பில் அறவிடப்பட்டவற்றுக்கு விஞ்சுதலான நேரடியானவையல்லாத வரிகளுக்கான விலக்களிப்பு அல்லது குறைப்பு;

(ஏ) உள்நாட்டுப் பாவனைக்காக விற்பனை செய்யப்படும் போது அதேபோன்ற உற்பத்திப்பொருட்களை உற்பத்திசெய்வதில் பயன்படுத்தப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகள் மீதான அதேபோன்ற முதற்கட்ட படிப்படியாக ஒன்றுதிரண்ட நேரடியானவையல்லாத வரிகளின் விலக்களிப்புக்கு, குறைப்புக்கு அல்லது பின்போடுகைக்கு விஞ்சுதலாகவுள்ள ஏற்றுமதி செய்யப்பட்ட உற்பத்திப்பொருட்களின் உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகள் மீதான முதற்கட்ட படிப்படியாக ஒன்றுதிரண்ட நேரடியானவையல்லாத வரிகளுக்கான விலக்களிப்பு, குறைப்பு அல்லது பின்போடுகை:

ஆயின், முதற்கட்ட படிப்படியாக ஒன்றுதிரண்ட நேரடியானவையல்லாத வரிகள், ஏற்றுமதி செய்யப் பட்ட உற்பத்திப்பொருளின் உற்பத்தியில் பாவனை செய்யப்பட்ட உள்ளீடுகளின் மீது அறவிடப்பட்டால் (விரயத்துக்கான வழமையான கழிப்புக்கு ஏற்பாடு செய்து) உள்நாட்டுப் பாவனைக்காக விற்பனை செய்யப்படும்போது அதேபோன்ற உற்பத்திப்பொருட் களின் மீது விபரிக்கப்படாதபோதுங்கூட, குறைக் கப்படாதபோதுங்கூட அல்லது பின்போடப்படாதுள்ள போதுங்கூட, விலக்களிக்கப்படலாம், குறைக்கப்படலாம் அல்லது பின்போடப்படலாம். இப்பந்தியின் ஏற்பாடு கள், இவ்வட்டணையின் 2 ஆம் விடயத்திற் குறிப்பீடு செய்யப்பட்ட "உற்பத்திச் செய்முறையில் உள்ளீடுகளின் பாவனை மீதான வழிகாட்டு நெறிகளுக்கு இணங்கப்" பொருள் கோடப்படுதல் வேண்டும்.

(ஐ) (விரயத்துக்கான வழமையான கழிப்புக்குக்கு ஏற்பாடு செய்து), ஏற்றுமதிசெய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் உற்பத்தியில் பாவனை செய்யப்படும் இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளின்மீது அறவிடப்பட்டவற்றுக்கு விஞ்சுதலாக இறக்குமதிக் கட்டணங்களின் தொகைக் கழிப்பினது குறைப்பு:

ஆயின், குறிப்பிட்ட விடயங்களில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழு, இரண்டாண்டுகளை விஞ்சாத நியாயமான காலப்பகுதி யினுள் இறக்குமதி மற்றும் நேரொத்த ஏற்றுமதித் தொழிற்பாடுகள் ஆகிய இரண்டும் நடைபெற்றால், இவ்வேற்பாட்டிலிருந்து நன்மைபெறுவதற்கென, இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளுக்குச் சமமான மற்றும் அவற்றையொத்த அதே தரத்தையும் பண்பு களையும் கொண்ட உள்நாட்டுச் சந்தை உள்ளீடுகளின் ஓரளவை அவற்றுக்குப் பதிலீடாகப் பயன்படுத்தலாம். இப்பந்தியின் ஏற்பாடுகள், அட்டவணையின் 2 ஆம் விடயத்திற் குறித்துரைக்கப்பட்ட ''உற்பத்திச் செய்முறையில் உள்ளீடுகளின் பாவனைமீதான வழிபாட்டுநெறிகளுக்கும்,'' இவ்வட்டவணையின் 3 ஆம் விடயத்திற் குறித்துரைக்கப்பட்ட ''ஏற்றுமதி மானியங் களாகப் பதிலீட்டுத்தொகைக் கழிப்பு முறைமைகளைத் தீர்மானித்தலிலான வழிகாட்டு நெறிகளுக்கும்'' இணங்கப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஒ) நிகழ்ச்சித்திட்டங்களின் நீண்டகாலத் தொழிற்பாட்டுச் செலவுகளையும் நட்டங்களையும் மேவுவதற்குப் போதிய தற்றனவான கட்டுப்பண வீதங்களில் ஏற்றுமதிக்கடன் உத்தரவாதத்தை அல்லது காப்புறுதி நிகழ்ச்சித் திட்டங் களை, ஏற்றுமதி செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களின் அல்லது செலாவணி ஆபத்து நிகழ்ச்சித்திட்டங்களின் ஆகுசெலவிலான அதிகரிப்புகளுக்கெதிரான உத்தர வாத நிகழ்ச்சித்திட்டங்களுக்கான காப்புறுதியை அரசாங்கங்கள் அல்லது அரசாங்கத்தினாற் கட்டுப் படுத்தப்பட்ட விசேட நிறுவனங்கள் வழங்குதல்;

(ஓ) *ஏற்றுமதிக்கடன் நியதிகள் என்ற துறையில் முக்கிய மானவோர் அனுகூலத்தைப் பெறுவதற்கு அவை பயன்படுத்துகின்ற அளவுக்கு, அவ்வாறு ஈடுபடுத் தப்பட்ட நிதிகளுக்காக (அதே முதிர்வைக்கொண்ட நிதிகளையும் மற்றும் ஏனைய கடன் நியதிகளையும் பெறுவதற்கென அத்துடன் ஏற்றுமதிக் கடனைப் போன்று அதே நாணயத்தில் குறித்துக்காட்டப் பட்டனவான நிதிகளையும் பெறுவதற்கென சர்வதேச மூலதனச் சந்தைகளில் அவர்கள் கடன்பெற்றால் அவர்கள் செலுத்தவேண்டிய), அவர்கள் உண்மை யாகச் செலுத்தவேண்டியவற்றுக்குக் குறைவான வீதங்களிலான ஏற்றுமதி கடன்களை அரசாங்கங்கள் (அல்லது அரசாங்கங்களினாற் கட்டுப்படுத்தப்படும் அத்துடன்) அல்லது அரசாங்கங்களின் அதிகாரத்தின் கீழ் செயலாற்றும் விசேட நிறுவனங்கள் அளித்தல் அல்லது கடன்களைப் பெறுவதில் ஏற்றுமதியாளர்களினால் அல்லது நிதி நிறுவனங்களினால் உறப்படும் செலவுகள் எல்லாவற்றையும் அல்லது பாகம் அவர்களினாற் கொடுப்பனவு செய்யப்படுதல்:*

*ஆயின், 1979 ஆம் ஆண்டு சனவரி 1 அன்றுள்ளவாறு உவிஒ "மானியங்கள் மற்றும் எதிரீட்டு வழி முறைகள் மீதான உடன்படிக்கைக்கு" ஆகக்குறைந்தது பன்னிரெண்டு மூல உறுப்பு நாடுகளேனும் திறத்தவர் களாகவுள்ள அலுவலக முறையான ஏற்றுமதிக் கடன்கள் பற்றிய சர்வதேச பொறுப்பேற்பொன்றுக்கு உறுப்பு நாடொன்று (அல்லது அந்த மூல உறுப்புநாடுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அடுத்துறும் பொறுப்பேற் பொன்று) திறத்தவராகவிருப்பின், அல்லது வழக்கத்தில் உறுப்பு நாடொன்று இயைபான பொறுப்பேற்பின் வட்டி வீதங்களின் ஏற்பாடுகளை ஏற்புடையவாக்கின், அவ் வேற்பாடுகளுக்கு இயையவுள்ள ஏற்றுமதிக் கடன் வழக்கொன்று, உவிஒ "மானியங்கள் மற்றும் எதிரீட்டு வழிமுறைகள் மீதான உடன்படிக்கையினால்" தடை செய்யப்பட்ட ஏற்றுமதியொன்றாகக் கருதப்படுதலாகாது; அத்துடன்*

(ஔ) 1994 ஆம் ஆண்டின் சுவிபொ உடன்படிக்கையின் XVI ஆம் உறுப்புரையின் கருத்தில், ஏற்றுமதி மானிய மொன்றாக அமைகின்ற பகிரங்கக் கணக்கின் மீதான வேறேதேனும் பொறுப்பு.

2\. உற்பத்திச் செய்முறையில் உள்ளீடுகளின் பாவனை பற்றிய வழிகாட்டுநெறிகள் –

(1) (விரயத்துக்கான வழமையான கழிப்பனவுக்கான ஏற்பாடுசெய்து), ஏற்றுமதிசெய்யப்பட்ட உற்பத்திப் பொருளின் உற்பத்தியில் பாவனை செய்யப்படுகின்ற உள்ளீடுகளின்மீது அறவிடப்பட்ட முதற்கட்ட படிப்படியாக ஒன்றுதிரண்ட நேரடியானவையல்லாத வரிகளின் விலக்களிப்பு, குறைப்பு அல்லது பின் போடுகை என்பனவற்றை நேரடியாகவல்லாத வரித் தள்ளுபடித் திட்டங்கள் அனுமதிக்கப்படலாம்.

(2) இதேபோன்று, (விரயத்துக்கான வழமையான கழிப் பனவுக்கான ஏற்பாடு செய்து), ஏற்றுமதிசெய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் உற்பத்தியில் பாவனை செய்யப்படுகின்ற உள்ளீடுகளில் அறவிடப்பட்ட இறக்குமதிக் கட்டணங்களின் குறைப்புக்கு அல்லது தொகைக்கழிப்புக்குத் தொகைக்கழிப்புத் திட்டங்கள் அனுமதியளிக்கலாம்.

(3) இவ்வட்டவணையில் 1 ஆம் விடயத்திற் குறித்துரைக்கப் பட்ட ஏற்றுமதி மானியங்கள் பற்றிய எடுத்துக்காட்டு கைசார் நிரல், பந்திகள், (ஏ) மற்றும் (ஐ) என்பவற்றில் "ஏற்றுமதி செய்யப்பட்ட உற்பத்திப்பொருளின் உற்பத்தியில் பாவனை செய்யப்படுகின்ற உள்ளீடுகள்" என்ற பதத்தைக் குறிப்பீடு செய்கின்றது, (ஏ) என்னும் பந்தியைப் பின்பற்றி, ஏற்றுமதி செய்யப்படும் உற்பத்திப் பொருளின் உற்பத்தியில் பாவனை செய்யப்படுகின்ற உள்ளீடுகளின் மீது உண்மையாக அறவிடப்பட்ட அத்தகைய வரிகளின் தொகைக்கு விஞ்சுதலாக முதற்கட்ட படிப்படியாக ஒன்றுதிரண்ட நேரடியானவையல்லாத வரிகள் விலைக் களிப்பு, குறைப்பு அல்லது பின்போடுகை என்பவற்றை அவை விளைவிக்கும் அளவுவரை, நேரடியானவையல் லாத வரித்தள்ளுபடித் திட்டங்கள் ஏற்றுமதி மானிய

*மொன்றாக அமையலாம். (ஐ) என்னும் பந்தியைப் பின்பற்றி, ஏற்றுமதி செய்யப்பட்ட உற்பத்திப் பொருளின் உற்பத்தியில் பாவனை செய்யப்படுகின்ற உள்ளீடுகளின் மீது உண்மையாக அறவிடப்படுபவற்றுக்கு விஞ்சுதலாக இறக்குமதிக் கட்டணங்களின் குறைப்பொன்றை அல்லது தொகைக்கழிப்பொன்றை அவை, விளைவிக்கும் அளவுவரை தொகைக் கழிப்புத் திட்டங்கள் ஏற்றுமதி மானியமொன்றாக அமையலாம். ஏற்றுமதி செய்யப்படும் உற்பத்திப்பொருளின் உற்பத்தியில் உள்ளீடுகளைப் பாவனை செய்தல் தொடர்பான முடிவெடுப்புகளில் விரயத்துக்கான வழமையான கழிப்புச் செய்யப்படவேண்டுமென இருபந்திகளும் விதிக்கின்றன, தோதானவிடத்து, மதிப்பீட்டுக்கும் பந்தி (ஐ) ஏற்பாடு செய்கின்றது.*

*(4)* *இச்சட்டத்தின் II ஆம் பாகத்தின்கீழ் நடாத்தப்பட்ட எதிரீட்டுத் தீர்வை நுண்ணாய்வொன்றின் பாகமாக ஏற்றுமதிசெய்யப்படும் உற்பத்திப்பொருளின் உற்பத்தியில் உள்ளீடுகள் பாவனை செய்யப்படுகின்றனவா வென்பதைப் பரிசோதனை செய்வதில், பணிப்பாளர் தலைமையதிபதி, பின்வரும் அடிப்படையின் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்:-*

*(அ)* *ஏற்றுமதி செய்யப்படும் உற்பத்திப்பொருளின் உற்பத்தியில் பாவனைசெய்யப்பட்ட உள்ளீடுகளின்மீதான நேரடியானவையல்லாத வரிகளின் இறக்குமதிக் கட்டணங்களின் விஞ்சுதலான மிகைத் தள்ளுபடி அல்லது விஞ்சுதலான தொகைக்கழிப்புக் காரணமாக, நேரடியானதல்லாத வரித்தள்ளுபடி திட்டமொன்று அல்லது தொகைக் கழிப்புத் திட்டமொன்று மானியமொன்றை அளிக்கின்றதெனச் சார்த்தப்படுமிடத்து பணிப்பாளர் தலைமையதிபதி, ஏற்றுமதி செய்யப்படும் உற்பத்திப்பொருளின் உற்பத்தியில் எந்த உள்ளீடுகள் பாவனை செய்யப்படுகின்றனவென்றும் எந்தத் தொகைகளிலென்றும் உறுதிப்படுத்துவதற்கு ஏற்றுமதிசெய்யும் உறுப்பு நாட்டின் அரசாங்கத்துக்கு முறைமையொன்று*

அல்லது நடவடிக்கை முறையொன்று உள்ளதாவென்பதையும், ஏற்புடையதாக்குகின்றதாவென்பதையும் முதற்கண் தீர்மானித்தல் வேண்டும். அத்தகைய முறைமையொன்று அல்லது நடவடிக்கைமுறையொன்று ஏற்புடையதாக்கப்படுகின்றதெனத் தீர்மானிக்கப்படுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, அப்போது, அது நியாயமானதா, உட்கருதப்பட்ட நோக்கத்துக்காகப் பயனுள்ளதா மற்றும் ஏற்றுமதி நாட்டிலுள்ள பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வர்த்தக வழங்கல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளதாவென்பதையும் கண்டறியும் நோக்கத்துக்காக அம்முறைமையை அல்லது நடவடிக்கைமுறைமையை பரிசோதனை செய்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின் 33 ஆம் பிரிவுக்கிணங்க, தகவலைச் சரிபார்ப்பதற்கென அல்லது முறைமை அல்லது நடவடிக்கைமுறை பயனுள்ள வகையில் ஏற்புடையதாக்கப்படுகின்றதெனத் தம்மைத் திருப்திப்படுத்திக் கொள்வதற்கெனக் குறித்தசில செயல்முறைக்குகந்த பரீட்சிப்புகளை நிறைவேற்றலாம்.

(ஆ) அத்தகைய முறைமை அல்லது நடவடிக்கை முறை எதுவும் இல்லாதவிடத்து, அது நியாயமற்றதாக இருக்குமிடத்து, அல்லது அது தொடங்கப்பட்டு நியாயமானதெனக் கருதப்படுமிடத்து, ஆனால் ஏற்புடையதாக்கப்படவில்லை அல்லது பயனுள்ளவகையில் ஏற்புடையதாக்கப்படவில்லை எனக் காணப்படுமிடத்து, விஞ்சுதலான கொடுப்பனவொன்று ஏற்பட்டதாவென்பதைத் தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில், உட்படுத்தப்பட்ட உண்மையான உள்ளீடுகளை அடிப்படையாகக் கொண்டு, ஏற்றுமதிசெய்யும் உறுப்பு நாட்டினாலான மேலதிகப் பரிசோதனையொன்று நிறைவேற்றப்பட வேண்டியிருக்கும் பணிப்பாளர் தலைமையதிபதி அவசியமானதெனக் கருதினால், (அ) என்னும் பந்திக்கிணங்க மேலதிகப் பரிசோதனையொன்று நிறைவேற்றப்படலாம்.

(இ) உள்ளீடுகள் உற்பத்திச் செய்முறையில் பயன் படுத்தப்பட்டு ஏற்றுமதிசெய்யப்படும் உற்பத்திப் பொருளில் உருப்படியாகக் காணப்பட்டால், பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய உள்ளீடுகளை உருப்படியான ரீதியில் சேர்க்கப் பட்டனவாகக்கொள்ளுதல் வேண்டும். உள்ளீ டொன்று எந்த வடிவத்தில் உற்பத்திச் செய் முறையினுட் பிரவேசித்ததோ அதேவடிவத்தில் இறுதி உற்பத்திப்பொருளில் காணப்பட வேண்டியதல்லவென உறுப்பு நாடுகள் கவனிக் கின்றன.

(ஈ) ஏற்றுமதிசெய்யப்படும் உற்பத்திப் பொருளின் உற்பத்தியில் பாவனைசெய்யப்பட்ட குறிப்பிட்ட உள்ளீட்டின் தொகையைத் தீர்மானிக்கையில், ‘‘விரயத்துக்கான வழமையான கழிப்பு’’ கணக்குக் கெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்த கைய விரயம், ஏற்றுமதிசெய்யப்பட்ட உற்பத்திப் பொருளின் உற்பத்தியில் பாவனை செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுதலும் வேண்டும். “விரயம்” என்னும் பதம், உற்பத்திச் செய்முறையில் சுயேச்சையான பணியைப் புரியாததும், (திறமையின்மைகள் போன்ற காரணங்களுக்காக) ஏற்றுமதி செய்யப்பட்ட உற்பத்திப் பொருளின் உற்பத்தியில் பாவனை செய்யப்படாததும் அதே தயாரிப்பாளரினால் அறவிடப்படாததும், பயன் படுத்தப்படாததும் அல்லது விற்பனைசெய்யப் படாததுமான கொடுக்கப்பட்டவோர் உள்ளீட்டின் அப்பகுதியைக் குறிப்பீடுசெய்கின்றது.

(உ) விரயத்துக்காகக் கோரப்பட்ட கழிப்பு ‘‘வழமை யானதா’’ என்பது பற்றி பணிப்பாளர் தலைமை யதிபதியின் தீர்மானம், தோதானவாறு, உற் பத்திச் செய்முறையையும், ஏற்றுமதிநாட்டில் கைத்தொழிலின் சராசரி அனுபவத்தையும், ஏனைய தொழினுட்பக் காரணிகளையும் கணக் குக்கெடுத்தல் வேண்டும். ஏற்றுமதிசெய்கின்ற உறுப்பு நாட்டிலுள்ள அதிகாரிகள், அத்தகைய வொரு தொகையானது வரி அல்லது தீர்வைத்

தள்ளுபடியில் அல்லது குறைப்பில் சேர்க்கப்படுவதற்கு உட்கருதப்படும்போது, விரயத்தின் தொகையை நியாயமானமுறையில் கணக்கிட்டுள்ளனராவென்பதை நுண்ணாய்வு செய்கின்ற அதிகாரி மனதிற்கொள்ளுதல் வேண்டும்.

3. ஏற்றுமதி மானியங்களாகப் பதிலீட்டுத் தொகைக் கழிப்பு முறைமைகள் பற்றிய தீர்மானத்திலான வழிகாட்டுநெறிகள்.

(1) தொகைக்கழிப்பு முறைமைகளானவை, இன்னோர் உற்பத்திப்பொருளின் உற்பத்திச் செய்முறையில் பாவனைசெய்யப்படுகின்ற உள்ளீடுகளின்மீது இந்தப் பின்னைய உற்பத்திப்பொருளின் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்டவற்றுக்காகப் பதிலீடுசெய்யப்பட்ட அதே தரத்தையும் பண்புகளையும் கொண்டுள்ள உள்நாட்டு உள்ளீடுகளைக் கொண்டுள்ளவிடத்தும், இறக்குமதிக் கட்டணங்களின் மீளளிப்புக்காக அல்லது தொகைக் கழிப்புக்காக அனுமதியளிக்கலாம். இவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஏற்றுமதி மானியங்கள் பற்றிய எடுத்துக்காட்டு சார் நிரலின் (ஐ) என்னும் பந்தியினைப் பின்பற்றி, பதிலீட்டுத் தொகைக்கழிப்பு முறைமைகள், எந்த இறக்குமதிசெய்யப்பட்ட உள்ளீடுகளின்மீது தொடக்கத்தில் அறவிடப்பட்ட இறக்குமதிக் கட்டணங்களின் விஞ்சுதலான தொகைக்கழிப்பொன்றை அவை விளைவிக்கும் அளவுவரை பதிலீட்டுத் தொகைக் கழிப்புமுறைமைகள் ஏற்றுமதி மானியமொன்றாக அமையலாம்.

(2) இச்சட்டத்தின் II ஆம் பாகத்தின்கீழ் நடாத்தப்பட்ட எதிரீட்டுத்தீர்வை நுண்ணாய்வொன்றின் பாகமாக ஏதேனும் பதிலீட்டுத் தொகைக்கழிப்பு முறைமையைப் பரிசோதனைசெய்வதில்,பணிப்பாளர் தலைமையதிபதி பின்வரும் அடிப்படையின்மீது மேற்கொண்டு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்:-

(அ) அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஏற்றுமதி மானியங்கள் பற்றிய எடுத்துக்காட்டுசார் நிரலின் (ஐ) என்னும் பந்தி, ஏற்றுமதிக்காக உற்பத்திப்

பொருளொன்றின் உற்பத்திகளில் இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளுக்காக உள்நாட்டுச் சந்தை உள்ளீடுகள் பதிலீடுசெய்யப்படலாமென விதிக்கின்றது; ஆயின், அத்தகைய உள்ளீடுகள், பதிலீடுசெய்யப்படுகின்ற இறக்குமதிசெய்யப்பட்ட உள்ளீடுகளுக்கு அளவில் சமமாகவிருத்தலும், அவற்றைப்போன்ற அதே தரத்தையும் பண்பு களையும் உடையனவாகவிருத்தலும் வேண்டும். சரிபார்த்தல் முறைமையொன்றின் அல்லது நடவடிக்கைமுறையின் உளதாந்தன்மை முக்கிய மானது, ஏனெனில் எந்த அளவினதான உள்ளீடு களுக்காக தொகைக்கழிப்புக் கோரப்படு கின்றதோ எத்தகையதுமான வடிவத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட அதேபோன்ற உற்பத்திப் பொருட்களின் அளவை விஞ்சுவதில்லையென் றும் சம்பந்தப்பட்ட இறக்குமதிசெய்யப்பட்ட உள்ளீடுகளின்மீது தொடக்கத்தில் அறவிடப்பட்ட வற்றுக்கு விஞ்சுதலாக இறக்குமதிக் கட்டணங் களின் தொகைக் கழிப்பெதுவும் இல்லை யென்றும், ஏற்றுமதிசெய்கின்ற உறுப்பு நாட்டின் அரசாங்கம் உறுதிப்படுத்துவதனையும் எடுத் துக்காட்டுவதனையும் அது இயலச்செய்கின்றது;

(ஆ) பதிலீட்டுத் தொகைக் கழிப்பு முறைமையொன்று மானியமொன்றை அளிக்கின்றதெனச் சார்த்தப் படுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, ஏற்றுமதிசெய்கின்ற உறுப்புநாட்டின் அரசாங் கம், சரிபார்த்தல் முறைமையொன்றை அல்லது நடவடிக்கைமுறையொன்றை எங்கு வைத்திருந்து ஏற்புடையதாக்குகின்றதென்பதை முதற்கண் தீர் மானிக்க முற்படுதல் வேண்டும். அத்தகைய வொரு முறைமை அல்லது நடவடிக்கைமுறை ஏற்புடையதாக்கப்படுவதாகத் தீர்மானிக்கப்படு மிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி அப்போது, சரிபார்த்தல் நடவடிக்கைமுறைகள் நியாயமானவையா, உட்கருதப்பட்ட நோக்கத்துக் காகப் பயனுள்ளவையா மற்றும் ஏற்றுமதி நாட்டிலுள்ள பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளவையா என்பதைக் கண்டறிவதற்கு அவற்றைப் பரிசோதனைசெய்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின் 33 ஆம் பிரிவுக்கிணங்க, தகவலைச் சரிபார்ப்

பதற்கு அல்லது சரிபார்த்தல் நடவடிக்கை முறைகள் பயனுள்ளவகையில் ஏற்புடையன வாக்கப்படுகின்றன எனத் தம்மைத் திருப்திப் படுத்திக்கொள்வதற்குக் குறித்தசில செயல் முறைக்குகந்த பரீட்சிப்புகளை நிறைவேற்றலாம்;

(இ) சரிபார்த்தல் நடவடிக்கைமுறைகள் எவையும் இல்லாதவிடத்து, அவை நியாயமானவையாக இராதவிடத்து, அல்லது அத்தகைய நடவடிக்கை முறைகள் தொடங்கப்பட்டு நியாயமானவை யாகக் கருதப்படுமிடத்து, ஆனால் உண்மையில் ஏற்புடையனவாக்கப்படுவதில்லை அல்லது பயனுள்ளவகையில் ஏற்புடையனவாக்கப்படு வதில்லை எனக் காணப்படுமிடத்து, மானிய மொன்று இருக்கலாம். அத்தகைய விடயங்களில், விஞ்சுதலான கொடுப்பனவொன்று ஏற்பட்டதா வென்பதைத் தீர்மானிப்பதற்கு உட்படுத்தப் பட்ட உண்மையான கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையில் ஏற்றுமதிசெய்கின்ற உறுப்பு நாட்டினால் மேலதிகப் பரீட்சிப்பொன்று நிறை வேற்றப்படவேண்டியதாகும். பணிப்பாளர் தலைமையதிபதி அவசியமெனக் கருதினால், (ஆ) என்னும் பந்திக்கிணங்க மேலதிகப் பரீட்சிப் பொன்று நிறைவேற்றப்படும்;

(ஈ) அவற்றின்மீது தொகைக்கழிப்புக் கோரப்படும் குறிப்பிட்ட இறக்குமதிக் கப்பலேற்றுதல்களை எந்தப் பதிலீட்டுத் தொகைக்கழிப்பு ஏற்பாட்டின் கீழ் ஏற்றுமதியாளர்கள் தெரிவுசெய்வதற்கு அனுமதியளிக்கப்படுகின்றனரோ அந்தப் பதிலீட்டுத் தொகைக்கழிப்பு ஏற்பாடு உண்மை யானது, தானாகவே ஒரு மானியத்தை, அளிப்ப தாகக் கருதப்படுதலாகாது; அத்துடன்

(உ) இவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஏற்று மதி மானியங்கள் பற்றிய எடுத்துக்காட்டுசார் நிரலின் (ஐ) என்னும் பந்தியின் கருத்தில் இறக்கு மதிக் கட்டணங்களின் விஞ்சுதலான தொகைக் கழிப்பொன்று உண்மையில் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படற்பாலதான வட்டியின் அளவுக்கு, அரசாங்கங்கள் அவற்றின் தொகைக் கழிப்புத் திட்டங்களின்கீழ் மீளளிக்கப்பட்ட எவையேனும் பணங்கள்மீது வட்டி செலுத்திய விடத்து, உள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ளமுடியும்.*